# உதயன்

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

சுடர் 30 கதிர் 153 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 15. செவ்வாய்க்கிழமை 28.04.2015


## வாள்களுடன் கைதான நால்வருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப். 28
சுன்னாகம் நகரில் வாள்களுடன் கைது செய்யப்பட்ட நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு சுன்னாகம் நகரில் இரு குழுவினரிடையே முரண்பாடு ஏற்பட்டு அது குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அதனால் அவ்வழியூடான போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. அங்கு நின்றிருந்தவர்கள் பயங்கர வாள்கள், கொட்டன், போத்தல்களுடன் நின்றிருந்தனர் என்று அந்த இடத்தில் நின்றிருந்தவர்கள் கூறினார்கள்

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சுமார் 7 பேர் வரையில் கைது செய்திருந்ததோடு வாள்களையும் மீட்டிருந்த னர். 2 வாள்கள்,

பக்.02

## "வாள்வெட்டுக் கும்பல்களைச் சிறையிலடையுங்கள்"

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.28
யாழ். குடாநாட்டில் இடம்பெறும் வாள்வெட்டுச் சம்பவங்கள், தாக்குதல்களை நிறுத்த பொலிஸார் மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட சட்ட நிறுவனங்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன்போது யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மீதான தாக்குதல்கள், குற்றஞ்சாட்டுகளுக்கும் அவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

வாள்வெட்டுக் கலாசாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்படுபவர்களுக்குப் பிணை வழங்கக் கூடாது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோரினர்.

பக்.02



## கடவையில் கடந்த காரை மோதிப் பந்தாடியது ரயில்

### சம்பவ இடத்தில் நால்வர் சாவு: இருவர் படுகாயம் கிளிநொச்சி அறிவியல்நகரில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஏப்.28
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேசிய விவசாய கைத்தொழில் அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் உட்பட அவரது குடும்பத்தினர் பயணித்த சொகுசுக் கார் ரயில் கடவையைக் கடக்க முயன்றபோது, ரயில் மோதியது. அதில் முகாமையாளர் உட்பட அவரது குடும்பத்தினர் நால்வர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று பிற்பகல் கிளி நொச்சி அறிவியல் நகரில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து அறிவியல் நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சொகுசுக்கார் அறிவியல் நகரில் உள்ள ரயில் கடவையில் கடக்க முற்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாநோக்கிச் சென்றுகொண்டிருந்தஒருபெட்டியைகொண்ட ரயில்காரை மோதிப் பந்தாடியது.

பக்.02

## '19' மீதான விவாதம் நேற்று ஆரம்பம்

# இன்று வாக்கெடுப்பு

கொழும்பு, ஏப்.28
நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறைமையைத் திருத்தி, ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கட்டுப்படுத்த வகை செய்யும் 19ஆவது அரசமைப்புத் திருத்தம் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் ஆரம்பமானது.

அரசமைப்புத் திருத்தம் மீதான விவாதம் நேற்று சுமுகமாக நடைபெற்றிருந்த நிலையில், இன்றும் விவாதம் தொடரவுள்ளது. விவாதத்தின் முடிவில் திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த காலங்களில் இது குறித்து இலங்கையின் பிரதான கட்சிகளான, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை வலியுறுத்திவந்த போதும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை, தற்போது அதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது."– என்று குறிப்பிட்டார்.

அரசமைப்புத் திருத்தம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

"முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள சில பிரிவுகளை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தேர்தல் நடைபெறும்

பக்.02



## '19'க்கு அனைவரும் ஆதரவு தாருங்கள்

### நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை

கொழும்பு, ஏப். 28
நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் சகலரும் 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்.– இவ்வாறு கோரிக்கை விடுத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்.02

## தேர்தலில் போட்டியிட்டால் வெற்றிதான் – *மஹிந்த*

கொழும்பு, ஏப். 28
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அல்–ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய

பக்.02

## ரயில் கடவை ஊழியர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.28
கிளிநொச்சி, அறிவியல் நகரில் நேற்று இடம்பெற்ற விபத்தை அடுத்து விபத்து நடைபெற்ற ரயில் கடவையில் பணியாற்றிய வயோதிபர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி பொன்னகரைச் சேர்ந்த 65 வயதுடைய இராமையா சுப்பிரமணியம் என்பவரே பொலிஸாரால் நேற்றுமாலை கைது செய்யப்பட்டுள்ளார். (ற–21)

## அல்வாய் கொலை: சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.28
வடமராட்சி அல்வாயில் குடும்பஸ்தர் ஒருவர் பொல்லால் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தலைமையிலான குழு விசாரணைகளை முன்னெடுத்தது. பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்திரகுமார் எனப்படும் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (ற–109)

(விரிவு 4ஆம் பக்கத்தில் )

## "போரால் நலிந்த எமக்கு வீட்டுத் திட்டம் வழங்குக"

### முள்ளிவாய்க்கால் மக்கள் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஏப்.28
பெரும் போர் அழிவுகளில் சிக்கி வசதிகளற்று வாழ்க்கையை நகர்த்தும் எங்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படாது திருப்பப்பட்டமைக்கான காரணங்கள் என்ன?. எமக்கு வீட்டுத் திட்டங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும். – இவ்வாறு கோரி முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

பக்.02

## சொந்த நிலங்களில் வாழ்வதற்காக கடவுளை பிரார்த்தித்த சம்பூர் மக்கள்

திருகோணமலை, ஏப்.28
தமது சொந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், சொந்த நிலங்களில் விரைவில் மீளக் குடியமர வேண்டும் என்று வேண்டி தீபங்கள் ஏற்றி விசேட வழிபாட்டில் ஈடுபட்டனர் சம்பூர் மக்கள்.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அப்போது

பக்.02

# இன்று வாக்கெடுப்பு

சமயங்களில் தேர்தல் ஆணையாளர் விதிக்கும் உத்தரவுகளை மீறும் தனியார் ஊடக நிறுவனகளுக்கு தண்டனைகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய அதிகாரங்கள் இந்தத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவை தற்போது நீக்கப்பட்டுள்ளன."– என்று கூறினார்.

விவாதத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா,

"எமது கட்சியினர் 19 ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்கள் அல்ல. அதில் உள்ளடக்கப்பட்டிருந்த தவறான சரத்துக்களை நீக்குவதற்காகவே போராடினோம்.திருத்தச் சட்டத்தில் ஊடகங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் காணப்பட்ட 28ஆவது உறுப்புரை நீக்கப்பட்டுள்ளது. குறித்த உறுப்புரை ஊடகங்களுக்கு அழுத்தம் பிரயோகிக்கக்கூடிய வகையில் அமைந்திருந்தது. இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டால் நீக்கப்பட்டுள்ளது. அதற்காக ஜனாதிபதிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்."– என்று குறிப்பிட்டார்.

19ஆவது திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சி நேற்று மாலை 8 புதிய யோசனைகளை முன்வைத்துள்ளது. அவற்றைக் கருத்தில் எடுக்குமாறு எதிர்க்கட்சி அரசிடம் கோரிக்கை விடுத்தது. எதிர்க்கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் இந்த யோசனைகளைச் சமர்ப்பித்தார்.

இவை தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி 6 பேர் கொண்ட விசேட குழுவொன்றை நியமித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் ஆலோசனைப்படி எதிர்க்கட்சியின் யோசனைகள் தொடர்பில் இன்று முடிவெடுக்கப்படும் என்று தெரியவருகின்றது.

நேற்று மதியமும், மாலையும் – இருதடவைகள் கட்சித் தலைவர்களின் கூட்டம் நாடாளுமன்றில் நடைபெற்றது. மாலையில் நடைபெற்ற கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. அதில் எதிர்க்கட்சியின் யோசனைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் கூறினார். திருத்தம் மீதான விவாதம் இன்றும் தொடரவுள்ளது. விவாதத்தின் முடிவில் இன்று மாலை திருத்தம் மீதான வாக்கெடுப்பு ஆரம்பமாகவுள்ளது. (ற)

# '19'க்கு அனைவரும் ஆதரவு தாருங்கள்

19ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகியது. அதனைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையிலேயே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

"இந்த வரலாற்று சிறப்புமிக்க திருத்தச் சட்டத்தை நாளை (இன்று) செவ்வாய்க்கிழமை நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி யின் அதீத அதிகாரங்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்தது. 1999 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த அதீத அதிகாரங்களை நீக்க வேண்டும் எனக் கூறியது. இந்த அதிகாரங்களை நீக்குவதாக முன்னர் ஆட்சியில் இருந்த அரசுகள் பலசந்தர்ப்பங்களில் கூறிய போதிலும் அதனை நிறைவேற்றவில்லை."– என்றும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

"முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசும் அதீத அதிகாரங்களை நீக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறியிருந்தது. எனக்கு வாக்களித்த 62 லட்சம் மக்களும், மஹிந்தவுக்கு வாக்களித்த 58 லட்சம் மக்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ரத்து செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்து செய்வது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு. அதனால் நாளை (இன்று) 19 ஆவது திருத்தச் சட்டத்தை கட்சி பேதமின்றி வாக்களித்து நிறைவேற்றி நாட்டு மக்கள் மற்றும் எதிர்கால சந்ததியின் வளமான எதிர்காலத்திற்கு வழியேற்படுத்த வரலாற்று கடமையை செய்ய வேண்டும்."– என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.(ற–5)

## தேர்தலில் போட்டியிட்டால் வெற்றிதான் – *மஹிந்த*

நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவீர்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அதை நான் கூறமாட்டேன், ஆனால், போட்டியிட்டால் நிச்சயம் வெற்றி பெறுவேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் தோற்கடிக்கப்பட்டது ஒரு சதி நடவடிக்கை. தோல்வியடைவது உறுதியானதும் நான் அதிகாரத்தை ஒப்படைக்க முடிவுசெய்துவிட்டேன். ஓரிரு மணித்தியாலங்களுக்குள் அதிகாரத்தைக் கைப்பற்றும் சதித்திட்டம் தீட்டுவது என்பது முடியாத காரியம். இவ்வாறான குற்றச்சாட்டு நகைச்சுவையானது என்றும் தெரிவித்துள்ளார். (ற–5)

## கடவையில் கடந்த காரை மோதிப் பந்தாடியது ரயில்

தீப்தியும் அவரது உறவினர்களும் அறிவியல் நகருக்குச் செல்வதற்காக ரயில் கடவையைக் கடக்க முற்பட்டுள்ளனர். அந்தச் சமயம் ரயில் கடவையில் கடவை உத்தியோகத்தர் எவரும் இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது. கேட் மூடப்படாமல் இருந்ததால் அவர்கள் கடவையைக் கடக்க முற்பட்டுள்ளனர். அப்போது அதி வேகமாக வந்த ரயில் அந்த சொகுசுக் காரை மோதிப் பந்தாடியது. கடவையில் இருந்து சுமார் 50மீற்றர் தூரத்தில் இருந்த மண்பிட்டி மீது கார் தூக்கி வீசப்பட்டது. உள்ளிருந்த தீப்தியும் அவரது மனைவியும் மற்றொருவரும் திக்குத் திக்காகத் தூக்கி வீசப்பட்டனர். அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் அவர்களுடைய பெண் குழந்தையும் மேலும் இருவரும் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களால் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சில மணி நேரங்களில் குழந்தையும் சாவடைந்துள்ளார். மற்றைய இருவருக்கும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி பொலிஸாரும், இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டனர். அங்கு வந்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் ஆகியோர் கடவைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொண்டனர்.(ற–21)

## "போரால் நலிந்த எமக்கு வீட்டுத் திட்டம் வழங்குக"

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கிழக்குக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 200 வரையான பொதுமக்கள் திரண்டு போராட்டத்தை நடத்தினர்.

"எங்களுக்கென வந்த 107 வீட்டுத் திட்டங்கள் எமக்கு கிடைக்காது திருப்பப்பட்டுள்ளன. அவை எதற்காக திருப்பப்பட்டன?. எமக்கு உடனடியாக வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட வேண்டும்."– என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரினர்.

"போரால் அதிகம் பாதிக்கப்பட்ட கிராமத்தில் நாம் பெரும் துன்பங்களுக்கு மத்தியில் வாழ்கின்றோம். எங்களுக்குத் தற்காலிக வீட்டுத் திட்டம் கூட வழங்கப்படவில்லை. பெறும் தறப்பாள் வீடுகளில் வசிக்கின்றோம். மழை வெள்ளம் அதற்குள் புகும். எமது பிள்ளைகள் தினமும் வெள்ளத்தில் மிதக்கின்றனர். வெள்ளத்துடன் பாம்புகள், விசஜந்துகள் குடிசைக்குள் வருகின்றன. பெரும் துன்பத்தின் மத்தியில் வாழ்க்கையை நகர்த்தும் எங்களுக்கு தயவு செய்து வீட்டுத் திட்டத்தை ஒதுக்குங்கள்."– என்று அவர்கள் கோரினர்.

இந்தப் போராட்டத்தில் முள்ளிவாய்க்கால் கிழக்கு மூன்று கிராமங்களை சேர்ந்த மக்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் முல்லைத்தீவு அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர். மனுவைப் பெற்றுக் கொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்த அரச அதிபர்,

நான் இப்போதுதான் இங்கு புதிதாகப் பதவியேற்றுள்ளேன். முள்ளிவாய்க்கால் மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் ஏன் கிடைக்கவில்லை என்பது தொடர்பில் ஆராய சிறிது கால அவகாசம் தேவைப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த அனைத்து மக்களுக்கும் வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன. இந்திய வீடமைப்பு திட்டம் இல்லாது போனாலும் தற்போது புதிய வீடமைப்பு திட்டம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. முள்ளிவாய்க்கால் மக்களுடைய சமூக கட்டுமானங்கள் தொடர்பாக நிதி நிறுவனங்களிடம் பேசுகின்றேன்.– என்று தெரிவித்தார்.(ற–21)

## சொந்த நிலங்களுக்காக கடவுளை பிரார்த்தித்த சம்பூர் மக்கள்

இராணுவ தளபதியாகவிருந்த ஜெனரல் சரத் பொன்சேகா மீது விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தினர். அதன் எதிரொலியாக அன்றிரவு கிழக்கு மகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டிலிருந்த சம்பூர் பிரதேசத்தில் கடும் விமான தாக்குதல்கள் இடம் பெற்றிருந்தன. அதனால் மறுநாள் சம்பூர் பிரதேச மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடந்த அரசின் பதவிக் காலத்தில் மக்களின் குடியிருப்பு காணிகளும், வயல் நிலங்களும் அரச முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், கடற்படை உயர் பாதுகாப்பு பிரதேசம் மற்றும் இந்திய அனல் மின் உற்பத்தி நிலையம் என அடையாளமிடப்பட்டு விசேட வர்த்தமானி பிரகடனம் மூலம் சுவீகரிக்கப்பட்டது. அதனால் தமது சொந்த நிலங்களில் குடியமர முடியாத சம்பூர் மக்கள் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களிலேயே பெரும் சிரமத்தின் மத்தியில் தமது வாழ்க்கையை நகர்த்துகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் புதிய அரசு பதவியேற்ற பின்னர் அந்த மக்களின் காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டது. முதல் தொகுதியில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் என அடையாளமிடப்பட்ட 818 ஏக்கர் விடுவிக்கப்பட்டு, மீள்குடியமர்வு நடைபெறும் என்று மீள்குடியேற்ற அமைச்சால் உறுதி வழங்கப்பட்டிருந்த போதும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நேற்று சம்பூர் மக்கள் தமது சொந்த நிலங்கள் வேண்டும் என்று வழிபாட்டில் ஈடுபட்டனர். அவர்கள் தற்பொழுது தற்காலிகமாக தங்கியுள்ள கிளிவெட்டி , கட்டப்பறிச்சான் உட்பட இடைத்தங்கல் முகாம்களுக்கு முன்பாக தீபங்களை ஏற்றி வழிபட்டனர். இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரனும் கலந்து கொண்டார். (ற)

## வாள்களுடன் கைதான நால்வருக்கு மறியல்

3 கொட்டன்கள், 2 எரிகுண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களைக் கைப்பற்றியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர். அபாயகரமான ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4ஆம் பக்கத்தில் மேலதிக விவரம்) (ற–4)

# "வாள்வெட்டுக் கும்பல்களைச் சிறையிலடையுங்கள்"

பல்கலைக்கழக துணைவேந்தர் அலுவலகத்தை அண்மித்து ஒன்றுகூடிய மாணவர்கள் பல்கலைக்கழக பிரதான வாயில்வரை ஊர்வலமாகச் சென்று அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"யாழ்ப்பாணக் கலாசாரம் எங்கே போகின்றது?", "சமூக விரோதக் குழுக்களை இல்லாதொழி, மனிதாபிமானம் எங்கே?", "பல்கலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்", "எம் இனத்துக்குக் கோஷ்டி மோதலும் கொலைகளும் வேண்டுமா?", "குற்றங்களைத் தீர விசாரி! அப்பாவிகள் தண்டிக்கப்படுவது ஏன்?"– போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். அங்கு மாணவ பிரதிநிதிகள் கருத்துக்களை முன்வைத்தனர்.

"கடந்த காலங்களில் பல்வேறு அசம்பாவிதங்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிகழ்த்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்துக்கு முன்பாகத் தங்கியிருந்த 2 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றையது கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக 2 ஆம் வருட மாணவர்கள் 3 பேர் வாள் வெட்டுக்கு உள்ளாகியுள்ளனர். அந்த மாணவர்களில் வவுனியாவைச் சேர்ந்த என்.முரளிதரன் (வயது 23) என்பவரின் வலது கை மணிக்கட்டுடன் துண்டாடப்பட்டு விட்டது. அவ்வாறு துண்டாடப்பட்ட கையை அவருடன் பயணித்த மாணவர் ஒருவர் எடுத்து அதனைத் தலைக்கவசத்தில் வைத்துக்கொண்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. கை துண்டாடப்பட்ட மாணவனும் அவனது துண்டாடப்பட்ட கையும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு கை பொருத்தப்பட்டாலும் அது இயங்குமளவுக்கு வெற்றியளிக்குமா என்பது தெரியவில்லை. மற்றைய மாணவனான முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ்.ஜெபர்சன் (வயது 23) உடல் முழுதும் வெட்டுக் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார். கே.றஜீவன் (வயது 23) என்பவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இரவு நேரம் நடந்த அந்தச் சம்பவத்தில் யார் அவர்களை வெட்டினார்கள் என்பது தெரியவில்லை."– என்று அவர்கள் தெரிவித்தனர்.

"அந்தச் செயற்பாடுகளைக் கண்டித்து நாளை புதன்கிழமைவரை கலைப்பீட கற்றல் செயற்பாடுகளை மாணவர்கள் முழுமையாகப் புறக்கணிப்பதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று எமது போராட்டத்தினூடாக நாம் கோருகின்றோம்."– என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது பொதுமக்களின் கைகளில் இல்லை. எனவே சம்பந்தப்பட்ட தரப்பான பொலிஸார், சட்ட நிறுவனங்கள் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். கைது செய்யப்படுபவர்கள் இலகுவாக பிணையில் வரக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. எனவே அதற்கு இறுக்கமான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கிறோம். வாள்வெட்டுக் குற்றவாளிகளுக்கு அதி உச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது.

இத்தகைய செயற்பாடுகள் சில வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு எதிராக இதுவரை எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை என்ன? நாசகாரச் செயற்பாடுகளில் ஈடுபடும் கும்பல்களைப் பொலிஸார் கைது செய்கின்றபோதும், அவை வளர்ந்து வருகின்றமைக்கு என்ன காரணம்? அதற்கான பின்னூட்டல் என்ன?"– என்று அவர்கள் கேள்வி எழுப்பினர். (ற–4)

## வலி.வடக்கில் மீள்குடியமர்ந்தோருக்கு உபகரணத் தொகுதி

யாழ்ப்பாணம், ஏப். 28

வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு, உபகரணத் தொகுதிகள் பிரதேச செயலகத்தால் வழங்கப்படுகின்றது.

வலி.வடக்கில் அண்மையில் 8 கிராம சேவையாளர் பிரிவுகள் வரையில் விடுவிக்கப்பட்டன. அந்தப் பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்வதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதுவரையில் 589 குடும்பங்கள் இவ்வாறு பதிவு செய்துள்ளன. இருப்பினும் இரண்டு குடும்பங்கள் மாத்திரமே மீளக்குடியமர்ந்துள்ளன.

எஞ்சிய குடும்பங்கள் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பற்றைக்காடாக உள்ள பகுதிகளை வெட்டி துப்புரவு செய்கின்றனர். இந்தநிலையில் கடந்த சில தினங்களாக துப்புரவு பணிகளில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு மாத்திரம் மண்வெட்டி, கத்தி உள்ளிட்ட துப்புரவு செய்வதற்கு தேவையான உபகரணப் பொதி பிரதேச செயலகத்தால்வழங்கப்பட்டுவருகின்றது.(ற-5)

# ஆந்திராவில் தமிழர் கொல்லப்பட்டமையை கண்டித்து தீர்மானம்

## வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் நிறைவேற்றப்படவுள்ளது

யாழ்ப்பாணம், ஏப். 28

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில், 20 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று இந்திய மத்திய அரசைக் கோரும்தீர்மானம் வடக்கு மாகாண சபையின் 28 ஆவது அமர்வில் நிறைவேற்றப்படவுள்ளது.

வடக்குமாகாணசபையின்28ஆவது கூட்டத் தொடர் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில், செம்மரக் காட்டினுள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட எமது தமிழக உறவுகளுக்கு, வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சார்பாக இந்த உயரிய சபையினூடாக ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் சாவுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும், அவர்களைக் கொலை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் இந்திய மத்திய அரசைக் கோரும் பிரேரணை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுங்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தனால் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைக்கான கண்டனத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட உறுப்பினர் எம்.பீ.நடராஜ் சபைக்கு சமர்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற-5)

## அமைச்சின் செயலாளர்களின் இடமாற்றம் நேற்றுமுதல் நடைமுறை

யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களது இடமாற்றம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புதிய அமைச்சுச் செயலகங்களில், அமைச்சுச் செயலாளர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் செயலாளர்களுக்கான இடமாற்றம் இந்த மாத ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட திட்டமிடப்பட்டது. அதற்கான இடமாற்றப் பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது. இறுதி நேரத்தில் அந்த இடமாற்றம் வடக்கு மாகாண ஆளுநரினால் நிறுத்தி வைக்கப்பட்டது.

பின்னர், இடமாற்றப் பட்டியல் எந்த மாற்றமும் இன்றி, 27 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, இடமாற்றம் நேற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய இ.ரவீந்திரன் கல்வி அமைச்சின் செயலாளராகவும் – கல்வி அமைச்சின் செயலாளராக பணிபுரிந்த எஸ்.சத்தியசீலன் மீன்பிடி அமைச்சின் செயலாளராகவும் – மீன்பிடி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய இ.வரதீஸ்வரன் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகவும் – உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய சி.திருவாகரன் சுகாதார அமைச்சின் செயலாளராகவும் நேற்று முதல் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (ற-5)

## வளலாய் கிராமப் பகுதிக்கு மின் வழங்குவதில் தாமதம்

### வீதிகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படாததால்

யாழ்ப்பாணம், ஏப். 28

வலி.கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, வளலாய் கிராமத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பிரதேச சபைக்குரிய வீதிகளை அடையாளம் காண்பதில் சிரமங்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மின்விநியோக நடவடிக்கைகளும் தாமதமடைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

25 வருடங்களாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த வளலாய் கிராமம், அண்மையில் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் மக்கள் துப்புரவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் இந்த மக்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. பிரதான வீதி தவிர்ந்த ஏனைய வீதிகளும் இதுவரையில் அடையாளப்படுத்தப்படவில்லை. இதனால் மக்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பிரேதச சபைக்குச் சொந்தமான வீதிகளை அடையாளப்படுத்தித் தருமாறு, வலி.கிழக்கு பிரதேச செயலகத்தால்,பிரதேசசபைக்குகோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. பிரதேச சபை தனது வீதிகளை அடையாளப்படுத்தியபின்னரேமின்சாரவசதிகளையும் வழங்க முடியும். இதுவரையில் பிரதேச சபை வீதிகளை அடையாளப்படுத்திக் கொடுக்கவில்லை.

இது தொடர்பில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் நா.குமணனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 25 வருடங்களாக பாவனையில்லாமல் இருந்த பிரதேசம். சபையில் தற்போதுள்ள ஆவணங்களிலும் மேற்படி பிரதேச வீதிகள் தொடர்பில் எதுவுமில்லை. வீதிகளை அடையாளப்படுத்துவதற்கு, கோயில்களோ அல்லது வேறு அடையாளங்களையோ தான் ஆவணங்களில் குறிப்பிட்டிருப்பார்கள். இவை எதுவுமில்லாமல் பற்றைக்காடாக குறித்த பிரதேசம் இருப்பதாலேயே வீதிகளை அடையாளம் காண்பதில் சிரமம் நிலவுகின்றது.

நிலஅளவைத்திணைக்களத்தினரிடமிருந்து வரைபடங்கள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது. விரைவில் வீதிகளை அடையாளப்படுத்துவோம் – என்றார். (ற-5)



தீவகப் பிரதேசத்தில் உள்ள எழுவைதீவு கிராமத்தின் ஒரேயொரு கடற்பாதையாக காணப்படும் பாலம் பெரிதும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் இந்தப் பாலத்தின் வழியாகவே பயணம் மேற்கொள்கின்றனர். அவர்கள் பாலத்தின் மீது பயணிக்கும்போது பெரும் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர். பாலத்தைப் புனரமைத்துத் தரு மாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் கவலையுடன் கூறுகின்றனர். (ற-9)

## தீ விபத்தில் 10 கடைகள் நாசம்

கல்முனை, ஏப்.27

கல்முனை பொது சந்தைக் கட்டடத் தொகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 10இற்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன. கல்முனை மாநகர சபை மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மின் ஒழுக்கு காரணமாகவே தீ பரவி இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(ற)

## வடக்கில் மணல் அகழ பொருத்தமான நிறுவனத்தை அனுமதிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 28


யாழ்ப்பாணத்தில் மணல் அகழ்வு மேற்கொள்வதற்கு, பொருத்தமான நிறுவனத்தை தெரிவு செய்யுமாறு கோரி, புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகத்துக்கு, மருதங்கேணி பிரதேச செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது மணல் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் குறிப்பாக, யாழ்ப்பாணத்திலுள்ள மணலின் அளவை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில், இயந்திரங்கள் மூலமான மணல் அகழ்வுக்குரிய அனுமதி வழங்க முடியாது என்பது இந்த ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது.

சாதாரணமாக, கடகங்களில் மணல் அள்ளி ஏற்றுவதற்கான அனுமதியே வழங்க முடியும். இவ்வாறு மணல் அகழ்வினை மேற்கொள்வதற்கு, இரண்டு நிறுவனங்களைப் பரிந்துரைத்து புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச சபை மற்றும் வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றையே பரிந்துரைத்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகம் பொருத்தமான நிறுவனத்தைதேர்வு செய்து விரைவில் அனுமதி வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## "19" க்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள்



யாழ்ப்பாணம், ஏப்.28

நாடாளுமன்றத்தில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக மக்கள் விடுதலைமுன்னணியினரால் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'19ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதை தடுக்கும் சூழ்ச்சியை தோற்கடிப்போம்' என தலைப்பில் அவை ஒட்டப்பட்டிருந்தன.

19ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு, ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவுவழங்கும்நிலையில்முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வருகின்றனர். (ற)

## யன்னல் பிரித்து நுழைந்த திருடர்கள் நாலரை பவுண் நகையுடன் தப்பினர்

### உறக்கத்திலிருந்து விழித்த வீட்டினரையும் தாக்கிவிட்டு

நெல்லியடி, ஏப்.28

வடமராட்சி கரணவாயில் உள்ள வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் யன்னல் கம்பியை பிரித்து உள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டார் மீது தாக்குதல் நடத்தியதுடன் நான்கரை பவுண் நகைகளையும் வீட்டில் இருந்த சுமார் 36 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகியிருக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டினர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் வீட்டின் யன்னல் கம்பியை பிரித்து உள் நுழைந்தவர்கள் வீட்டினை சல்லடை போட்டு தேடுதல் நடத்தியுள்ளனர். வீட்டில் இருந்த சில பொருள்களை எடுத்த பின்னர் வீட்டில் உறக்கத்தில் இருந்த ஒருவரின் சங்கிலியை அறுக்க முயன்ற போது விழிப்படைந்த அவர் கூக்குரலிட்டுள்ளார். அதையடுத்து ஏனையோரும் விழிப்படைந்து மின் விளக்கை ஒளிர விட முயன்றிருக்கின்றனர்.

சுதாகரித்து கொண்ட திருடர்கள் மின் விளக்குகளை அடித்து நொருக்கியதுடன் வீட்டார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கத்தி முனையில் அச்சுறுத்திய திருடர்கள் வீட்டில் நான்கரை பவுண் நகைகளையும் வீட்டில் இருந்த சுமார் 36 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-109, 108)

# மானிப்பாய் இந்துவின் கண்ணாடிகளை உடைத்த பிரபல பாடசாலை மாணவர்கள்

## கைது செய்த பொலிஸார் கடும் எச்சரிக்கையுடன் விடுவித்தனர்

யாழ்ப்பாணம், ஏப்.28

மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர் விடுதியின் கண்ணாடிகளை கல் வீசி உடைத்த குற்றச்சாட்டில் யாழ். நகரில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றின் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ். நகரிலுள்ள குறித்த கல்லூரி மாணவர்கள் சிலர் 'படி' ரக வாகனம் ஒன்றில் சென்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் குழப்பம் ஏற்படுத்தினர் என்றும், அவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் மாணவர்களின் விடுதிக்கு கற்கள் வீசி கண்ணாடிகளை உடைத்துவிட்டுத் தப்பியோடினர் என்றும் கூறப்படுகிறது.

அதனை அவதானித்த ஊர் மக்களும், மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களும் சேர்ந்து, கல் வீசித் தாக்குதல் நடத்திய குறித்த மாணவர்களைத் துரத்திச் சென்று கல்லுண்டாய் பகுதியில் வைத்துப் படி வாகனத்துடன் பிடித்து மானிப்பாய் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 மாணவர்கள் தாம்மால் கைது செய்யப்பட்டு, பின்னர் எச்சரித்து விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ-4,86)

## சேதனப் பசளைக்கான கழிவு சேகரிப்பு தொட்டிகள்




யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் சேதனப் பசளை தயாரிப்புத் திட்டத்தின் கீழ் குருநகர் பிரதேசத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மக்களுக்கு அதற்கான கழிவு சேகரிப்பு தொட்டிகள் வழங்கப்பட்டன.

யாழ்.மாநகராட்சி மன்றமும், உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து இந்த சேதன பசளையை தயாரிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பான கலந்துரையாடலும் அதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று யூயிலி மகப்பேற்று நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. குருநகர் பிரதேசத்தில் சென்.செபஸ்ரியர் வீதி மற்றும் டேவிட் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்களுக்கு பசளை தயாரிப்புக்கான கழிவு சேகரிப்புத் தொட்டிகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டம் தற்போது பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தமது வீட்டு கழிவுளை இந்த தொட்டியில் சேகரித்து அத்னை உக்க வைத்து சேதனப் பசளையாக்க வேண்டும். இது வெற்றியளிக்கும் பட்சத்தில் அந்தத் திட்டம் விரைவுபடுத்தப்படும் என்று மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-17)

# பொல்லால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் கொலை

## அல்வாயில் கொடூரச் சம்பவம்

நெல்லியடி, ஏப். 28

வடமராட்சி அல்வாய், நக்கீரன் வீதியில் கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டுக் கோர மாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். சின்னத்தம்பி திருச்செல்வம் (வயது– 44) என்பவரே கொல்லப்பட்டவராவார். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருச்செல்வம் அவரது சகோதரி வீட்டுக்குச் சென்ற சமயம் அவரை வழிமறித்த இனந்தெரியாதோர் பொல்லால் அவரைத் தாக்கினர் என்று கூறப்படுகின்றது. தாக்குதலால் படுகாயமடைந்த அவர் உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும் அவர் முன்னரே உயிரிழந்துவிட்டமை வைத்தியசாலையில் உறுதிப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தலைமை யிலான பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டது. சிலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. விசாரணையின் அடிப்படையில் சிலரைத் தேடிவருகின்றோம்.– என்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் கூறினார்.

நீண்டகாலப் பகை காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர். இந்தச் சம்பவத்தை அடுத்து, அந்தப் பகுதி பெரும் பதற்றத்துக்குள்ளாகி யது. அன்றைய தினம் இரவு முதல் அந்தப் பகுதியில் பொலிஸார் குவிக் கப்பட்டுள்ளனர் என்றும்– தேடுதல்கள் நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவரின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் நடந்தவுடன் வெளியான தகவல்கள் குறித்த குடும்பஸ்தர் வாள்வெட்டுக் காரணமாக உயிரிழந்தார் என்று தெரிவித்தன. ஆயினும் குறித்த குடும்பஸ்தர் பொல்லால் அடித்தே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகள் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று நடைபெற்றது. அதன்போது கொலைக் குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று கோரி பொதுமக்கள் கவனவீர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

திக்கம் நாவலடி சந்தியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கொலைக் கும்பல் நீண்டகாலமாக சுதந்திரமாக இயங்கிவருகின்றது , இவர்களை பொலிஸார் இதுவரை கைது செய்யவில்லை, அப்பாவிகளை கொலைசெய்யும் இவர்களை பொலிஸார் உடன் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-109)

# இளைஞர்கள் அடாவடியால் சுன்னாகத்தில் பெரும் பதற்றம்

## வாள்கள், பொல்லுகள் கொண்டு இரு தரப்பினர் மோதல்

வலி.வடக்கு, ஏப்.28

சுன்னாகத்தில் இரு குழுக்களுக்கு இடையே நடந்த மோதலால் நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் நகரப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. வாள்கள், பெற்றோல் குண்டுகள், கைக் கோடரிகள் கொண்டு இளைஞர்கள் ஒருவரை ஒருவர் அந்தப் பகுதி எங்கும் துரத்திச் சென்றனர். மக்கள் நடமாட்டம் நிறைந்த நகரப் பகுதி அதனால் பதற்றமானது.

இந்தச் சம்பவத்தை அடுத்து நால்வர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் மீது ஏற்கனவே நீதிமன்றில் வழக்குகள் உள்ளன என்று கூறப்படுகின்றது.

குறித்த இரு இளைஞர் குழுக்களுக்கிடையே நீண்டகாலமாக மோதல்கள் நடந்துவருகின்றன என்று அப்பகுதிப் பொதுமக்கள் கூறுகின்றனர். பொலிஸார் இது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்காது, குறித்த குழுக்களை சமரசப்படுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர் என்றும் மக்கள் விசனிக்கின்றனர்.

மோதலில் ஈடுபட்டவர்கள் வீசிவிட்டுச் சென்ற வாள்கள் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. பொதுமக்கள் கிராம அலுவலர் மூலம் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர் என்றும், பொலிஸார் வந்து அவற்றை மீட்டுச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-86-4)

# வசதிகள் இருந்தும் சேவையாற்ற முடியாத நிலை

## *முல்லை இ.போ.ச. சாலை முகாமையாளர் கவலை*

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு இ.போ.ச. சாலையில் தற்போது போதியளவு பஸ்கள் உள்ளதுடன் தேவையான அளவுக்கு ஆளணி வளங்களும் உள்ளன. ஆனால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் சேவையில் ஈடுபடுவதற்கு நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் போக்குவரத்து சேவையினருக்கு 60 விகிதமும் இ.போ.சவுக்கு 40 விகிதமும் என்னும் நடைமுறையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால் எம்மால் விரிவான சேவையை வழங்க முடியவில்லை. – இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு இ.போ.ச சாலை முகாமையாளர் க.ஶ்ரீநிவாசன்.

தூர இடங்களுக்கான பஸ் சேவையை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும்– சாலையில் பல சாரதிகளும் நடத்துநர்களும் வேலைகளின்றி கையொப்பமிட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

மாவட்டத்தின் உயர் அதிகாரிகள் தே.போ.ஆ குழுவின் தீர்மானத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த உதவவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (ஐ-102)

# பிறப்பு–இறப்பு–விவாகப் பதிவுகளின் பிரதி பெறுவதற்கு பல நடைமுறைகள்; மக்கள் குழப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 28

பிறப்பு – இறப்பு – விவாகப் பதிவுகளின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. ஆயினும், யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான நடைமுறையைப் பின்பற்றுகின்றன. தமது வசதிக்கு ஏற்றால்போல் பிரதேச செயலகங்கள் செயற்படுவதால், நடைமுறையில் என்ன விடயம் இருக்கின்றது என்பதில் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொது மக்களிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் 'உதயன்' பத்திரிகைக்கு கிடைக்கப் பெற்றது. இது தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு உதயன் தீர்மானித்தான். எமது செய்தியாளர் ஒருவர், முதலில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்குச் சென்றார்.

அங்கு பிறப்பு பதிவின் பிரதியைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தார். விண்ணப்பப் படிவத்தில் முத்திரை ஒட்டி, பிரதிக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பிரதேச செயலகத்தில் இருந்த அதிகாரிகள், முத்திரை ஒட்டி இப்போது பிரதிகள் பெற முடியாதுதான், ஆனாலும் பரவாயில்லை கொடுங்கள் என்று விண்ணப்பப் படிவத்தைப் பெற்றார்கள்.

இதன் பின்னர், எமது செய்தியாளர் நல்லூர் பிரதேச செயலகத்துக்குச் சென்றார். அங்கு, யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் செய்ததைப் போன்று முத்திரை ஒட்டி விண்ணப்பத்தை கையளித்துள்ளார். அதற்கு அங்குள்ள அதிகாரிகள், முத்திரை ஒட்டுவது தற்போதைய நடைமுறையில் இல்லை. நீங்கள், பணமாகத்தான் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர்.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில், முத்திரை ஒட்டிக் கொடுக்க ஏற்றுக் கொண்டுள்ளார்களே என்று கேட்ட போது, இல்லை இதுதான் தற்போதைய நடைமுறை என்று பதிலளித்துள்ளனர்.

ஒரே விடயத்தை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கிடையேயும் வேறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவது சரியா?. அதில் எது சரியான முறைமை என்பதை அறியும் நோக்குடன் யாழ்.மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டோம்.

பிறப்பு – இறப்பு – விவாகப் பதிவுகளின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முத்திரைக்குப் பதிலாக பணம் செலுத்த வேண்டும். கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டது. இந்த நடைமுறை கொண்டுவரப்பட்ட ஆரம்ப காலத்தில், அதாவது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில், முத்திரை ஒட்டி விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்வதற்கும், தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்களிலும் முத்திரை ஒட்டி அனுப்பினால் அதனையும் ஏற்றுக் கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேல் கடந்துள்ளது. எனவே சகலரும், பணத்தைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டையே இணைக்க வேண்டும். இதற்குரிய அறிவுறுத்தல் விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணத்தை இலங்கை வங்கியில் அல்லது அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் செலுத்தி விட்டு, அதற்குரிய பற்றுச் சீட்டை மாத்திரம் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பினால் போதுமானது என்று, உதவிப் பதிவாளர் நாயகம் கூறினார். (ஐ-5)

## முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் முதலாவது மாநாடு யாழ்ப்பாணத்தில்



வலி.வடக்கு, ஏப். 27
முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் முதலாவது மாநாடு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள மண்டபத்தில் மருசலின் அன்ரனி தலைமையில் இடம் பெற்றது.

இந்த் நிகழ்வில் விருந்தினர்களாக விவசாய அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பி.கே.சரத் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜீ.ரி. லிங்கநாதன் ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள்.

மங்கள விளக்கை விருந்தினர்கள், கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின .

தமிழ்த் தாய் வாழ்த்தை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவிகள் பாடியதைத் தொடர்ந்து இணுவையூர் குமாரநர்த்தனாலய நிறுவன மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

தலைமை உரையைத் தொடர்ந்து விருந்தினர்கள் உரை இடம் பெற்றது.

தொடர்ந்து கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்தினால் கட்சியின் கொள்கைப் பிரகடனம் வாசித்து வெளிப்படுத்தப்பட்டது. (த-86)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதினப் பேரணி பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஏப். 28
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் மே தினப் பேரணியும் பொதுக் கூட்டமும் எதிர்வரும் முதலாம் திகதி பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

காரைநகர் கணேச வித்தியாலய அதிபர் சிவகுரு இளங்கோ தலைமையில் பிற்பகல் 3.30 மணியளவில் பருத்தித்துறை நடராஜா கலையரங்கம் மேதினப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

கொடியேற்றல், ஈகைச்சுடர் ஏற்றல், அகவணக்கம், வரவேற்புரை, தலைமையுரை, அதிதிகள் உரை என்பன இதில் இடம்பெறும்.

மேதினப் பேரணி பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து ஆரம்பமாகும் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் அடிப்படையில் தமிழ்த் தேசியத்தின் அங்கீகாரத்தையும், தமிழ்த் தொழிலாளர்கள், தமிழ் விவசாயிகள், தமிழ் மீனவர்கள், தமிழ் அரசியல் கைதிகள் என்போரின் விடுதலையையும், காணாமல் போனோர் விவகாரம், மீள்குடியேற்ற விவகாரம் என்பவற்றையும் வென்றெடுக்க அனைவரும் அணி திரள்வோம் என அந்தக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (த)

## தீர்வை நோக்கிய பயணம் நின்றுவிடப் போவதில்லை

### கூறுகிறார் தண்டாயுதபாணி

மட்டக்களப்பு, ஏப். 28
கிழக்கில் நாம் அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்ததன் மூலம் எமது கட்சி எடுத்துக் கொண்டிருக்கின்ற அரசியல் தீர்வை நோக்கிய பயணம் நின்றுவிடப் போவதில்லை. இந்த நாட்டிலே தமிழ் மக்களின் பிரச்சினைகள் எதுவும் அடிப்படையாக இன்னும் தீர்க்கப்படவில்லை. ஆனால், எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் எனக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

மட்டக்களப்பு திருப்பழுகாமம் விபுலாநந்த வித்தியாலயத்தின் 137ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

தற்போதும் கூட தமது சொந்த நிலங்களுக்கு மீண்டும் செல்லமுடியாதவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கின்றார்கள். அவலப்பட்டுப் போயுள்ள எமது மக்களுக்குச் சேவை செய்வதற்காகக் கிழக்கு மாகாணத்தில் தற்போது எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனூடாக எமது மக்களுக்குச் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். கிழக்கில் அமைச்சுப் பெறுப்பக்களை ஏற்றது எமது மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாக ஏற்றுக் கொண்டிருக்கின்றோமே தவிர, எமது அரசியல் பாதையில் எதுவித மாற்றமும் ஏற்பட்டு விடமுடியாது. மிக நீண்டகாலமாக எமது மக்கள் பல துன்பங்களைச் சந்தித்து சிரமப்பட்டுப் போயுள்ளார்கள். ஆனால், தற்போது கிழக்கு மாகாணத்திலே சில வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றைத் தற்போது உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடந்த கால அழிவுகளில் எமது மக்கள் மத்தியில் மிஞ்சியது கல்வி மட்டுமே. எனவே, அக்கல்வியை எமது பிள்ளைகளுக்கு உரிய முறையில் ஊட்ட வேண்டும். இவற்றில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பாடசாலை முறைமையை மேலோங்கச் செய்ய வேண்டும்-என்றார். (த)

# 19 க்கு ஆதரவாக நாடாளுமன்று முன் நேற்று கவனவீர்ப்பு

### சந்திரிக்காவும் பங்கேற்றார்





கொழும்பு, ஏப். 28
19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கோரி சிவில் அமைப்புகள் பல ஒன்றிணைந்து நேற்று நாடாளுமன்றத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தின. நேற்றுக் காலை 9 மணியளவில் ராஜகிரிய சந்திக்கு அருகிலிருந்து பேரணி ஆரம்பிக்கப்பட்டு நாடாளுமன்றச் சுற்றுவட்டம் வரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் பேரணியில் சமூக நீதிக்கான மக்கள் இயக்க அமைப்பின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற விடாது சில சக்திகள் சூழ்ச்சிகளை முன்னெடுக்கும் நிலையில் அந்தச் சூழ்ச்சிகளைத் தோற்கடித்து 19 ஐ நிறைவேற்றுமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

இதேவேளை,

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதால் தான் திட்டமிட்டிருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாகச் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் அறிவித்துள்ளார். (த)

## மேதின பேரணிகளை தவிர்க்கிறார் மஹிந்த

கொழும்பு,ஏப் 28
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடத்தவுள்ள மேதினப் பேரணியிலோ அல்லது தொழிற் சங்கங்கள் இணைந்து புறம்பாக நடத்தவுள்ள மேதினப் பேரணியிலோ கலந்து கொள்வதில்லையெனத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால -முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆகியோரைச் சந்திக்க வைக்க இரு தரப்புக்களையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே கடந்த வாரத்தில் கலந்துரையாடல் இடம் பெற்றது. மஹிந்த சார்பாக அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே இதனைக் கூறியதாகத் தெரியவந்துள்ளது.

தாம் எந்தவொரு மேதினப் பேரணியிலும் கலந்துகொள்வதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருப்பதாக அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினப் பேரணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கொழும்பு ஹைட்பாக் மைதானத்தில் நடக்கவிருப்பதோடு, முன்னாள் ஆளுநர் அலவி மௌலானாவின் தலைமையில் தொழிற்சங்கங்களின் மேதினப் பேரணி கொம்பனித் தெருவிலுள்ள முத்தையா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-22)

# ராணுவத்தின் தலையீட்டால் நல்லிணக்கம் கேள்விக்குறி

### வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஏப். 28
ராணுவ அதிகாரிகளின் அனாவசிய தலையீடுகளினால்தான் இன நல்லிணக்கம் எமது நாட்டில் கேள்விக் குறியாகி வருகின்றது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வைத்திய கலாநிதி சிவமோகனின் ஒருங்கிணைப்பில் யாழ். மருத்துவர் சங்கத்தின் தலைவர் வ.முரளி மற்றும் அங்கத்துவ மருத்துவர்களின் பங்களிப்பில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்று முன்தினம் ஞயிற்றுக்கிழமை விஸ்வமடு தொட்டியடிப் பிரதேசத்தில் நடைபெற்றது. இதன் மூலம் பெரும் எண்ணிக்கையான மக்கள் பயன் அடைந்தனர்.

இதன்போது மருத்துவ முகாம் நடைபெற்ற இடத்தில் படையினரின் பிரசன்னம் காணப்பட்டது. இது குறித்து மாகாண சபை உறுப்பினர் சிவமோகன் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் நாம் ஒரு மருத்துவ முகாம் நடத்தினால் அதில் இராணுவத்தினருக்கு என்ன வேலை?. இது போன்ற ராணுவ அதிகாரிகளின் அநாவசிய தலையீடுகளினால் தான் நாட்டில் தொடர்ந்தும் இன நல்லிணக்கம் கேள்விக்குறியாகி வருகின்றது.

மாற்றம் காண்போம் என்று சொன்னார்கள். ராணுவத்தினரின் மனங்களில் உள்ள பேரினவாதச் சிந்தனையை, தமிழரை அடக்கியாள வேண்டும். என்ற சிந்தனையை, எப்படி மாற்றுவது? ஒட்டு மொத்த ராணுவத்தினரையும் அகற்றி தமிழ் மக்களை தமது நாட்டில் தமது பாட்டில் வாழ விடாதவரையில் இன நல்லிணக்கம் ஒரு கேள்விக்குறியே.

இனியும் ஒரு கோரப் போரின் தாக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாத இன வாதிகள், தமிழினத்தின் சுதந்திர வேட்கையைப் புரிந்து கொள்ளாத அடிப்படை மதவாதிகள் அரசியலில் தாக்கம் செலுத்த முற்படுவது எமது நாட்டின் ஒட்டுமொத்த இன நல்லினக்கத்துக்கும் உதவப் போவதில்லை-என்றார். (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பழைய வீட்டைப் புதுப்பிப்பதற்கும் சிறந்த நாளாகும். உங்களை விட்டுப் பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்வார்கள். மின்சாரம் சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரிவோருக்கு மிகச் சிறப்பான நாளாகும்.

**இடபம்:** கலைத்துறையினர் சார்ந்தவர்களுக்கு சிறப் பான முன்னேற்றம் உண்டு. வேலை நிமித்தமாக அடிக்கடி வெளியூருக்கும் வெளிநாட்டிற்கும் செல்ல வேண்டி வரும்.

**மிதுனம்:** உங்களது உடைமைகளை கவனமுடன் பார்த்துக் கொள்ளவும். செய்கின்ற தொழிலில் கவனமுடன் செய்ய வேண்டும். புதிய தொழில் தொடங்கலாம்.

**கடகம்:** சிலர் நம்பிக்கை உகந்தவர்களாக பழகுவார் கள். வரவுக்குத் தகுந்த செலவை ஏற்படுத்திக் கொள்ளுங் கள். வேலையாள்கள் சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். வழக்கு விடயங்களில் வெற்றி கிடைக்கும்.

**சிங்கம்:** வாகனங்களுக்கு வீண் செலவுகள் ஏற்படலாம். உறவினர்களாலும் தொல்லைகள் வரலாம். வேலை பார்த்துக் கொண்டே உபதொழில் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கும். இடமாற்றம் கிடைக்கும்.

**கன்னி:** முதலீடு இல்லாத புதிய தொழில் தொடங்கு வதற்கும் உங்களுக்கு நண்பர்கள் உதவி செய்வார்கள். தங்களது அலுவலக கணக்கு வழக்குகளை மிகச்சரியாக கையாளுதல் நல்லது.

**துலாம்:** உங்களின் சேமிப்புகளில் கை வைக்க வேண்டி வரலாம். கவனம் தேவை. எனவே அதை முடிந்த வரை தவிர்க்கவும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேறு பாடுகள் மறையும்.

**விருச்சிகம்:** வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு கூடுதல் சுமைகள் வந்து சேரும். வேலையில் எரிச்சல் மற்றும் உங்கள் உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது.

**தனுசு:** சிலருக்கு குழந்தைகளால் அவமானம் ஏற்படலாம். மேற்படிப்பு சம்பந்தமாக வெளியூர் சென்று தங்கி பயிலும் வாய்ப்புக் கிட்டும். பெரியவர்களின் ஆசிர்வாதம் பரிபூரணமாகக் கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் இருப்பார்கள். ஒரே நேரத்தில் பலவிதமான வாய்ப்புகள் வந்து சேரும்போது தகுந்த ஆலோசனைகளை மேற்கொண்டு முடிவுகளை எடுப்பது நல்லது.

**கும்பம்:** பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு செல்வாக்கில் சிறிது சரிவு ஏற்படலாம். அதே வேளையில் பதவியும், பொறுப்பும் வந்து சேரும். வீண் அலைச்சலும், வாக்குவாதமும் அவ்வப்போது வாட்டி வதைக்கும்.

**மீனம்:** உடன்பிறந்தவர்கள் வகையில் நிலவி வந்த சண்டைசச்சரவுகள் நீங்கும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நலம். சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந் தேறும்.

# சொதப்பிய 'விஜய் அவார்ட்ஸ்'

நடப்பு ஆண்டின் 'விஜய் அவார்ட்ஸ்' நிகழ்ச்சி பெரும் சர்ச்சைகளையும், விடை தெரியா கேள்விகளையும் எழுப்பி இருக்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு சென்னையில் இடம்பெற்றது. வரும் வாரங்களில் விஜய் தொலைக்காட்சியில் ஒளி பரப்பாகும்.

நிறைய நிகழ்ச்சிகளில் எங்கள் குடும்பத்துப் பிள்ளை என்று சிவகார்த்திகேயனை முன்னிலைப்படுத்துவது விஜய் தொலைக்காட்சியின் வாடிக்கை. கடந்த ஆண்டு 'விஜய் அவார்ட்ஸில்' சிவகார்த்திகேயன் அழுததை மறுபடியும் மறுபடியும் போட்டு ரிஆர்பி–யை எகிறவைத்தனர். ஆனால், இம்முறை சிவகார்த்திகேயன் பேசியதை அவர்களால் ஒளிபரப்ப முடியாது.

ஏனென்றால், 'இந்த நிகழ்ச்சி அதிகாலை 2 மணி வரை போகும். குடிக்க தண்ணி கூட தரமாட்டார்கள். அடுத்த முறை வரும்போது எல்லாம் புளிச்சோறு, தக்காளி சோறு கட்டிக் கொண்டு வந்துவிடுங்கள்' என்று மேடையில் பேசினார் சிவகார்த்திகேயன்.


எப்போதுமே 'விஜய் அவார்ட்ஸ்' என்றால், சிவகார்த்திகேயன் முதல் ஆளாக வந்து இறுதிவரை இருந்து சிறப்பிப்பார். ஆனால், துல்கர் சல்மானுக்கு சிறந்த புதுமுக நடிகர் விருது கொடுத்து முடித்தவுடன், எங்கு சென்றார் என்று தெரியவில்லை.

இசைஞானி இளையராஜாவுக்கு 'செவாலியர் சிவாஜிகணேசன் விருது' வழங்குவதாக விஜய் தொலைக்காட்சி அழைத்து வந்தது. ஆனால் நிகழ்வில் ஒரு மணி நேரம் மாத்திரமே இருப்பேன் என்ற நிபந்தனையுடன் வந்த அவர், விருதை வாங்காமலேயே சென்று விட்டார்.

எப்போதுமே டிடி தொகுத்து வழங்கும் நிகழ்ச்சியில், அவரே பேசிக் கொண்டிருப்பார். 'விஜய் அவார்ட்ஸ்' நிகழ்ச்சியை கோபிநாத் மற்றும் டிடி தொகுத்து வழங்கினார்கள். அதிலும், ஒரு கட்டத்தில் டிடி என்ன பேசுகிறார் என்பது பலருக்கு புரியவே இல்லை. கே.எஸ்.ரவிகுமார் அதை மேடையிலேயே போட்டு உடைத்தார்.

மேலும், இம் முறை விஜய், கார்த்தி, சூர்யா போன்ற பெரிய நடிகர்கள் யாருமே கலந்து கொள்ளவில்லை. நடிகர்களில் கமல், தனுஷ் ஆகியோர் மட்டுமே கலந்து கொண்டார்கள். ஆர்யா, ஜெயம் ரவி இருவருமே கலந்து கொண்டாலும் பாதியிலேயே வெளியேறி விட்டார்கள். முன்னணி நடிகைகளில் ஹன்சிகா, லட்சுமி மேனன் ஆகியோர் மட்டுமே கலந்து கொண்டார்கள்.

கடந்த ஆண்டு ஷாருக்கான் – விஜய் இணைந்து நடனம், சிவகார்த்திகேயன் அழுதது, விஜய் சேதுபதி – நயன்தாரா காமெடி உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் இருந்தன. இந்தாண்டு கமல் – ஸ்ருதிஹாசன், குஷ்பு – ஹன்சிகா இணைந்து நடனமாடிய சிறு நடனம், சிவகார்த்திகேயன் – துல்கர் சல்மான் விருது கொடுத்தது போன்ற சின்ன விடயங்களைத் தவிர வேறு எந்த ஒரு சுவாரசியமே இல்லாத விழாவாக அமைந்து முடிந்துள்ளது.





# 'செல்பி'க்கு ஒரு அருங்காட்சியகம்

கைத்தொலைபேசி கமராக்களில் தங்களை தாங்களே படம் பிடித்துக் கொள்வது (செல்பி) இன்று ஒரு கலையாகவே மாறிவிட்டது. குறிப்பாக செல்பி படம் எடுப்பதில் பிலிப்பைன்ஸ் நாட்டினர் மிகுந்த மோகம் கொண்டு உள்ளனர்.

இதுபோல் செல்பி படம் எடுத்துக் கொள்பவர்களுக்காக தலைநகர் மணிலாவில் ஓர் அருங்காட்சியகத்தையும் உருவாக்கி இருக்கிறார் கள். செல்பியில் படம் எடுப்பவர்கள் தங்களுடைய ஒளிப்படங் களை இந்த அருங்காட்சியகத்தில் வைத்து அதை பிறருடன் பகிர்ந்து கொள் ளலாம்.

இந்த அருங்காட்சியகத்துக்கு வரும் பார்வையாளர்கள் அங்குள்ள கட்டடங்களில் ஏறி நின்று செல்பி ஒளிப்படங்களையும் எடுத்துக் கொள்ளலாம். இங்குள்ள முப்பரிமாண வகை ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைத் தொடலாம். அவற்றுடன் விளையாடலாம். இதுதான் உலகின் முதல் செல்பி அருங்காட்சியகம் என்று கூறப்படுகிறது.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்....



'டாக்டரும், பேஷன்ட்டும் ஒருத்தரை ஒருத்தர் கட் டிப் பிடிச்சுக்கிட்டு அழு குறாங்களே ஏன்?'

'இரண்டு பேருக்கும் இது தான் முதல் ஆபரேஷ னாம்!'

**கணவன்:** எனக்கு விவா கரத்து வேணும். என் மனைவி ஆறு மாசமா என்னிடம் பேசவில்லை.

**வழக்கறிஞர்:** திரும்பத் திரும்ப நல்லா சிந்துச்சுக் கங்க. அப்படிப்பட்ட மனைவி கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும்.

'என்ன மடம் எங்களுக்கு ஒதுக்கின தொகுதிகள்ல உங்க கட்சி வேட்பாளரை நிற்க வைக்கிறீங்க, இதுதான் கூட்டணி தர்மமா?'

'வார்த்தையைக் கொட்டாதீங்க, எங்க ஆளுங்க நின்னா என்ன? தொகுதி இப்பவும் உங்களதுதான்'

பிச்சைக்காரன் 1: அதோ உண்டியல் குலுக்கிக்கிட்டுப் போறாரே கட்சித் தலை வர். அவரும் நம்மளப் போலத்தான். பிச்சைக்காரன் 2: எப்படி சொல்றே? பிச்சைக்காரன் 1: அவருக்கு வசதி இருந்தும் பிச்சை எடுக்கிறாரு. நாம வசதியில்லாம பிச்சை எடுக்கிறோம்.



வெண்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துட்டுவாகை கிராமத்தில் ஆரம்ப பாடசாலை அமைப் பதற்காக சிரம தானப் பணிகள் அண்மையில் முன்னெடுக் கப்பட்டன. இதன் போது வட மாகாண சபைஉறுப்பினர் எம்.பி.நடராஜ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் உட்பட பொது மக்கள் பலரும் சிரமதானப் பணியை முன் னெடுத்தனர். (வ-402)

# மருத்துவமனைக்கு வருவோர் நகைகளை அணிய வேண்டாம்

## யாழ். போதனா மருத்துவமனை பதில் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ்.போதனா மருத்துவம னைக் குச் சிகிச்சைக்கு வருவோர் நகை கள் அணிந்து வராதீர்கள். பெறு மதியான பொருள்கள், பெருந் தொகைப் பணம் எவற்றையும் கொண்டு வரவேண்டாம் என்று மருத்துவமனை பதில் பணிப்பாளர் மருத்துவர் கே.நந்தகுமாரன் அறி வுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

"யாழ்.போதனா மருத்துவமனை யில் நோயாளிகளின் உடைமை கள் திருடப்படுகின்றன. அவ்வாறு திருடியவர்களில் சிலர் பிடிபட் டுள்ளனர். அவர்கள் பொலிஸா ரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் மாத் திரமன்றி நோயாளர் மருத்துவ விடுதிகளிலும் திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளன. அண்மையில் 24ஆம் விடுதியில் சந்தேகமாக நடமாடிய ஒருவரைப் பரிசோதித்த போது அவரிடமி ருந்து பெறுமதி யான சில கைத்தொலைபேசிகள் மீட்கப் பட்டன. அவை அங்கிருந்த நோயாளர்களுடையவை என்பது தெரியவந்தது.

பழைய வெளிநோயாளர் (ஓ.பீ.டீ) பிரிவிலும் மருத்துவமனை உத்தி யோகத்தர் என்று கூறியும் அவர் கள் அணியும் சீருடை அணிந்தும் சிலர் வயோதிபர்களிடம் நகை களை அபக ரித்துச் சென்றுள்ளனர். எனவே மருத்துவமனைக்கு வரும் போது எவரும் நகைகள் அணிய வேண்டாம். முதிய பெண்மணி ஒருவர் தன்னிடம் நகை இல்லை என்பதால் பக்கத்து வீட்டுக் காரரிடம் சங்கிலியை இரவலாகப் பெற்று மருத்து வமனைக்கு அதனை அணிந்து வந்த தாகவும் அதனை யாரோ திருடி விட் டார்கள் என்றும் நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார். மருத்து வமனைக்கு நீங்கள் சிகிச்சைக் காகவே வருகிறீர்களே தவிர, மகிழ்ச்சியைக் கொண் டாடவோ வேறு தேவைக்கோ வரவில்லை என்பதனை உணர்ந்து கொள் ளுங்கள். மீறி யாராவது அணிந்து வந்துவிட்டால் எந்தக் காரணம் கொண்டும் உங்களுக்கு அறி முகமில்லாதவர்களிடம் நகை களைக் கொடுக்காதீர்கள். முதிய வர்கள் இயன்றளவு உதவிக்கு எவரையாவது அழைத்து வருவது உதவியாக இருக்கும் என்று மேலும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (வ-4)

# விரிவுரையாளர் பற்றாக்குறை கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு

## வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஏப். 28

வவுனியாவில் உள்ள இலங்கை விவசாயக் கல்லூரியில் விரிவு ரையாளர் பற்றாக்குறை நிலவு வதால் விரிவுரைகள் சீராக இடம் பெறுவதில்லை என்று மாணவர்கள் கவலை தெரி விக்கின்றனர்.

இந்தநிலைமையால் கற்கை களைத் தொடர்வதில் பெரிய ளவில் நெருக்கடிகளை எதிர்கொள்வ துடன், பூரணத்துவமான பயிற் சியை நிறைவு செய்யாத மாண வர்களாகவே வெளியேற வேண்டி யுள்ள தாகவும் அந்த மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வவுனியா விவ சாயக் கல்லூரி மாணவர்கள் விடுத் துள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

வவுனியா விவசாயக் கல்லூரி, பேராதனை விவசாய திணைக் களத்தின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வருகின்றது. அரசால் பல்வேறு அபிவிருத்தி நடவ டிக்கைகள் செயற்படுத்தப்படுகின்ற போதிலும், விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்ற போதிலும் தமிழ்மொழி மூலம் விவசாயக் கல்வியைத் தொடரும் தாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் படுவதாகவே உணர்வதாக மாண வர்கள் கூறுகின்றனர்.

அங்கு முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கு சுமார் 20 பாட நெறிகளுக்கான விரிவுரைகளை நிகழ்த்த நிரந்தர நியமனம் பெற்ற நான்கு விரிவுரையாளர்களே உள்ளனர். இந்த நிலையில் இலங்கையில் எங் கும் இல்லாத வகையில் ஒரு விரிவுரை யாளருக்கென குறித்து ஒதுக் கப்படுகின்ற நேரத்துக்கு மேலதி கமாக விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நடத்தப்பட வேண் டிய அசௌகரிய நிலை உருவா கியுள்ளது.

ஏனைய நான்கு விவசாயக் கல்லூரிகளிலும், சிங்கள மூல பாடநெறிகளுக்கு போதிய அள வில் விரிவுரையாளர்கள் உள் ளனர். ஆனால் தமிழ்மொழி மூல மாணவர்களை மாத்திரம் கொண்ட வவுனியா விவசாயக் கல் லூரிக்கு விரிவுரையாளர் களை நியமிப்பதில் பின்னடிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

ஒப்பந்த அடிப்படையில் இணைத் துக் கொள்ளப்பட்ட விரிவுரை யாளர்களால் தொடரப்பட்ட பாடநெறிகள் வேறு விரிவுரை யாளர்களிடம் பாரப்படுத்தப் படுவதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின் றன.

ஒப்பந்த அடிப்படையில் வந்து வெளியேறிய விரிவுரையாளர் களால் மேற்கொள்ளப்பட்ட செய்முறைகளைத் தெளிவாக முடிவு செய்ய முடியாமை, விரி வுரையாளர் மாற்றத்தால் ஏற் படும் உளத்தாக்கத்திற்கு உள்ளா குதல், குறித்த காலப் பகுதியில் பாடநெறியைப் பூர்த்தி செய்ய முடியாமை, போதிய அளவான களப்பயிற்சியைப் பெற முடியா துள்ளமை, தொடர் மதிப்பீட்டு பரீட்சைகள் தொடர்பான சிக் கல்கள் போன்ற பிரச்சினைகளைச் சந்தித்து வருவதாக மாணவர்கள் கூறுகின்றனர்.

பூரண களப் பயிற்சியைப் பெற முடியாது உள்ளதுடன், சீரான, முறையான விரிவுரைகளை எதிர் பார்க்க முடியாதுள்ளது. வருகை நிலை விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும் விரிவுரைகள் கிழமை நாள் களில் இடம்பெறாது, சனி, ஞாயிறு தினங்களிலும், விடுமுறை நாள்களில் இடம் பெறுவதால் விடுமுறைகள் இன் றித் தொடர்ந்து மன விரக்தியுடன் கற்றலைத் தொடர வேண்டியுள் ளது.

அத்துடன் முதலாம் வருடத்தில் தமிழ்மொழி மூலம் கற்கை யைத் தொடர்ந்து தேசிய தொழிற் தகைமை மட்டம் 6 செயற்றிட்டத் துக்கு அமைவாக 2 ஆம் வருடத் தில் ஆங்கில மூலத்தில் கற்கை யைத் தொடரும் 2 ஆம் வருட மாணவர்களின் நிலைமை, விரி வுரையாளர் பற்றாக்குறை, விரிவு ரைகள் இடம்பெறாமை போன்ற பிரச்சினைகளால் மேலும் மோச மடையும் நிலைமைக்குத் தள்ளப் பட்டுள்ளது.

இலங்கை விவசாயக் கல் லூரிகளில் கல்வி கற்கும் மாணவர் களே விவசாய போதனாசிரி யர்களாக வெளிவரும் நிலை யில், வவுனி யாவில் கற்கை யைத் தொடரும் மாணவர்களும் குண்டசா லையில் தமிழ் மொழி மூலம் கல்வியைத் தொட ரும் மாணவர்களுமே இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர் பிரதேசங் களில் கடமையாற்றும் விவசாயப் போதனா சிரியர் களாக நியமனம் பெறு வார் கள். இதன்படி பூரண களப் பயிற்சியை பெறாத மாண வர்களாக வெளியேறும் இந்த நிலைமை வடக்கு, கிழக்கின் எதிர்கால விவ சாயத்தில் பெரியளவில் பின் னடைவுகளை ஏற்படுத்தும் துரதிர்ஷ்ட நிலைமையையே ஏற்படும்.

இதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயக் கல்லூரியில் கல்வி கற்று இன்று ஜனா திபதியாகவுள்ள மைத்தி ரிபால சிறிசேன இந் தப் பிரச் சினை தொடர்பில் கரிச னையுடன் செயற்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# குடாநாட்டில் இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்

கொழும்புத்துறை,ஏப்.28

யாழ்.மறைமாவட்ட இறை தியா னக் குழுவினரின் ஏற்பாட்டில் கொழும்பு உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினரால் சகோ.லலித் பெரேரா தலைமையில் இறை தியான குணமாக்கல் ஆராதனை கள் யாழ். குடாநாட்டில் பல இடங் களிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ். இறை தியான மண்டபத்தி லும், மாலை 5 மணி முதல் 8 மணி வரை செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்திலும் குண மாக்கல் ஆராதனைகள் நடைபெறும்.

மே மாதம் 2 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 12 மணி வரை திரும ணமான தம்பதியினருக்கான ஆரா தனை யாழ்.இறைதியான மண்ட பத்திலும், மாலை 5 மணிக்கு இளவாலை புனித அன்னாள் ஆலய முன்றிலிலும் இடம் பெறும்.

3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை நாரந்தனை புனித பேதுரு பாவிலு ஆலயத்திலும் மாலை 5.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றிலிலும் நடை பெறும்.

4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை குருக்கள், கன் னியர், துறவிகளுக்கான தியான வழிபாடுகள் திருமறைக் கலாமன்ற மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. (வ-135)


**வேலை வாய்ப்பு**

(Airport)கப்பலில் விமானத்தில் வேலை செய்ய விருப்பமா? துறைமுகம் விமானநிலைய வேலைக்கு ஆண்/பெண் உடனடியாக தேவை. உயர் சம்பளத்துடன் (பின்னர் வெளிநாட்டு துறைமுகம் /விமான நிலையங்களில் வேலை)

(59263) (9.3) தொடர்பு: 077 292 6935

**வேலைவாய்ப்பு**

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ஏமாஸ், ரிஸ்பரி, சொக்லட் தொழிற்சாலைகளுக்கு ஆண்/பெண் தேவை. 18-55

35,000 உயர் சம்பளம். இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.

(59262)(4.3.7) 077 292 6468

**வேலைவாய்ப்பு**

துறைமுகம், விமானநிலையத்திற்கு மென்ரக/கனரக சாரதிகள்/கெண்டெய்னர் சாரதிகள்/ சாரதி உதவியாளர்கள் நாடு முழுவதிலும் அனைத்து பிரதேசங்களுக்கும் வேலைக்கு தேவை.

35000- 45000 உயர்ந்த சம்பளம்.

(OT உட்பட விசேட சலுகைகள்)

(59262)(4.3.7) தொடர்பு :077 292 6732

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள JAPAN ISUZU NPHF XXXX இலக்க கூலர் வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 328 6519

(15668) (9.3)

**வீடு வாடகைக்கு**

புங்கன்குளம் வீதி, இலக்க 46நம்பர் வீடு வாடகைக்கு உண்டு.

(59254) (9.3)

தொடர்பு: சோர்ணலிங்கம் 077 344 8863

**வேலைக்கு ஆள்கள் தேவை**

இறால் பண்ணைக்கு தொழினுட்ப உதவியாளர்கள் தேவை

தொடர்புகளுக்கு: 077 464 8741 (59257) (9.3)

**பெயர் மாற்றம்**

தெல்லிப்பளையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பாலகணேசன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை பிரவின் அந்திரே என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

பிரவின் அந்திரே

**கடை வாடகைக்குண்டு**

யாழ் நகரில் கே.கே.எஸ் வீதியில் 40' நீளம் 11' X அகலம் கொண்ட கடை வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 075 204 0446 (59260) (9.3)

**JCB(பைக்கோ) வாடகைக்கு**

குறிப்பு:- போக்குவரத்து கூலி அறவிடப்படமாட்டாது.

தொடர்பு இல.



சுன்னாகம்: 077 7712482

யாழ்ப்பாணம்: 0775932007

இல. 207,
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
K.K.S. றோட், சுன்னாகம்.

## போர் பாதித்த குடும்பங்களுக்கு நல்லின விதைகள் வழங்கல்

வவுனியா, ஏப்.28
வவுனியா பிரஜைகள் குழுவும் நாங்கள் இயங்கமும் இணைந்து கிராமிய மக்களின் சுய உணவுத் தேவையை பூர்த்திசெய்யும் வீட்டுத்திட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நல்லின விதைகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரஜைகள் குழுவின் செட்டிகுளம் பகுதி இணைப்பாளர் எஸ்.றொகான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செட்டிகுளம் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட வறிய நிலையில் உள்ள 80 குடும்பங்களின் வாழ் வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக நல்லின விதைக்கன்றுகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட பிரஜைகள்குழு வின் தலைவர் கி.தேவராஜா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், நாங்கள் அமைப் பின்தலைவர் கோ.ராஜ்குமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (வ-402)

நெஞ்சைவிட்டகலாத

**பிறந்தநாள் நினைவலையுடன்**
**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 27.04.1950 — உதிர்வு 28.04.2010

வைத்திய கலாநிதி அமரர்
**மேரிசொபியா விஸ்வலிங்கம்**

ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறவில்லை எம் துயர்
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறுமோ எம் துயர்
உங்கள் ஆன்ம அமைதிக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திப்போம்.

08, இராசாவின் தோட்டம் லேன்,
யாழ்ப்பாணம்.
(59043)(4.3.6)
உம பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.28
தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் கல் விக் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் பொ.கமல நாத னும் கலந்து கொள்வர். (வ-10)

***

கற்பகபுரம் அ.த.க. பாடசாலையின் கல்விக் கண்காட்சி இன்று பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற வுள்ளது. நிகழ்வுக்கு பிரதமவிருந் தினராக வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜாவும், சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராஜாவும் கலந்து கொள்வர். (வ-402)

## நெடுந்தீவு, வடமராட்சி கிழக்கில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 28
நெடுந்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் யாழ்.மாவட்டச் செயலகத்தினால் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை நெடுந்தீவிலும், 30 ஆம் திகதி வியாழக்கிழமை வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலகத்திலும் இந்த நட மாடும் சேவை நடத்தப்படவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் பல திணைக்களங்களும் பங்கு பற்றவுள்ளன. இதில் கலந்து கொண்டு மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்று மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்துள்ள னர். (ற-5)

### கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் கௌரவ உறுப்பினர் **இராமலிங்கம் இராசதுரை** அவர்களின் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர்/உறுப்பினர்கள்
செயலாளர்/உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
(சி/15667)(4.3.7)

### கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் அபிவி ருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் க.இராகவன் அவர்களின் தந்தையார் **செல்லையா கந்தையா** அவர்கள் 25.04.2015 இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
(சி/15664)(4.3.7)

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

## நிர்வாகிகள் தெரிவு

கரணவாய், ஏப்.28
வடமராட்சி வடக்கு கடற்றொழி லாளார் கூட்டுறவுச் சமாசத் துக்கான புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவுப்பரிசோதகர் எ.கோகுலன் தலைமையில் இடம் பெற்ற நிர்வாகத் தெரிவில் பின்வருவோர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக வ.இ. அருள்தாசு, உப தலைவராக இ.மதியழகன், செயலாளராக வே.விசுவலிங்கம் உப செயலாளராக வ.பரமானந்தராசா ஆகியோரும் உறுப் பினர்களாக மூ.கந்தசாமி, பொ.செந்தில் குமரன், இ.யெயப்பிரதாபன், வே.குலமதி, க.அன் ரனி ஆகி யோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-108)

எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய தந்தை
அமரர் **டாக்டர் கந்தப்பு நடராசா** அவர்களின்
**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணகம் மகிழ்ந்திட 08.01.1929 — விண்ணகம் நெகிழ்ந்திட 28.04.2014



நொந்தார்க்கு நோய் தீர்க்கும்
மாண்பினராய் அவதரித்து
இன்புற்றே இவ்வுலகில்
இணையில்லா வாழ்வு வாழ்ந்து
பந்தமுற மனைமக்கள் உற்றார்
ஊரவர்க்கும் பணி செய்து
பொன்மனத்துச் செம்மலெனும்
பெரும் பேரோடு திகழ்ந்திருந்து
தந்தமுகன் கணபதிமேல் கந்தன்மேல்
அம்மன் மேல் இறுதிவரை
அன்புடனே பரவசமாய் பக்தி கொண்டு
பாடிப்பரவி வழிபட்டு
வெந்து நாம் புலம்பிடவே அமைதியாய்
விண்ணுலகம் நீர் அடைந்து
இன்றோடு ஆண்டொன்று ஆனாலும்
தீராது தந்தையே எம் துயரம்

என்றும் உங்கள் நினைவால் துயருறும்
திருமதி. நடராசா, திரு. திருமதி.உதயகுமார், திரு.திருமதி.ரவிக்குமார், திரு.திருமதி.ஜெயக்குமார், திரு.திருமதி.பாஸ்கரன் (கனடா), திரு.திருமதி.சோமராஜ், பேரப்பிள்ளைகள்

"துவாரகா", மூளாய்.

## அடம்பன் ம. ம.விக்கு ஆசிரியர் விடுதி



மன்னார், ஏப்.28
மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்–அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலையின் ஆசிரியர் விடுதி நேற்று முன்தினம் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டுள்ளது.
குறித்த ஆசிரியர் விடுதியை வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாகத் திறந்து வைத் தனர்.
இதன் போது மடு வலய கல்விப் பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண் டிருந் தனர். (வ–56)

## நெருக்கடியின் மத்தியில் நடைபெற்ற ஆலய வேள்வி

வலி.வடக்கு, ஏப்,28
சுழிபுரம் மேற்கு, குடாக்கனை பேச்சியம்மன் ஆலய வருடாந்த வேள்வி உற்சவம் கடந்த சனிக்கிழமை பகல் சுகாதார திணைக்கள அரச அதிகாரிகளின் பெரும் நெருக்கடியின் மத்தியில் இடம் பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகமும் மற்றும் அந்தப்பகுதி பொது மக்களும் மன விரக்தியுடன் தெரிவித்துள்ளார்கள்.
கடந்த பல வருடங்களாக மிகவும் நேர்த்தியாக நடை பெற்று வந்த குறிப்பிட்ட ஆல யத்தின் வேள்வி கடந்த வாரம் நடைபெற்று முடிந்திருக்க வேண்டும். குறித்த ஆலய வேள்விக்கு எதிராக சங்கானை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் வட்டுக் கோட்டை பொலிஸாரும் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் குறிப்பிட்ட தினத்தில் வேள்வியை நிறை வேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்கள்.
இந்த நடவடிக்கையானது சட்டம் ஒழுங்கைக் கடைப் பிடிப்பது நோக்கம் அல்ல என்றும் இதில் குறிப்பிட்ட சிலர் தமது மதக் கொள்கையை நிலை நாட்டும் முகமாக இவ்வாறான செயல்களை மேற்கொள்வதால் இத்தகைய பாதிப்புக்கள் அண்மைக் காலத்தில் இடம் பெற்று வருவதாகவும் இந்து சமய மக்களும் கூட தெரிவிக்கின்றனர்.
கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவச்சான்றிதழ் பெற்றுச் சென்றதாகவும் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் அதனை ஏற்க மறுத்து சனிக்கிழமை வரும்படி தெரிவிக்கப்பட்டதாகவும் பின்னர் சனிக்கிழமை உரிய மருத்துவச் சான்றிதழ் அலுவலக நேரத்தில் காலை பெறப் பட்ட பின்னர் வேள்வி இடம் பெற்றது.
குறித்த ஆலயப் பகுதியில் சங்கானை சுகாதார மருத்துவ மற்றும் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரியும் சுகாதார பரிசோதகர்களும் சமுகமளித்து கண்காணித்த நிலையில் வேள்வி இடம்பெற்றதுடன் குறிப்பிட்ட வேள்விக்கு கொண்டு வரப்பட்ட கடாக்களை சோதனை செய்ய முடியாது என்று குறிப்பிட்ட அதிகாரிகள் மறுத்து விட்டதாகவும் கவலை யுடன் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–86)

## விசேட கூட்டம்

முள்ளியவளை, ஏப்.28
முள்ளியவளை வித்தியா னந்தக் கல்லூரி தேசிய பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக்கூட்டத்தில் மாணவர் களின் கல்வி வளர்ச்சியின் முன் னேற்றம் தொடர்பான மீளாய்வு, பாடசாலைக்குத் தேவையான பௌதிக வளங்கள் போன்ற விடயங்கள் உள்ள டங்கலான பல முக்கிய விட யங்கள் ஆராயப்படவுள்ளன. எனவே இவற்றின் முக்கியத்தை உணர்ந்து அனைத்துப் பெற்றோரையும் பழைய மாணவர்களையும் நலன் விரும் பிகளையும் கூட் டத்தில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் கு.அரசரட்ணம் கேட்டுக்கொண்டுள் ளார். (வ–102)

**இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்**

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரைச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளை காட்டுதல், ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
077 595 0463

HOTEL LOYUSI, இலக்கம் 584,
வைத்தியசாலை வீதி,
இலங்கை வங்கி அருகில், யாழ்ப்பாணம்.

**காணவில்லை**

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் வல்சராஜ் (வசி) வயது 32 என்ப வர் கடந்த 25.04.2015 சனிக்கிழமை அன்று வீட்டை விட்டு சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை இவ ரைக் கண்டவர்கள் உடனடியாக அறியத்தரவும்.



**மனைவி-வ.தரிசனா**

தொடர்பு: 076 605 1821, 075 447 2732
(592588)(4.3.7)

## நீரிழிவு, ஆஸ்துமா நோய்களால் தினமும் பாதிப்போர் அதிகரிப்பு

### சாவகச்சேரி மருத்துவமனை கிளினிக்குகளின் புள்ளி விவரங்களில் தகவல்

தென்மராட்சி,ஏப்.28
சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் நடத்தப்படும் கிளி னிக்குகளின் விவரப்படி தினம் ஒருவர் நீரிழிவு நோயாலும் தினம் இருவர் ஆஸ்துமா நோயாலும் பொது மருத்துவப் பிரிவிலும் இணையும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.
கடந்த ஜனவரி தொடக்கம் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் நடத்தப்பட்ட கிளினிக்குகளின் புள்ளி விவரங்களின் பிரகாரம் 208 பேர் பொது மருத்துவப் பிரிவிலும், 104 பேர் நீரிழிவு நோயாலும், 91 பேர் ஆஸ்துமா நோயாலும் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டு, புதிதாக இணைக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
முதலாம் கந்தாயத்தில் நடத்தப்பட்ட கிளினிக்குகள் பற்றிய விவரங்கள் மருத்துவமனையால் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்கள் மூலம் இந்த அதிர்ச்சித் தகவல்கள் வெளி யாகி உள்ளன.
மருத்துவமனையில் 24 சிகிச்சைப் பிரிவுகளுக்கான 348 கிளினிக்குகளில் 18 ஆயிரத்து 214 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் 4 ஆயிரத்து 241 நோயாளிகள் புதிதாக இணைந்து கொண்டுள்ளதாக் குறிப்பிடப்பட் டுள்ளது.
மருத்துவமனையில் பொது மருத்து வம், காயமடைந்தோர், காது, மூக்கு, தொண்டை, தோல், குழந்தைகள், மனநோய், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், பெண்கள் நல் வாழ்வு, குடும்பக் கட்டுப்பாடு, போஷாக்கு, கண், சுவாச நோய், பல், புற்று நோய், ஆஸ்துமா, நீரிழிவு, ஊனமுற்றோர் சுகவாழ்வு ஸ்கான், நரம்பியல், பெண்ணோயியல், மூட்டு வாதம் ஆகிய கிளினிக்குகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட் டுள் ளது.
குறிப்பிட்ட காலப்பகுதியில் மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் 35 ஆயிரத்து 573 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ–9)

### வடமாகாண சுகாதார அமைச்சால் பல பதவிகளுக்கு விண்ணப்பம்

தென்மராட்சி, ஏப். 28
வடமாகாண சுகாதார திணைக்கள நிறுவனங்களில் வெற்றி டமாகக் காணப்படும் பகுதி நுட்பமுறை ஊழியர் பதவி களுக்கு தகுதியானவர்களி டமிருந்து வடமாகாண சுகாதார அமைச்சால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
வடமாகாண சுகாதார அமைச் சின் கீழ் உள்ள நிறுவனங்களில் ஆரம்பமட்ட பயிற் றப்படாத தொழிலாளர் தரம்III பதவியில் ஐந்து வருட நிரந்தர சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து, பதவியில் உறுதிப்படுத் தப்பட்ட வர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பப் படிவங்களை தத்தமது பகுதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பரிந்துரையுடன் விண் ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் புகைப்படப் பிரதிகளுடன் மே மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இர வீந்திரன் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.(வ–9)

**BRITISHWAY ENGLISH TECHNICAL TRANING CENTRE**
**699 YOGAPURAM CENTRE MALLAVI**

பொலிஸ் நிலையத்துக்கும் பஸ் ஸ்ராண்ட்டுக்கும் இடையில் உள்ள சந்தியால் 50 மீற்றர் வரவும்.

General English G.C.E A/L பொது ஆங்கிலம், English Grammar ஆங்கில இலக்கணம், Spoken English பேச்சு ஆங்கிலம், Spoken Sinhala பேச்சு சிங்களம், Computer Hard ware கணணி வன்பொருள் தொழினுட்பம், Computer Soft ware கணிணி மென்பொருள் தொழினுட்பம், Internet வலைப்பின்னல், இணைப்புமுறை, EMail இ.மெயில், Networking வலையமைப்பும் தொடர்பாடலும், Dip in Social Science அலுவலக முகாமைத்துவம், Dip in Business Management வியாபார முகாமைத்துவம், Dip in Marketing Management சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்,

தபால் மூலமாக சகல கற்கைகளையும் விரும்பிய நேரம் கற்று நான்கே (04) மாதங்களில் பெறுமதியான சர்வதேசத்தரச் சான்றிதழ் களையும் பெறலாம்.

077 761 9048, 076 674 1356 இற்கு உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதியினை SMS செய்து விண்ணப்ப படிவத்தினையும் விவரக் கொத்தினையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

4 போட்டோ கோப்பி இரண்டு பக்கம் 3/-

மணப்பெண் அலங்காரம் 25000/=
தொலைபேசி திருத்தம் -25000/=

(5 முழுநாள் பயிற்சி)
3 மாதங்களுக்குள் சுயதொழில் மூலம் செலவழித்த பணத்தைப் பெறலாம்.

## திருவிழா

பண்டத்தரிப்பு பிரான்பற்று ஞானவைரவர் ஆலய 5 ஆம் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிரான்பற்று இந்து மன்றத்தினரால் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.
அன்றைய தினம் வைரவப் பெருமானுக்கு அபிஷேக, ஆராதனைகள் இடம் பெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறவுள்ளது.
அதனைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப் புலவர் நித்திய தசிதரன் "கண்கண்ட தெய்வங்கள்" எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார். (வ)

## ஸ்ரீல. சு. கட்சியின் அம்பாறை தெற்கு அமைப்பாளரானார் இந்திக நளின்

கொழும்பு, ஏப் 28
முன்னாள் அமைச்சர் பி.தயாரத்னவின் இடத்துக்கு அம்பாறை நகர பிதா இந்திக நளின் ஜய விக்ரம நியமிக்கப்பட்டுள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை தெற்குத் தொகுதி அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் பி.தயாரத்ன செயற்பட்டார். எனினும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் அண்மையில் இணைந்து கொண்டார். இதனால் ஏற்பட்ட வெற்றி டத்துக்கே அம்பாறை நகர பிதா இந்திக நளின் ஜய விக்ரம, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் கடந்த வெள்ளிக் கிழமை வழங்கப் பட்டுள்ளது.
மேலும் வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர பிங்கிரிய தொகுதி அமைப்பாளராகவும் மேல் மாகாண அமைச்சர் நிமல் லன்ஷஜு வத்தளை தொகுதி அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் டெடிகம தொகுதி இணை அமைப்பாளராக சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் உதயகாந்த குண திலகவும் வரக்காப் பொல பிரதேச சபைத் தலைவர் கித்சிறி விஜேய துங்கவும் நியமிக்கப் பட்டுள்ளனர். (வ–10)



**BA கலைமாணி (வெளிவாரி)**
**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (ஒலுவில்)**

1. மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
2. A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியு டையவர்கள் ஆகும்.
3. பதிவுகள் யாவும்எமதுநிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
4. விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
5. பரீட்சைகள், கருத்தரங்குகள் யாவும் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.
6. தென் கிழக்குபல்கலைக்கழகத்தினால் வட பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம் புதிய உயர் கல்லூரியாகும்.
7. விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

விபரங்களுக்கு : கு. அருள் நங்கை (நிர்வாகி)

தொடர்புகளுக்கு:
021 222 8148

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

# கொதிநீரை அவதானமாக கையாளுமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, ஏப். 28

சிறு பிள்ளைகள் உள்ள இடங்களில் கொதி நீரை வைத்து விட்டு அசண்டையாக இருக்க வேண்டாம் என்று சாவ கச்சேரி ஆதார மருத்துவ மனை நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தேநீர் தயாரிப்பதற்காக பாத்திரங்களில் கொதி நீரை ஊற்றி விட்டு வெளியே செல்வதால் அதனை எடுக்க முயலும் சிறு குழந்தைகள் கொதி நீர் ஊற்றப்பட்டு காயமடைந்துள்ளனர். பெற்றோரின் அசண்டையே இவ்வாறான செயல்களுக்குக் காரணமாகின்றன.

கொதிநீர் ஊற்றப்பட்டு காயமடைந்த நிலையில் மூன்று சிறார்கள் கடந்த வாரம் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளமை தொடர்பாக கேட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. கேற்றில் மற்றும் பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்த கொதி நீரால் காயமடைந்த நிலையில் மூன்று சிறார்கள் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (வ-9)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி அழகரட்ணம்



புத்தூர் மேற்கு, புத்தூரைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி அழகரட்ணம் ஞாயிற்றுக்கிழமை (26.04.2015) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அழகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சரஸ்வதி தேவியின் (சகுந்தலா), பாசமிகு தாயாரும், கனகேந்திரனின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் மகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கதிரவேலு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி நிஜிதா - தர்சன் (கனடா), திருமதி யசிதா-தயாபரன் (கனடா), திருமதி ரூபன் -சிந்து (கனடா), துளசிகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த் தியும், கிரிசாந், சச்சின், அஜிசா (கனடா) ஆகியோரின் பூட்டியும், காலஞ் சென்ற பொன்னையா மற்றும் நவமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்திசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

திரு.திருமதி கனகேந்திரன், குடும்பத்தினர்.
செல்வி மகேஸ்வரி கந்தையா.

(59255)(4.3.7)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வறஞ்ஜினி ஈஸ்வரன்

அன்னை மடியில்
09.06.1966

ஆண்டவன் அடியில்
23.04.2015



யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Genevaவை வதிவிடமாகவும் பிரான்ஸ் Douvaine ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வறஞ்ஜினி ஈஸ்வரன் 23.04.2015 வியாழக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் தாட்சாயிணி (அளவெட்டி) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வரட்ணம் மனோன்மணி (ஓட்டுமடம்) தம்பதியரின் அன்பு மருமகளும், ஈஸ்வரன் (ஈசன்) அவர்களின் அன்பு மனைவியும், ஹிஷாயினி, கிஷாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வறாஜினி (பிரான்ஸ்) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வீரவாகு மற்றும் ரவீந்திரன் (இலங்கை), கெங்காதரன் (இலங்கை), றங்கநாதன் (சுவிஸ்), பிரேமராணி (இலங்கை), புஸ்பராணி (இலங்கை), தேவகலா (சுவிஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சாயிந் (பிரான்ஸ்), டிலான் (பிரான்ஸ்), பிரியன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரியதாயும், குமணன் (லண்டன்),பிறாமினி (இலங்கை), குணாளன் (லண்டன்), தர்ஷினி (இலங்கை), சாளினி (கனடா), மகிழினி (இலங்கை), கபிலன் (கனடா), உமாகாந் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சிறியதாயும், ஜரிஷன் (கனடா) அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2015) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: ஈஸ்வரன் (கணவர்)-சுவிஸ்
+41767183586

சிவகுமார் செல்வறாஜினி (சகோதரி); பிரான்ஸ்
+33951002320

தில்லை ஈஸ்வரி (சித்தி) இலங்கை
+94777 174 172

தகவல்:
தாட்சாயினி (தாய்)
அளவெட்டி மத்தி.
+94212059679

(59208)(4.3.7)

# பறந்தன பத்து ஆண்டுகள் ...!

தட்சா.ஜோ



தராகி சிவராம் என பிரபலமாக அறியப்பட்ட தர்மரத்தினம் சிவராம் இலங்கையின் பிரபலமான ஊடக வியலாளர் என்பதுடன் முன்னாள் போராளியுமாவார். கடந்த 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் நாள் இரவு கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வெள்ளை வானில் வந்த ஆயுத- தாரிகளால் கடத்தப்பட்ட சிவராம் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் மறுநாள் கொழும்பு ஜயவர்தனபுர நாடாளுமன்ற உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். 'மாமனிதர்' என்ற தமிழீழத்தின் உயரிய விருதையும் பெற்ற பேனா தாங்கிய ஆயுததாரியை 9 மில்லி மீற்றர் வகை கைத்துப்பாக்கி தின்று தீர்த்த நாளின் பத்தாவது வருடம் இன்று.

1989ஆம் ஆண்டு ஊடகவியலாளர் றிச்சர்ட் டி சொய்சாவினால் ஊடகவியலாளராகவே வெளிஉலகிற்கு பரிச்சயமானார் சிவராம். 'தராகி' என்ற புனைபெயருடன் 'தி ஐலண்ட்' பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் என்பதே அவரது அறிமுகமாகும். இவரை அறிமுகம் செய்த றிச்சர்ட் டி சொய்சாவும் இனந்தெரியாதோரால் கடத்திச் சென்று கொல்லப்பட்டது இலங்கை ஊடக வரலாற்றின் இரத்த சாட்சியங்கள். குறித்த சில காலத்தின் பின்னர் சிவராமின் எழுத்துக்களை உலகம் உற்றுநோக்கத் தொடங்கியது. காலப்போக்கில் சிவராம் தமிழ் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றார். அதற்குக் காரணம் தமிழர்களின் போராட்டம் 'காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதம்' எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் போதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங்களோடு சிங்களவர்களும் புரிந்துகொள்ளக் கூடியவாறு சிவராம் ஆங்கிலத்தில் விளக்கியமையே. துணிந்து செய்ய யாரும் முன்வராத ஒரு காரியத்தை தலைநகரில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்படவேண்டிய ஒன்று. பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடக வியலாளர்களுடனும் அவர் வாதாட வேண்டியிருந்தது.

தான் பத்திரிகைகளில் முன்வைத்த கருத்துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போது அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது. தனது கருத்துக்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுட னான தொழில்முறை உறவை வளர்த்துக் கொள்ள சிவராம் தவறவில்லை. மொழி கடந்து பல்வேறு தளங்களில் அவர்களுடன் பணியாற்றினார். 'இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்' என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்று செயற்பட்டவர் சிவ்ராம். படைத்துறை ஆய்வாளரான இவர், அரசியல் ஆய்வாளராகவும், ஊடக அசிரியராகவும், ஊடகவியலாளராகவும், இலக்கியப் படைப்பாளியாகவும், சிறந்த பேச்சாளராகவும். பல்வேறு பரிமாணங் களில் முன்னோடியானவர்.

ஊடகத்துறைக்கு இரத்த சாட்சியங்களாக ஐயாத்துரை நடேசன், கே. எஸ். ராஜா, மயில்வாகனம் நிமலராஜன், றிச்சர்ட் டி சொய்சா, தேவிஸ் குருகே, ரேலங்கி செல்வராஜா, நடராஜா அற்புதராஜா, ஐ.சண்முகலிங்கம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், சின்னத்தம்பி சிவமகாராசா, சந்திரபோஸ் சுதாகரன், சம்பத் லக்மால் சில்வா, லசந்த விக்கிரமதுங்க, செல்வராஜா ரஜீவர்மன், சுகிர்தராஜன், சத்தியமூர்த்தி என பலர் இருந்தபோதிலும் அவர்கள் ஆற்றிய பெரும்பணி முடிவுறாமல் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. தொடர்ந்துகொண்டே இருக்கும். போராட்ட வடிவங்கள் மாறினாலும், விடுதலைக்காக எழுதிக் குவிக்கும் எழுத்தாளர்களின் இலக்குமாறாது.

# நுவரெலியா ஆலயங்களில் மஹிந்த விசேட வழிபாடு

நுவரெலியா, ஏப்.28

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை நுவரெலியாவுக்குப் பயணம் செய்து ஆலயங்களிலும், விகாரைகளிலும் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இறம்பொடை ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு சனிக்கிழமை காலை பயணம் செய்த முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இ.தொ.காவின் முக்கியஸ்தர்கள் வரவேற்று ஆலய வழிபாடுகளில் ஈடுபட் டனர். அதனைத் தொடர்ந்து வெளின்டன் தோட்டத்திலுள்ள தொண்டமானின் இல்லத்தில் பகல் உணவு வழங்கப்பட்டது. பின்பு மாலை 2 மணியளவில் நுவரெலியா நகரிலுள்ள பௌத்த விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். மாலை 3 மணியளவில் நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்துக்கு அழைத்துச் செல் லப் பட்டார். அங்கு பிரதான வாசல் திருத்த வேலைகள் காரணமாக பூட்டப்பட்டிருந்த நிலையில் அவர் பின்வாசல் வழியே சென்று தரிசனத்தில் ஈடுபட்டார். அங்கு பூஜை களுக்கான ஏற்பாடுகளை ஆலயச் செயலாளர் எம்.சந்திரன் மேற்கொண்டிருந்தார்.

மஹிந்தவுடன் இராஜாங்க அமைச்சர் சீ.பி.ரட்ணாயக்க, தலவாக்கலை லிந்துலை நகர சபைத் தலைவர் அசோக சேபால ஆகியோரும் இணைந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மின்னல் தாக்கம் பாதித்த இருவர் மருத்துவமனையில்

நுவரெலியா, ஏப்.28

கடந்த சனிக்கிழமை பிற்பகல் பெய்த மழையோடு மின்னல் தாக்கத்தால் அதிர்ச்சியடைந்த பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் டிக்கோயா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கவரவில தோட்டத்தில் தேயிலை மலையிலிருந்த இருவரே இவ்வாறு அதிர்ச்சியடைந்துள்ளனர். கொழுந்து பறித்துக்கொண் டிரு[illegible] பெண்ஒருவரும்மற்றுமொரு ஆணுமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த இருவரும் டிக்கோயா கிளங்கன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன. மலையகத்தில் தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையால் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள் ளனர். (வ)

# ஆலமரம் வீழ்ந்ததில் 8 பேர் மருத்துவமனையில்

நுவரெலியா, ஏப்.28

நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை, பெரிய மண் வெட்டி தோட்டத்துக்கு அண் மையில் 150 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆலமரம் வீழ்ந்ததில், ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளதுடன், அந்த வீட்டிலிருந்த 8 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதில் 7 பேர் கொட்டகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டி மருத்துவ மனைக்கு மாற்றப்பட் டுள்ளார். மரம் சரிந்து வீழ்ந்ததில் வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், வீட்டுக்குள் இருந்த 8 பேரும் காயமடைந் துள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட வர்களின் கூக்குரல் சத்தம் தோட்ட மக்களுக்கு கேட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற அவர்கள் பாதிக்கப்பட் டவர்களை மீட்டுள்ளனர். இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

# உங்களுக்குத் தெரியாத விஎல்சி பிளேயரின் அசத்தலான அம்சங்கள்



கணினியில் பொதுவாக வீடியோக்களைப் பார்க்க தேர்ந்தெடுக்கும் விஎல்சி பிளேயரில் உள்ள சில முக்கியமான சிறப்பம்சங்கள் உள்ளன. ஆனால் பலரும் வீடியோக்களை மட்டும் பார்ப்பதற்கு விஎல்சி பிளேயரை பயன்படுத்துகின்றனர். அதனால் இதில் உள்ள சில சிறப்பம்சங்களைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.



**Video Effects**

இதன்மூலம் வீடியோவின் வண்ணம், தேவையான பகுதிகளை தனியாக பிரிப்பது மற்றும் உருப்பெருக்கம் போன்ற சிலவற்றை செய்ய முடியும். இதில் சாதாரணமாக உள்ள வீடியோ Effect Option-ல் Contrast, Brightness, Gamma ஆகியவற்றைச் செய்து வீடியோவை மெருகேற்றலாம்.

Sharpness Effect வீடியோவுக்கு தெளிவான தன்மையைக் கொடுக்கிறது. இதில் உள்ள Sigmadçk Adjust செய்யும் போது வரும் மாற்றத்தை வீடியோவில் பார்க்கலாம். Transform வீடியோக்களை 360 டிகிரியில் மாற்றி அமைக்க உதவுகிறது.

**Geometry**

வீடியோ Effect Optiond ல் Geometry tab-ல் உள்ள Video Magnification/Zoom வீடியோவில் உள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் In & Out செய்து பார்க்க உதவுகிறது. Rotate option மூலம் வீடியோவை எந்தவொரு Angle வேண்டுமானாலும் மாற்றியமைக்கலாம். இதில் கொடுக்கப்பட்டுள்ள Puzzle Game விளையாடுபவர்களுக்கு புதிய அனுபவத்தைக் கொடுக்கும்.

**Color fun**

இதில் கொடுக்கப்பட்டுள்ள Color threshol- மற்றும் Color Extraction மூலம் எமக்குப் பிடித்த வண்ணங்களை வீடியோவுக்கு கொடுக்க முடியும்.

**Vout/Overlay**

இதில் வீடியோவை எமக்கு ஏற்றவாறு பல்வேறு Row மற்றும் Colums மூலமாக Panoramic View-க்கு மாற்ற முடியும். இது ஒரு சிறந்த Feature ஆகும். இதன் மூலம் வித்தியாசமான அனுபவம் கிடைக்கும்.

# வீடுகளுக்கான புதிய தானியங்கி பாதுகாப்பு முறைமை

சம காலத்தில் வீடுகளுக்கான பாதுகாப்புக்காக பல்வேறு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் Oomi எனப்படும் புதிய தானியங்கி பாதுகாப்பு முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்முறைமையுடன் 7 அங்குல அளவுடைய தொடுதிரைத் தொழில்நுட்பத்தைக் கொண்ட தொலை இயக்கியும் தரப்பட்டுள்ளது. இது தேவைக்கு ஏற்றவாறு முறைமையை மாற்றியமைப்பதற்கு உதவுகின்றது. சூழலை இலகுவாக இனங்காண ஏதுவாக 8 சென்சார்கள் உள்ளடங்கலாக உருவாக்கப்பட்டுள்ள இந்த முறைமை தற்போது நிதி சேர்த்தலுக்காக Indiegogo தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.




மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ..... சித்திரையில் ஆரம்பம்




/அணிக்கு 5 பேர். பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

30 அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

## இந்தியாவின் நீண்ட கூந்தல் பெண்



டில்லி,ஏப்.28

அலகாபாத்தை சேர்ந்த ஸ்மிதா ஶ்ரீவஸ்தவா என்ற பெண், நீண்ட கூந்தலுக்காக லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

ஸ்மிதா ஶ்ரீவஸ்தவா (வயது–37) என்பவர், தனது உயரத்தை விட மூன்று அங்குலம் நீண்ட கூந்தலை வளர்த்ததன் மூலம், இந்தியாவின்நீண்டகூந்தல்கொண்ட பெண் என்ற சாதனையைப் படைத்துள்ளார். தற்போது 7 அடி நீளம் கொண்ட கூந்தல் உடையவராக உள்ள ஸ்மிதா, 6 அடி நீளம் இருந்தபோதே லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்து விட்டார். ஸ்மிதாவின் முயற்சிக்கு அவரது குடும்பத்தினரும் ஆதரவளித்து வருகின்றனர்.

தனது சாதனை குறித்து ஸ்மிதா கூறுகையில், எனது 7 அடி கூந்தலுக்காக பல விருதுகளை வென்றுள்ளதுடன், லிம்கா சாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளேன். கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடிக்கத் திட்டமிட்டுள்ளேன். வெளியில் செல்லும்போது பலரும் எனக்கு மரியாதை தருகின்றனர். அவர்கள் என்னுடன் பேச ஆர்வப்படுவதுடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் என்னுடைய கூந்தலின் நீளம் உண்மையானது தானா என்று இழுத்துப் பார்க்கின்றனர். மேலும், கூந்தல் உண்மைதான் என்று தெரிந்தவுடன் நீங்கள் அதிர்ஷ்டசாலி என்று கூறிவிட்டுச் செல்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (14)

# சித்திரவதையிலிருந்து உயிர் தப்பிய கைதிகள் பெர்லினில் சந்திப்பு

பெர்லின்,எப்.28

யூதப் படுகொலையை நிகழ்த்திய ஹிட்லரின் சித்திரவதை முகாமிலிருந்து உயிர் தப்பிய கைதிகள் மற்றும் அதிகாரிகள் தற்போது 70 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் சந்தித்து நினைவுகளைப் பகிர்ந்துள்ளனர்.

இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்த போது ஜேர்மனியின் ஜனாதிபதி லட்சக்கணக்கானயூதர்களைச்சித்திரவதை முகாம்களில் அடைத்து கொல்ல உத்தரவிட்டார். இதற்காக பிரத்தியேகமாக சித்திரவதை முகாம்கள் உருவாக்கப்பட்டு அதற்குக் காவலாகப் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.



கடந்த 1945 ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான யூதர்கள் கைதிகளாக ஜேர்மனியின் வடக்குப் பகுதியில் உள்ள சித்திரவதை முகாம் ஒன்றில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். சில மாதங்களுக்குப் பின்னர், ஜேர்மனிய நகரங்களுக்குள் புகுந்த பிரித்தானிய இராணுவ வீரர்கள் சித்திரவதை முகாம்களில் இருந்து கைதிகளை விடுதலை செய்தனர்.

முகாமில் பிரித்தானிய வீரர்கள் நுழைந்தபோது, அங்கு ஏற்கனவே 10 ஆயிரம் கைதிகள் கொல்லப்பட்டுச் சடலங்களாக இருந்ததை கண்டு அதிர்ச்சியுற்றனர். போர்க் காலத்தில் சுமார் 2 லட்சம் கைதிகள் அந்த சித்திரவதை முகாமில் அடைக்கப்பட்டனர். அவர்களில் அந்த முகாமைச் சேர்ந்த 52 ஆயிரம் கைதிகளும், சிறைச்சாலையை சேர்ந்த 20 ஆயிரம் கைதிகளும் இதே சித்திரவதை முகாமில் உயிரிழந்துள்ளனர். சித்திரவதை முகாமிலிருந்து மீண்டு வந்து 70 வருடங்கள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அதனை நினைவு கூரும் வகையில் தற்போதைய ஜேர்மன் ஜனாதிபதி தலைமையில் பெர்லினில் கூடி நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர். (14)



## இளவரசிக்காக ஒதுக்கப்பட்ட மருத்துவமனை அறைக்குப் பூட்டு

லண்டன்,ஏப்.28

பிரிட்டிஷ் இளவரசியின் பிரசவத்துக்காக ஒதுக்கியிருந்த வைத்தியசாலையின் அறையில் மூட்டைப் பூச்சி தொல்லை அதிகம் இருந்ததால், அந்த அறையை மருத்துவமனை நிர்வாகம் அவசரமாக மூடியுள்ளது.

இளவரசர் வில்லியமின் மனைவியான கேட் மிடில்டனின் இரண்டாவது பிரசவத்துக்கான நாள் நெருங்கி வருவதால், அவரைப் பிரிட்டனில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கேட் மிடில்டன் அனுமதிக்கப்பட இருந்த அதே அறையில் மூட்டை பூச்சிகள் இருந்ததாக மருத்துவமனை நிர்வாகம் அண்மையில் கண்டுபிடித்தது.

மேலும், 20 படுக்கைகள் கொண்ட அந்த அறையில் பக்ரீரியாவின் தாக்கத்தால் சுமார் 8 நோயாளிகள் பாதிக்கப்பட்டிருந்ததையும் மருத்துவர்கள் கண்டறிந்தனர்.

அதனால் தற்காலிகமாக அந்த அறை மூடப்பட்டுள்ளது. தற்போது அந்த குறிப்பிட்ட அறையை பக்ரீரியா தொற்று இல்லாமல் முழுவதுமாக சுத்தப் படுத்தும் பணி நடந்து வருகிறது. மேலும், பிரிட்டன் இளவரசியைப் பிரசவத்துக்காக அனுமதிக்கப்படவிருக்கும் அந்த வைத்தியசாலையில் தொற்று நோய் பரவுமா என மருத்துவமனை நிர்வாகம் கருத்து எதுவும் கூறவில்லை.

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள அந்த வைத்தியசாலையின் அறை இன்னும் சில தினங்களில் மீண்டும் திறக்கப்படும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. (14)

## பாகிஸ்தானில் புயல்
### 26 பேர் சாவு: 180 பேர் காயம்



பெஷாவர்,ஏப்.28

பாகிஸ்தானில் புயல் மற்றும் கடும் மழைக்கு இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 180 பேருக்கு மேல் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

வடமேற்கு நகரமான பெஷாவர் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய புயல் காற்று மற்றும் மழையால் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் மரங்கள், கோபுரங்கள், கட்டடங்கள் உட்பட பலவும் சரிந்து விழ்ந்துள்ளதால் போக்குவரத்துக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 180 பேருக்கு மேல் படுகாயம் அடைந்துள்ளதாகவும் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொலை தொடர்பு சேவை மற்றும் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளதால் மீட்புப் பணிகள் தாமதமடைகின்ற போதும், இராணுவத்தின் உதவியுடன் மீட்புப் பணிகள் நடந்து வருவதாக உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (14)



## சாம்பலை கக்கும் சிலி கால்புகோ எரிமலை

சாண்டியாகோ,ஏப்.28

சிலி நாட்டில் உள்ள கால்புகோ எரிமலை தொடர்ந்து சாம்பலைக் கக்கிவருவதால் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமும் எரிமலை தொடர்ந்து நிலையற்ற தன்மையுடன் சாம்பலை வெளியிட்டு வருகிறது. சாம்பல் மேகங்கள் 2 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்துஆர்ஜென்டீனாவின்புவனாஸ் அயர்ஸ் நகரத்தை அடைந்துள்ளது. அதனால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்குச் செல்லத் தயாராக இருந்த விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. அதேபோல் மொண்டேவீடியா மற்றும் சாண்டியாகோ ஆகிய நகரங்களிலும் சில சர்வதேச விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

43 வருடங்களாகச் செயலற்றுஇருந்த சிலி நாட்டின் கால்புகோ எரிமலை மீண்டும் வெடித்து, வானில் சாம்பல் மற்றும் புகையைக் கக்கி வருகிறது. இதனையடுத்து அந்தப்பகுதியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் எரிமலையில் இருந்து சுமார் 17 கிலோ மீற்றர் உயரத்துக்கு சாம்பல் கலந்த புகையை எரிமலை கக்கி வருகிறது. வளிமண்டலத்தில் பரவியிருக்கும் சாம்பல் மேகங்கள் அண்டை நாடுகளுக்கு வேகமாக பரவிவருகிறது. (14)

## ஐ.எஸ். சந்தேகநபர்கள் கைது

கோலாலம்பூர்,ஏப்.28

மலேசியாவில் ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் அந்த நாட்டுப் பொலிஸார் பல சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் வெடிபொருள்களைக் கைப்பற்றியுள்ளதாகவும், தலைநகர் கோலாலம்பூரிலும் சூழவும் உள்ள இடங்களில் தாக்குதல் நடத்த அவர்கள் திட்டம் தீட்டியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் மாநாட்டுக்கு தலைவர்கள் வருகை தந்துள்ள நிலையில் கோலாலம்பூரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (14)

# இப்படியும் ஒரு தந்தை

நியூயோர்க்,ஏப்.28

தனது மகன் மீது தான் வைத்திருக்கும் பாசத்தை உலகத்துக்கு உணர்த்தும் விதமாக, கடுமையான வலியையும் பொருட்படுத்தாமல் மகனின் முகத்தை தனது இடது தாடையில் பச்சையாக குத்திக் கொண்டுள்ளார் ஒரு தந்தை. அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள ஹவ்ஸ்டன் நகரைச் சேர்ந்த 20 வயதுடைய கிரிஸ்டியன் ஸெக்ரிஸ்ட் என்பவருக்கு அண்மையில் ஆண் குழந்தை கிடைக்கப் பெற்றுள்ளதால், தனது மகன் மீது கொண்ட பாசத்தை அவர் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.



அவர் தனது புதிய தோற்றத்தை அண்மையில் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதற்கு நண்பர்கள் தரப்பில் இருந்து பெருத்த வரவேற்பும் ஒரு சிலரிடம் இருந்து அதிருப்தியும்கிடைத்துள்ளது. உனது முக அழகையும், அமைப்பையும் கெடுத்துக் கொண்டால் வேலை வாய்ப்பு, கடவுச் சீட்டு, விசா போன்றவற்றில் எதிர்காலத்தில் உனக்கு சிக்கல் நேரலாம் எனச் சில உண்மையான நண்பர்கள் எச்சரித்தும் உள்ளனர். (14)

# நொருங்கிய நேபாள நாடு

## உயிரிழப்பு 3 ஆயிரத்து 700 ஆக உயர்வு



காத்மாண்டு,ஏப்.28

நேபாளத்தை கடந்த சனிக்கிழமையன்று தாக்கிய 7.9 ரிக்டர் அளவிலான மோசமான நிலநடுக்கப் பேரழிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 700 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 6 ஆயிரத்து 500 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமையன்று நிகழ்ந்த நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக, அங்கு நேற்று முன்தினமும் 6.7 ரிக்டர் அளவு கொண்ட நில நடுக்கம் ஏற்பட்டது. தொடர்ந்து நேற்றுமுன்தினம்இரவும்5.4ரிக்டர்அளவுகொண்ட நிலஅதிர்வும்ஏற்பட்டது. இதன்காரணமாக கடந்த 2 நாள்களாக அந்த நாட்டு மக்கள் அனைவரும் வெட்டவெளியில் கூடாரம் அமைத்து தங்கியுள்ளனர். இரவு நேரங்களில் மக்கள் தூக்கமின்றி தொடர் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு தொடர்ந்து நடைபெற்று வரும் மீட்புப் பணிகளில் இதுவரை 3 ஆயிரத்து 218 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக அந்த பேரிடர் மீட்புப்பணி பிரிவு தலைவரான ரமேஷ்வர் டங்கல் தெரிவித்துள்ளார். இதுவரை 6 ஆயிரத்து 500 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தங்கள் நாட்டில் பேரழிவு நிகழ்ந்த பின்னர் நடைபெறும், மீட்புப் பணிகளில் உலக நாடுகள் செய்து வரும் உதவிகள், பெரிதும் வரவேற்கத்தக்கது என பேரிடர் மேலாண்மை அமைப்பின் உறுப்பினரான தீபக் பாண்டா தெரிவித்துள்ளார்.

நிவாரண பணிகளுக்கு மீட்புக்குழுவினர், கனரக வாகனங்கள், மருந்து பொருள்களை அனுப்பிவைத்து உதவுமாறு பல்வேறு நாடுகளை நேபாளம் கேட்டுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் பேரிடர் மீட்புக்குழுவினரை அனுப்பிவைக்க முன்வந்துள்ளன. மீட்புப் பணிக்காக தாய்லாந்து இராணுவ வீரர்களையும், மருத்துவ குழுவினரையும் அனுப்பிவைத்துள்ளது. இதே போன்று சீனா, ஜப்பான் நாடுகளும் நிவாரண பொருள்களை அனுப்பி வைத்துள்ளன.

இதேவேளை நில நடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் உடல்களைப் புதைக்கும் அளவுக்கு வாய்ப்புகளும், வசதிகளும் இல்லாத காரணத்தார் தகன மேடையில் சடலங்கள் அனைத்தையும் குவியல் குவியலாக போட்டு எரித்துவருகின்றனர்.

### சுமார் 10 லட்சம் சிறுவர்கள் பாதிப்பு

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் சுமார் 10 லட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் தகவல்தெரிவித்துள்ளது. மேலும் ஆயிரக்கணக்கானோர் பொது இடத்தில் கூடாரங்கள் அமைத்து தங்கி வருகின்றனர். அந்த இடங்களில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதா என்று நிவாரண ஊழியர்கள்ஆய்வுநடத்திவருகின்றனர்.

இந்த நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பல லட்சம் சிறுவர்களின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. அவர்களுக்குச் சுத்தமான நீர் மற்றும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தி தருவதே முக்கிய கொள்கை ஆகும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் தண்ணீர் மற்றும் உணவுத் தட்டுப்பாடாகவுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். கடந்த 1934 ஆம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி 8 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்ததும், 6 ஆயிரத்து 500 பேர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

### நிலநடுக்கத்தின் காரணம்

நேபாளத்தில்பெரும்உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியுள்ள நிலநடுக்கம் எவ்வாறு உண்டாகிறது என்பதன் அடிப்படை காரணத்தை விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர். உலகளவில்உயரமான மலையான இமயமலையின் அருகில் நேபாளம் அமைந்துள்ளதே இந்த நிலநடுக்கத்துக்கு மிக முக்கிய காரணமாக அறியப்படுகிறது.

மத்திய ஆசியப் பகுதியில் உள்ள இந்திய மற்றும் யுரேசியத் தட்டுகள் ஆகிய இரண்டும் மாபெரும் தட்டுகள் ஒன்றுக்கொன்று பலமாக மோதிக்கொள்வதே நில அதிர்வுக்குக் காரணமாகும். இந்த அதிர்வால் இமயமலையின் உயரம் ஆண்டுக்கு இரண்டு அங்குலம் வீதத்தில் வளர்ந்து கொண்டே செல்கிறது. அதைமனிதர்களால்உணரமுடியாது. இந்த மோதலில் இமயமலை அடித்தளத்தில் உள்ள இந்திய அடித்தட்டு கீழ் நோக்கியும், யுரேசிய அடித்தட்டு மேல் நோக்கியும் நகர்வதால் பெரும் அதிர்வுகள் ஏற்படுகின்றன. இவையே பூகம்பமாக உருவெடுக்கிறது.

இமயமலையில் உள்ள மலைகள் தொடர்ந்து இந்திய தட்டுகள் மீது பலமாக மோதி வருகின்றன. அவற்றில், இரண்டுக்கும் மேற்பட்ட மோதல்கள் அபாயத்தை ஏற்படுத்துகின்றன. எவ்வளவு பெரிய நிலநடுக்கமாக இருந்தாலும் கூட, அதன் ஆரம்பம் சிறிய அளவு அதிர்வுகளை ஏற்படுத்தும். சில விநாடிகளுக் குள் அது விரிவாகப் பலத்த நில அதிர்வுகளை ஏற்படுத்தி பெரும் சேதங்களை ஏற்படுத்தும். ஆனால், புவித்தட்டின் மோதல் பலமானதாக இருந்திருந்தால், அதன் விளைவு இதைவிட மோசமானதாக இருந்திருக்கும். இந்த மோதல்கள் சில நேரங்களில் மெதுவாகவும், சில நேரங்களில் பலமாகவும் இருக்கும். தற்போது நேபாளத்தில் நிகழ்ந் துள்ள மோதல்மிகவும்மெதுவானமோதலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொடரும் அவலம்

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாள நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கி உள்ளன. மின்தடை, குடிதண்ணீர் தட்டுப்பாடு, சுகாதாரக்கேடு எனப் பல பிரச்சினைகள் உருவாகி உள்ளதால், மக்கள் தவிர்த்து வருகின்றனர். (14)



## நண்பனை முதுகில் சுமக்கும் மாணவன்

பீஜிங்,ஏப்.28

சீனாவில் ஊனமுற்ற நண்பனை முதுகில் சுமந்து பாடசாலைக்கு கொண்டுசென்றமாணவரின்செயல் மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

சீனாவின் Xuzhou நகரில் உயர் பாடசாலையில் கல்வி கற்கும் 19 வயதுடைய இரு மாணவர்களும் சிறந்த நண்பர்கள்.

இவர்கள் இருவரில் ஒரு மாணவனுக்கு தசைநார் தேய்வு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால், அவரால் நடந்து செல்ல முடியாது. நண்பனின் நிலை அறிந்த மற்ற நண்பன் அவரை தனது முதுகில் சுமந்து கொண்டு பாடசாலைக்குக் கூட்டிச் செல்கிறார்.

ஒரு நாள், இரண்டு நாள்;கள் அல்ல. தொடர்ந்து மூன்று வருடங்களாக ஒரு வகுப்பைக் கூடத் தவறவிடாமல் தனது நண்பனை முதுகில் சுமந்துகொண்டு நீண்ட தூரம் சென்று பாடசாலையில் விட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை மெய்சிலிர்க்க வைத்துள்ளார். (14)

## ஜனாதிபதியைக் கண்டித்துப் போராட்டம்

புஜும்புரா,ஏப்.28

புருண்டி ஜனாதிபதி பியர் குருன்சிஸா மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகக் கடந்த சனிக்கிழமை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வன்முறைகள் வெடித்துள்ளன.

புருண்டி தலைநகர் புஜும்புராவில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் மோதல்கள் நடைபெற்றுள்ளன.

அரச அரசியலமைப்புக்கு எதிரான சதிப்புரட்சியை அரங்கேற்றுவதாக குற்றம்சாட்டி எதிர்ப்பாளர்கள் அங்கு போராட்டம் நடத்திவருகின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி, டயர்களை எரித்துள்ளனர். பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டதுடன் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச் சூடுகளையும் நடத்தியுள்ளனர்.

இந்த அறிவிப்பு அரசியலமைப்புக்கு முரணானது என்று கூறுகின்ற எதிர்க்கட்சியினர், பல வருடங்களாக நீடித்த இனப்பிரச்சினைக்கு முடிவு கண்ட அமைதி ஒப்பந்தத்தை பாதிக்கும் செயல் என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்கள் சட்டவிரோதமானவை என்று அரசு தெரிவித்துள்ளது. (14)



## எலிசபெத் மகாராணி செல்வந்தர் பட்டியலில் இல்லை

லண்டன்,ஏப்.28

பிரித்தானியாவின் 300 செல்வந்தர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. வருடாந்தம் வெளியிடப்படும் செல்வந்தர்கள் பட்டியலில் முதற்தடவையாக எலிசபெத் மகாராணியின் பெயர் இடம்பிடிக்கவில்லை.

கடந்த வருடத்தை விட இந்த வருடம் எலிசபெத் மகாராணியின் சொத்து மதிப்பில் 15 மில்லியன் டொலர் அதிகரித்துள்ள போதிலும் அவரது பெயர் இந்த முறை பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

யுக்ரெய்னை பிறப்பிடமாகக் கொண்ட செல்வந்தர் லென் ப்ளாவாடனிக் தான் முதற்தடவையாக பிரிட்டனின் மிகப்பெரிய பணக்காரர் ஆகியுள்ளார். அவரது சொத்துப்பெறுமதி 19 பில்லியன் டொலர்கள் ஆகும். (14)

அ.குஞ்சன், சாவகச்சேரி.



# இனியொருகால் வருமோ அந்த இனிய நாள்கள்?

> ஆறாம் தரம் படிக்கும் போதே சனி, ஞாயிறு நாள்களில் தோட்டத்தில் பாத்திகட்டுதல், மேசன் கூலி வேலை, வயல் வேலைகள் எனக் கிடைத்த வேலைகளைச் செய்து, நாளாந்த கூலியாக ஐந்து ரூபா பெற்று எமது தேவைகளைப் பூர்த்தி செய்து பெற்றோருக்கும் உதவி யாக வாழ்ந்த நாள்களை இன்று நினைக்கும் போதும் என்னமோ செய்கிறது.

அது உடுவில் மகளிர் கல்லூரியில் கண்டி, மாத்தளை போன்ற மலை நாடுகளில் வசித்த மாணவிகள் விடுதியில் தங்கி தமது கல்வியைத் தொடர்ந்த பொற்காலம். தென் இந்திய திருச்சபையின் ஆலய மணியோசை காலை, மாலை வேளைகளில் தவறாது ஒலிக்கும். அந்த ஓசை இணுவில் கந்தசுவாமி கோயில் வரை கேட்கும். அந்த நாளில் தமது கைக்கடிகாரங்களை, மேசை மணிக்கூடுகளை, சுவர்க் கடிகாரங்களை சரியான நேரத்துக்கு (6.00மணி) திருப்பிவிட்டு ஓடிவிடுவார்கள்.

நாங்கள் நால்வர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த பாலகர்கள். நான், மனோகரன், சச்சிதானந்தம், சிவலிங்கன் ஒரே அயலில், ஒரே பாடசாலையில் கல்வி கற்றோம். பெற்றோரைத் துன்புறுத்தாத வகையில் ஆறாம் தரம் படிக்கும் போதே சனி, ஞாயிறு நாள்களில் தோட்டத்தில் பாத்திகட்டுதல், மேசன் கூலி வேலை, வயல் வேலைகள் எனக் கிடைத்த வேலைகளைச் செய்து, நாளாந்த கூலியாக ஐந்து ரூபா பெற்று எமது தேவைகளைப் பூர்த்தி செய்து பெற்றோருக்கும் உதவியாக வாழ்ந்த நாள்களை இன்று நினைக்கும் போதும் என்னமோ செய்கிறது.

எங்களின் முக்கிய பொழுது போக்காக கிட்டி அடித்தல், தாச்சி மறித்தல் அதைவிட சினிமா பார்த்தல் என்பன காணப்பட்டன. யாழ்.மாநகர எல்லைக்குள் பதினொரு பட மாளிகைகள் அமைந்திருந்தன.

சினிமா ஒரு முக்கிய பொழுது போக்குச் சாதனமாகப் பயன்பட்டநேரம் அது. அதை விட கிராமங்களில் இணுவில் காலிங் கன் தியேட்டர் (முதன் முதல் பல்கனி கொண்ட கட்டடம்) மானிப்பாய் வெஸ்லி சினிமா, சுன்னாகம் நாகம்ஸ் சினிமா என அமைந்திருந்தன. சனி, ஞாயிறு நாள்களில் மு.ப 10.30 மணிக் காட்சிக்கு 9.00 மணிக்கேகாவல்நின்றால் தான் படம் பார்க்க முடியும்.

எமக்கு அனேகமாக மாலைக் காட்சிக்குத்தான் போவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கும். அதுவும் 6.00 மணிக்கு தேவாலய மணி கேட்டதும் புறப்பட்டு விடுவோம். மருதனார்மட சந்திக்கு பத்து நிமிடங்களில் (சில வேளைகளில் சைக்கிள் கிடைத்தால் ஐந்து நிமிடம்) அடைந்து விடுவோம். அன்றைய நாள்களில் சாதிக்கொரு நடைமுறையாக பேணி, மூக்குப் பேணி எனப் பாகுபாடு காட்டப்பட்டு வந்ததால் மூன்று தடவைகள் எரிக்கப்பட்ட தேநீர்க் கடையில் எமது உள்ளங்கையை விடவும் பெரிதான வாய்ப்பன் (ஐந்து சதம் மட்டுமே) தேநீர் ஐந்து சதம் (அதுவும் வெறும்தேத்தண்ணி, பால் தேத்தண்ணி என்று கேட்டால் மட்டுமே கிடைக்கும்) ரீ, பிளேன் ரீ எனக்கேட்டால் காது கேளாத மாதிரி முதலாளி இருப்பார். நின்றுவிட்டுப் போக வேண்டியதுதான். நன்னாரி வேர் போட்ட வாசனைத் தேநீரும் வாய்ப்பன் ஒன்றும் ஒருவருக்கு 10 சதம் வயிறு நிரம்பிவிடும். பட மாளிகையில் (கலரி 65 சதம், இரண்டாம் வகுப்பு ஒரு ரூபா 25 சதம், முதலாம் வகுப்பு, இரண்டு ரூபா 50 சதம்தான் கட்டணமாக அறவிடப்பட்டது.) இடை வேளையின் போது ஒரு கொப்பிப் பேப்பர் சுருளில் சுண்டல்,கடலை 5 சதம் அது படம் முடியும் வரை போதுமானது. மிக்க மகிழ்வுடன் ஒரு ரூபா செலவில் வீடு திரும்புவோம்.

எமது குறும்புகளில் முக்கியமானதையும் குறிப்பிட வேண்டும். இரண்டாவது இரவுக்காட்சி (9.30 மணி) பார்க்க சைக்கிள் இல்லாத காரணத்தால் சிவலிங்கம் தன் தகப்பனார் சைக்கிளை அதுவும் இருபக்கமும் காற்று மிக குறைந்த நிலையில் எடுத்து வந்து அதில் நால்வரும் சவாரி செய்து சுன்னாகம் நாகம்ஸ் சினிமாவில் எம்.ஜி.ஆரின் மகாதேவி படம் பார்த்து குதூகலத்துடன் திரும்பி அதிகாலை இருபக்கமும் சக்கரம் நெளிந்து ஓட முடியாத சைக்கிளால் நான் மரத்துடன் கைகட்டி வைக்கப்பட்டு என் தாயாரிடம் வாங்கிய அடிகள், மனோகரன் ஓட தாய் கருக்கு மட்டையால் எறிந்து காலில் குறுக்காக வெட்டியதால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கு, சிவலிங்கம் அடுத்தநாள் மாலை வரை வீடு வராமல் சச்சிதானந்தம் வீட்டில் ஒளித்தது. அன்றுடன் விட்டோம் எமது குறும்புகளை.

இருந்தபோதிலும் இன்று மனோகரன் (ஜேர்மன்), சிவலிங்கம் (டென்மார்க்), சச்சிதானந்தம் சாவு என எமைப் பிரிந்தாலும் வறுமையிலும் பெற்றோருக்கு உதவிய பிள்ளைகளாக வாழ்ந்த நாள்கள், நடு இரவிலும் சுதந்திரமாகத் திரிந்த திருவிழாக்கள், உண்மையான மத குருமார்களின் போதனைகள் "உன்னைப் போல அயலவனை யும் நேசி" என்ற இறைமகன் யேசுவின் வரி கள் என்பன என்றும் எமை நெறிப்படுத்தியதை உணர, வேகமான நாகரிக வளர்ச்சியில் மாறிய இன் றைய சுயநல உறவுகளை ஒப்பிடும் போது அந்த நினைவுகள் வேதனையிலும் மகிழ்வைத் தருகின்றன.

# சிறுவர் றக்பி களியாட்டத்தை முன்னெடுத்தது டி.எச்.எல்.




இலங்கையின் இளம் றக்பி வீரரொருவருக்கு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள 2015 ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண றக்பி போட்டிகளின் உத்தியோகபூர்வ பந்தினை நடுவரிடம் கையளிப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் டி.எச்.எல் செயற்திட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வரவேற்பைத் தொடர்ந்து, உலகின் முன்னணி சர்வதேச பொருள்கள் விநியோக சேவை வழங்குநரும், 2015 ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண றக்பி போட்டிகளின் உத்தியோகபூர்வ விநியோக சேவை பங்காளருமான டி.எச்.எல் எக்ஸ்பிரஸ் நிறுவனம் கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் சிறுவர்களுக்கான றக்பி களியாட்டத்தினை முன்னெடுத்திருந்தது.

டி.எச்.எல் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் இலங்கை செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி திமித்ரி பெரேரா கருத்து தெரிவிக்கையில், உலகக் கிண்ண றக்பி போட்டிகளின் அங்கமாக இருப்பது பெருமையளிப்பதுடன், இதனூடாக மாணவர்கள் மத்தியில் றக்பி விளையாட்டினை மேம்படுத்த முடிந்துள்ளது என்றார்.

டி.எச்.எல் மூலம் ஒவ்வொரு நாளும் அதன் வாடிக்கையாளருக்கு வழங்கி வரும் மனப்பான்மை, வேகம், ஆர்வம், துல்லியம் மற்றும் வெற்றி நோக்கிய அர்ப்பணிப்பு போன்றவற்றை சான்றுபகரும் விளையாட்டாக றக்பி அமைந்துள்ளது என மேலும் திமித்ரி தெரிவித்தார்.

இதன் போது ஆரம்பத்தில் பு பிரிவு பாடசாலைகளிலிருந்து 36 பிரிவுகளின் கீழ் போட்டியிட்ட 80 பாடசாலை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இந்த தெரிவு முறைகள் இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அடுத்த கட்ட சுற்றுப்போட்டிகளுக்கு மாணவர்களை முன்னேற்றும் வகையில் திறன் மதிப்பீட்டு செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. றக்பி பயிற்சி செயலமர்வுக்கு மேலதிகமாக, தேசிய அணி உறுப்பினர்கள் மற்றும் பயிற்சியாளர்களிடமிருந்து விளையாட்டு தொழில்நுட்பங்கள் தொடர்பான குறிப்புகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இந்த செயலமர்வுகளின் இறுதியில் தேசிய அணி உறுப்பினர்களினால் மீளாய்வு செய்யப்பட்டதற்கமைய, 20 மாணவர்கள் தாம் வெளிப்படுத்திய றக்பி திறமைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் மாணவர்கள் தங்கள் றக்பி கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்கு அவசியமான ஊட்டச்சத்து தேவைகள் தொடர்பில் விழிப்பூட்டும் வகையிலான ஊட்டச்சத்து செயலமர்வொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (த)

## வன்செயல்கள் வேண்டாம்

குடாநாட்டில் மீண்டும் அதிகரித்துக் காணப்படும் வன்முறைச் சம்பவங்கள் அமைதியை விரும்பும் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இளம் வயதுக் குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். பல்கலைக்கழக மாணவன் ஒருவரின் கையொன்று துண்டாடப்பட்டுள்ளது. சட்டத்தை மதிக்காத, சமூகத்துக்கு அஞ்சாத சிலரின் நடவடிக்கைகள் ஒட்டு மொத்த சமுதாயத்துக்கும் அவப்பெயரை ஏற்படுத்தி வருகின்றது.
வன்செயல்களில் ஈடுபடுபவர்கள் ஆயுதங்களுடன் சுதந்திர மாக உலாவுகின்றதொரு நிலை யில் ஏனைய பொதுமக்கள் நிம்மதியாகப் பொழுதைக் கழிக்க முடியுமா? மேலும் பொலிஸாருக்கே அஞ்சாதவர்கள் எதைச் செய்வதற்கும் துணியவே செய்வார்கள். குடாநாட்டைப் பொறுத்தளவில் பொதுமக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுப்பதன் மூல மாகவே இந்த ஆயுதக் குழுக்க ளைக் கட்டுப்படுத்த முடியும். இதைவிடுத்து பாராமுகமாக இருந்தால் யாழ். குடாநாடு நிம்மதி யிழந்த வன்செயல்களின் களமாக மாறிவிடும்.
பொலிஸாரைவிட சமூகத்தில் உள்ளவர்களும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும். எதற்கும் அஞ்சி அஞ்சி நடுங்குவதில் எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. துணிவுடன் செயற்படும்போதுதான், எதிரியின் நடவடிக்கைகளை ஓரளவாவது கட்டுப்படுத்த முடியும்.
குடாநாடு வன்செயல்கள் இல்லாத பூமியாக மாறுவது இங்கு வாழுகின்ற எமது கரங்களிலேயே உள்ளது.

*சா.அஜந்தன், கொக்குவில்.*

## இவர்கள் திருந்தி நடப்பார்களா?




யாழ். நகரில் அமைந்துள்ள கஸ்தூரியார் வீதி ஒரு வழிப் பாதையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வீதியின் இரண்டு பக்கமும் கடைத்தொகு திகள் நிறைந்துள்ளதுடன் வீதியின் அகலமும் குறைவாக உள்ளதால் இந்த நடைமுறை வெகு நாள்க ளுக்கு முன்பதாகவே கடைப்பிடி ப்பட்டு வருகின்றது. தற்போது சன நடமாட்டமும் அதிகரித்துள்ளதால் இந்த வீதியூடான போக்குவரத்துக்கள் இடையூறு நிறைந்தனவாக மாறிவிட்டன.
இந்த நிலையில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களில் சிலர் விதிமுறைக்கு மாறாக ஒரு வழிப்பாதை என்பதை உதா சீனம் செய்து வருகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடையக்கூடிய நிலையும் ஏற்படுகின்றது.
கடந்த வாரம் அட்க்ஷய திருதியை முன்னிட்டு இந்த வீதி விழாக் கோலம் பூண்டிருந்தது. நகைக் கடைகள் முன்பாக வாழைக் குலைகள் கட்டப்பட்டிருந்தன. அலங்கார வேலைப்பாடுகளும் காணப்பட்டன. நகை வாங்கும் ஆர்வத்துடன் மக்கள் கூட்டம் கூட்டமாக வீதியில் சென்றனர். இதனால் பெரும் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது.
இந்த நிலையிலும் கூடச் சிலர் தவறான திசையில் மோட்டார் சைக்கிள்களுடன் பயணித்ததைக் காண முடிந்தது. பொலிஸாரையும் அங்கு காணமுடியவில்லை.
பொதுமக்கள் விதிமுறைகளை அனுசரித்துப் போவ தன் மூலமாகவே சிரமங் களைத் தவிர்க்க முடியும்.


*கா.பிரவீணா*

## சரியான நேரம் காட்டப்படுமா?

நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளை பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பஸ் ஒன்றுக்காக காத்திருந்தேன். அந்த பஸ் 4.30 புறப்பட வேண்டியது.
ஆனால் எதேச்சையாக பார்த்தபோது எதிரில் உள்ள கட்டடத்தில் பொருத்தப்பட்டுள்ள நகர சபையின் விளம்பரத்தின் கீழ் நேரம் 4.40 எனக் காட்டியது. திகைத்துப்போன நான் பஸ் புறப்பட்டுச் சென்று விட்டதாக எண்ணிக் கவலையுடன் அருகில் நின்றவரிடம் விசாரித்தேன். அவர் பஸ் இனிமேல்தான் வரும் என்றார்.
நான் நேரம் தாண்டி விட்டதே என்றேன். அதற்கு அவர் இப்போதுதான் நேரம் 4.20 ஆகிறது. 4.30க்கு பஸ் வந்துவிடும் என்றார். எதிரேயுள்ள நகரசபையின் விளம்பரத்தைக் காண்பித்தேன். இவர் சிரித்தவாறு அந்த நேரம் தவறானது. இதுதான் சில நாள்களாக தெரிகின்றது–என்றார்.
என்னைப் போன்று வேறு சில பயணிகளும் தவறான நேரத்தை பார்த்துக் குழம்பியிருப்பார்கள். பதறியிருப்பார்கள்.
நகர சபை நிர்வாககத்தினர் இதனை உடன டியாகச் சரி செய்வது பலருக்கும் உபயோக முள்ளதாக இருப்பதுடன், குழப்பங்களும் ஏற்படாமல் தடுக்கமுடியும். செய்வார்களா?

*தி.மயூரன் மானிப்பாய்*

கேலிச் சித்திரம்




## நேபாளத்தின் துயர் துடைக்க சர்வதேசமே ஒன்று படுக

நேபாளம் சுமார் 80 ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரும் நிலநடுக்கத்தால் 3ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். லட்சக்கணக்கான குடும்பங்கள் தமது இல்லிடங்களை இழந்து வீதிக்கு வந்துள்ளனர். உலக மக்கள் அனைவரையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ள மிகப் பயங்கரமான பேரழிவு இது.
நேபாளத்தில் மட்டுமன்றி, வட இந்தியாவின் மாநிலங்களிலும் நிலநடுக்கத்தின் தாக்கம் காரணமாக வீடுகள் இடிந்து விழுந்ததில் 55 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.
இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் இமயமலையையும் விட்டுவைக்கவில்லை. அதிர்வின் காரணமாக பனிச் சரிவு ஏற்பட்டு எவரெஸ்ட் மலையேறிகளையும் அது ப்லியெடுத்துள்ளது.
கோடை காலம் என்பதால், காத்மண்டு மற்றும் நேபாளத்தின் சுற்றுலாத் தலங்களுக்கு உலகம் முழுவதிலிருந்தும் பயணிகள் வந்துள்ள நேரத்தில் தாக்கியுள்ளது இந்தப் பேரிடர். வேதனையில் துடிக்கும் தமது மக்களைக் காப்பாற்றும் கடமையுடன், தங்கள் மண்ணுக்கு வந்த விருந்தினர் நலம் காக்கும் பொறுப்பும் நேபாளத்துக்கு ஏற்பட்டுள்ளது.
காத்மண்டுவின் அழகை 60 மீற்றர் உயரத்திலிருந்து கண்டு களிக்கும் வகையில் 1832 இல் கட்டப்பட்ட தரஹரா கோபுரம் நிலநடுக்கத்தால் இடிந்து நொறுங்கியதில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 180 பேர் உயிரிழந்துள்ளனர். 1934 ஆம் ஆண்டிலும் இந்தக் கோபுரம் நிலநடுக்கத்தால் இடிந்து விழுந்தது. மீண்டும் கட்டப்பட்ட இந்தக் கோபுரம் தற்போது மறுபடியும் தரைமட்டமாகியுள்ளது. இடுபாடுகளில் சிக்கி உயிரிழந்த வெளிநாட்டுப் பயணிகளை அடையாளம் காண்பதும், உடல்களை அவரவர் நாட்டுக்கு அனுப்புவதும், உயிர் பிழைத்தோரைப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதும் மிகச் சிறிய நேபாள அரசு எதிர்கொள்ளும் பெரும் சவால்.
கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட நில நடுக்கத்தால், இடிபாடுகளுக்குள் சிக்கி, காயங்களுடன் தத்தளிப்பவர்களையும், உயிரிழந்தவர்களின் சடலங்களையும் மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் அங்கு பெரும் நில நடுக்கம் ஏற்பட்டதால் மீட்புப் பணிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நேபாளத்தில் மையப் பகுதியாகிய காத்மண்டுவை சுற்றியே இந்த நில அதிர்வு ஏற்பட்டிருக்கிறது. நேபாளத்தில் நில நடுக்கம் தொடர்பாக பல ஆண்டுகளாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுவந்த தாகவும் இப்போதே அந்த பெரிய நில நடுக்கம் நிகழ்ந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நிலநடுக்கம் தொடர்பான அபாயம் இன்னும் அங்கு நீங்காமையால், வெளிநாடுகளிலிருந்து நிவாரண உதவிகளையும் மீட்புப் படையினரையும் அங்கு அனுப்பி வைப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது . காத்மண்டு விமான நிலையத்திலும் பல விமானங்கள் தரித்து நிற்பதால் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நேபாள அரசு செய்வதறியாது திணறி வருகின்றது. இடிபாடுகளுக்குள் சிக்கியவர்கள் பலர், இப்போதும் உயிருடன் மீட்கப்பட்டு வருகிறார்கள். மீட்புப் பகுதிகளுக்கு கனரக வாகனங்களை நகர்த்துவதிலும் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டுள்ளன. நில நடுக்கத்தால் வீதிகளும் இரண்டாகப் பிளந்துள்ளதால், இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.
இந்தியா தனது விமானப் படை வீரர்களை அனுப்பி மீட்புப் பணியை முடுக்கிவிட்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து உணவுப் பொருள், குடிதண்ணீர், மருந்துகள், மருத்துவர்கள் என எல்லா உதவிகளும் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா முதல்கட்டமாக 10 லட்சம் டொலர் நிவாரண நிதி அளித்துள்ளது. நோர்வே 39 லட்சம் டொலர் நிதியுதவி அளித்துள்ளது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையான உதவியைக் கொண்டு வந்து களத்தில் இறக்கிக் கொண்டே இருக்கின்றன. இலங்கையும் தனது படையினரை மீட்புப் பணிக்காக அங்கு அனுப்பி நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளது.
இந்தப் பேரழிவில் இருந்து நேபாளத்தால் இப்போதைக்கு மீண்டெழுவது கடினம் என்றே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகையில் மட்டுமே நேபாளத்தின் கணிசமான பொருளாதாரம் தங்கியுள்ள நிலையில் இவர்களுக்கு மாற்றுத் தொழில், நிதியுதவி, புதிய குடியிருப்புகள் போன்றன அவசியம். வெறுமனே நிதியுதவியோடு நில்லாமல், இத்தகைய தொடர் வாழ்வாதார மீட்புப் பணிகளிலும் உலக நாடுகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகள் நேபாளத்துக்கு மிகமிக இன்றியமையாதவை.
எனவே உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே கூரையின் கீழ் தமது பங்களிப்பையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கான அவசர களம் இப்போது நேபாளத்தில் திறக்கப்பட்டுள்ளது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து நாடுகளும் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நேபாள மக்களின் துயர் களைய உடன் செயற்பட வேண்டும்.
இயற்கையை மனிதன் மதிக்காத போக்கு உலக அரங்கில் வலுப்பெற்றுவரும் இந்தக் கால கட்டத்தில் இயற்கையும் தனது வலிமையை மனிதனுக்கு உணர்த்திய சம்பவமாகவும் இந்த நில நடுக்கத்தை நோக்கமுடியும். இயற்கையின் சீற்றத்தை யாராலும் கட்டுப்படுத்தமுடியாது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.
இலங்கை மக்களுக்கும் இந்த இயற்கைப் பேரழிவு பற்றிய அனுபவம் உள்ளது. 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இலங்கையைத் தாக்கிய ஆழிப் பேரலை இடரினால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பெரும் சொத்தழி வுகள் ஏற்பட்டன. அதில் இருந்து இலங்கை மீண்டெழுவ தற்கு பல வருடங்கள் எடுத்தது. அவ்வாறான ஒரு நிலைமையே இப்போது நேபாளத்துக்கும்.
அந்த நாடு விரைவில் வழமை நிலைக்குத் திரும்பி அந்த மக்களின் அவலங்கள் விரைவில் நீங்க சர்வதேச உதவி

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசமைப்புத் திருத்தச் சட்ட நகல்: அதன் விதி இன்று தெரிந்து விடுமே.....

அரசமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்ட நகல் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெற்று மாலையில் வாக்கெடுப்புக்கு விடப்பட இருக்கிறது. திருத்தத்தின் முக்கியத்துவம் கருதி, அனைத்து உறுப்பினர்களும் ஏகோபித்து வாக்களிக்கும்படி செய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே சட்டமூலத்தை நேரடியாக சபையில் முன்வைத்து கருத்துப் பகர திட்டமிட்டிருந்தார்.

அரசில் அங்கம் வகிக்கும் இரண்டு முக்கிய கட்சிகளும் திருத்தத்தை ஆதரித்து வாக்களிக்கும் பட்சத்தில் ஏனைய சிறிய மற்றும் எதிர்த் தரப்பிலுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜனதா விமுக்தி பெரமுன போன்றவையின் ஆதரவும் கிடைக்குமாயின், நிச்சயம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அது நிறைவேறுவதில் சிக்கல் இருக்காது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைவராக இருந்தாலும், அவருக்கு விசுவாசமாக இல்லாதவர்களும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தொடர்ந்தும் தங்கள் தலைவராகப் போற்றி அவருக்கே விசுவாசமாக இருப்பவர்களும் என்று பலர் காணப்படுகிறார்கள். அதனாலேயே 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதில் பிரச்சினை ஏற்படலாம் என்ற எண்ணம் வலுப்பெற்று உயர்ந்து காணப்படுகிறது.

எதுவானாலும், மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக பெரும்பான்மை மக்கள் தெரிவு செய்ததும், பரப்புரையின் போது அவர் மக்கள் முன்வைத்த அதிமுக்கியமான விடயமும் நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

19ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக ஒழித்துக் கட்டாவிட்டாலும், அந்த அதிகாரங்களில் பலவற்றை வெட்டிக் குறைப்பதாகவும் மக்கள் நலன் சார்ந்தவையாகவும் இருக்கின்றன. இது நிறைவேறுமானால் சகல அதிகாரங்களும் தன்கையிலேயே இருப்பதாக இனிவரும் ஜனாதிபதிகள் இறுமாப்புடன் செயற்பட மாட்டார்கள் எனக் கருதலாம். அதேவேளை, அவ்வாறு செயற்படவும் முடியாது போகும்.


இருந்தாலும் பல்வேறு ஊழல்கள், மோசடிகளைப் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ராஜபக்ஷ தரப்பினரும், அவர்களின் அடிவருடிகளான அரசியல்வாதிகளும் இந்தத் திருத்தம் நிறைவேறுவதை விரும்பமாட்டார்கள், எதிர்ப்பார்கள் என்று கருதப்படுகிறது.

அதனாலேயே, ஜனாதிபதி சிறிசேன சில தினங்களுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், தாம் வாக்களித்தபடி நிறைவேற்று அதிகாரம் தொடர்பான இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதில் சில தடங்கல்கள் இருக்கின்றன என்று வெளிப்படுத்தி இருந்தார்.

மக்கள் பிரதிநிதிகளுக்கு நான் கௌரவமாக விடுக்கும் விண்ணப்பம் என்னவென்றால், இதனை உங்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வரலாற்று நிகழ்வாகக் கருதுங்கள்; வரலாறு உங்களை மதிக் கும் என்று கூறிய அவர், 19ஆவது திருத்தத்தை அனைத்து உறுப்பினர்களையும் ஆதரித்து வாக்களிக்கும்படி வினயமாகக் கேட்டுக்கொண்டார்.

மேற்போந்த சூழ்நிலையில், இன்று மாலை இந்தத் திருத்தம் வாக்கெடுப்புக்கு வருகின்றது. அதன்விதி என்னவாக இருக்கும் என்பதை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் தோல்வி காணும்நிலை உருவாகினால், ஜனாதிபதிக்கு வேறு வழியிருக்காது. நாடாளுமன்றத்தைக் கலைக்க அவர் முடிவு செய்யலாம். அவ்வாறு முடிவு செய்யும் போது நிச்சயமாக எதிர்த்து வாக்களித்தவர்கள் அனைவருக்கும் கட்சித் தலைவர் என்ற முறையில் அடுத்த தேர்தலில் போட்டியிட அனுமதி தராமல் விடக்கூடும். அதன் விளைவு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட சுலபமாக வழிவகுக்கும்.

எதுவானாலும், இப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து பதவியிலிருக்க முடியும். அந்த வகையில் அவர் இப்போது அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்பதே நிதர்சன உண்மை. இன்று மாலை வரை பொறுத்திருப்போமே.....



“ ஆட்சி அதிகாரம் உள்ள பிரதமர் பதவியில் மஹிந்த அமர்வதன் மூலமாக ஜனாதிபதி மைத்திரியின் செல்வாக்கைத் தளர்த்தி மீண்டும் மஹிந்த முன்னணிக்கு வரக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதாலேயே இருவரும் ஒன்றிணைந்தால் நாட்டுக்கு நன்மை என்கிறார் கோத்தபாய.

# கோத்தாவின் யோசனை சிக்குவாரா மைத்திரி?

■ வந்தியத்தேவர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள்ஜனாதிபதிமஹிந்தவும் கைகோர்ப்பதன் மூலம் நாட்டைக் காப்பாற்ற முடியும். உறுதியான அரசை அமைக்க முடியும் என்பது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கண்டுபிடிப்பாகும். நாடாளுமன்றத் தேர்தலை விரைவில் நடத்தி மஹிந்தவைப் பிரதமராக நியமிப்பதன் மூலமாக அந்த இலக்கை முடியும் என்பதும் அவரது கருத்தாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ நீதியும் நல்லாட்சியும் கொண்ட இலங்கையே தனது இலக்கு என்கிறார். மஹிந்தவின் இலக்கு சர்வாதிகாரம் மிக்க குடும்ப ஆட்சியே என்பதை கடந்த பத்துவருட ஆட்சியில் இந்த நாடு கண்டுகொண்டது. அபிவிருத்தித் திட்டங்கள் முடங்கினால் அவற்றை எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால் நாடே சீரழிந்து குட்டிச்சுவராகிப் போய் விட்டால் அதைக் கட்டி நிமிர்த்துவதென்பது முடியாத காரியம்.

பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம் கொடுத்து தப்பித் தவறிப் பிழைத்துக்கொண்ட மக்களைக் காப்பாற்ற மைத்திரி எடுத்த முயற்சிகள் ஓரளவுக்கென்றாலும் மக்களுக்கு ஆறுதலையும் அமைதியையும் தரும் என்று எதிர்பார்க்கும் வேளையில், மக்களால் விரும்பத்தகாத மஹிந்தவின் ஆட்சி நோக்கிய இலக்கு சாத்தியமானால் நாடு எங்கே போகும்?

ஒரு நல்ல நோக்குள்ளவர் தவறான கோட்பாடுகளைக் கொண்டவருடன் கூட்டமைத்தால், அது ஆபத்தாகவே முடியும். பதவியை இழந்துபோனதில் வருத்தப்பட்டு வேதனையில் துடிக்கும் முன்னாள் ஜனாதிபதி இதிலிருந்து விடுபடுவதற்கு எதைச் செய்வதற்கும் தயங்க மாட்டார். தற்போது இதற்கு எண்ணெய் வார்ப்பது போன்று அவரது சகோதரர் கோத்தபாய, மைத்திரியோடு சேர்ந்து இலக்கை அடையலாம் என்ற யோசனையை அண்ணனுக்கு வழங்கியுள்ளார். மிதவாதியான மைத்திரியை எப்படியாவது தமது வலைக்குள் சிக்க வைக்கலாம் என்று கோத்தபாய எண்ணியிருக்கலாம். இந்திய அரசின் உதவியுடன் தமிழ் மக்களை அழித்தவர் மஹிந்த. தமிழர்களை வதைத்த சிங்களத் தலைவர்களில் தான் முதன்மையானவர் என்ற இடத்தை மஹிந்த தக்க வைத்துக் கொண்டுள்ளார். இந்த நிலையில் மஹிந்தவுடன் மைத்திரி கைகோர்க்க வேண்டும் என்பதன் மூலமாக கோத்தபாயவின் சூழ்ச்சி நன்கு தெரிகின்றது. ஆட்சி அதிகாரம் உள்ள பிரதமர் பதவியில் மஹிந்த அமர்வதன் மூலமாக ஜனாதிபதி மைத்திரியின் செல்வாக்கைத்தளர்த்தி மீண்டும் மஹிந்த முன்னணிக்கு வரக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதாலேயே இருவரும் ஒன்றிணைந்தால் நாட்டுக்கு நன்மை என்கிறார் கோத்தபாய.

தேர்தல் சமயத்தில் மஹிந்தவால் தனது குடும்பத்துக்கு ஆபத்து வரலாம் என்பதைத் தெரிந்து கொண்டு, தனக்குப் பாதுகாப்பைத் தேடிக் கொண்ட மைத்திரிபால சிறிசேன கோத்தபாயவின் கருத்துக்கு முக்கியத் துவம் வழங்கி மஹிந்தவுடன் இணைந்து கொள்ள முன்வருவாரா? அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பார்கள். இணைவதால் ஏற்படக்கூடிய இடர்கள் தொடர்பாகவும் அவரால் புரிந்து கொள்ள முடியும். கோத்தபாயவின் கருத்து மஹிந்தவின் பாதுகாப்பை மையப் படுத்தி மட்டுமே வெளியானதல்ல. அவரும் கூட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றார்.

சிறுபான்மை மக்களைக் கொடுமைப்படுத்துவதில் அவரும் முன்னணியில் இருந்துள்ளார். நாடு தவறான வழிநோக்கிச் செல்லக் காரணமாக இருந்த ஒருவரது கருத்தை நாட்டின் அரசுத் தலைவர் ஏற்றுக்கொண்டு அவர் வழியில் செல்வாரா?

அனைத்துலக ஆதரவையும் மீளப் பெற்றுக்கொண்டு மிகவும் மோசமான சூழ்நிலைகளால் ஆசியாவின் அதிசயமாக மாறிய இலங்கையை அமைதியும் அழகும்கொண்ட நாடாக மாற்றப் போவதாக ஜனாதிபதி மைத்திரி உறுதிமொழி வழங்கியுள்ளார். அதற்காகவே ஜனாதிபதி வேட்பாளராக நின்று வெற்றி பெற்ற ஒருவரிடம் மாறான சித்தாந்தங்களைக்கொண்ட மற்றொருவரை இணைத்துக்கொண்டு அரசை நடத்திச் செல்வோம் என்று கேட்பது உகந்ததல்ல.

இவ்வறான கோரிக்கை சிறுபான்மை மக்களைக் குழப்பி, நாட்டில் மீண்டும் ஓர் அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவித்துவிடும்.



# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் பொதுத் தேர்தல்


> சிறுபான்மையின மக்களைப் பொறுத்தவரையில், மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவதை அவர்கள் ஒருபோதுமே விரும்ப மாட்டார்கள். ஏனென்றால் மஹிந்தவின் ஆட்சியில் அனுபவித்த துயரங்களை அவர்கள் இன்னமும் மறக்கவில்லை. தென்பகுதியில் வசிக்கின்ற முஸ்லிம் மக்களும், வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களும் திட்டமிடப்பட்ட வகையில் அரசின் ஆசீர்வாதத்துடன் இம்சைக்குள்ளாக்கப்பட்டனர்.

● சேரலாதன்

இன்று படித்தவர்கள் தொடக்கம் பாமரர் வரை உச்சரிக்கும் ஒன்றாக 19 ஆவது திருத்தம் மாறியுள்ளது. ஜனாதிபதியின் சில அதிகாரங்களை இல்லா தொழிப்பதும், சுதந்திரமான ஆணைக் குழுக்களை நிறுவுவதும் இந்த 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதற்கு ஐக்கிய தேசி யக் கட்சி உட்பட வேறு சில கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் ஒரு பிரிவினர் எதிர்க்கின்றனர். ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் சில பிரதமரின் கைகளில் சென்றடைவதற்கான சாத்தியங்கள் உள்ளதன் காரணமாகவே இவர்கள் எதிர்ப்புத் தெரி விப்பதாகவும் கூறப்படுகின்றது. அதிலும் தற்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவிடம் அதிகாரங்கள் செல்வதை இவர்கள் விரும்பவில்லை.

இந்த நிலையில் 19ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணை தோற்கடிக்கப்படுமாயின் நாடாளுமன்றம் உடனடியாகவே கலைக்கப்படுமென பிறிதொரு செய்தி கூறுகின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, அடுத்ததொரு அரசியல் மோதல் நிலை நாட்டில் ஏற்படக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபாடு காட்டி வருகின்றார். தென்பகுதியில் அவரை ஆதரிப்பவர்கள் பெரு மளவில் உள்ளதை சமீப கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போஷகர்களில் ஒருவராக மஹிந்த இருப்பதும் மைத்திரி தலைவராக உள்ளதும் விநோதமான குழப்பங்களுக்கு வழி வகுக் கப்போகின்றது. கொள்கை ரீதியில் முரண்பட்ட இந்த இருவரும் நாடாளுமன்றத் தேர்தலை ஒரே கட்சிக்குள் இருந்தவாறு எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர் என்பதும் கேள்விக் குறியாக உயர்ந்து நிற்கின்றது.


தம்மீதும் தம் மைச் சார்ந்தவர்கள் மீதும் தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டுக்களி லிருந்து தப்பிக்க வேண்டுமானால் தாம் மீண்டும் ஆட்சிக்கு வருவதே ஒரே வழியென்பதை மஹிந்தர் தெரிந்துகொண்டிருப்பார். இதற்கு ஏற்றாற்போன்றே அவரது அரசியல் காய்நகர்த்தல்களும் அமைந்துள்ளன. பிரதமர் பதவியே இவரது குறியாகவும் இருக்கலாம். சிறு பான்மை அரசு ஒன்றின் பிரதமராகப் பதவி வகிக்கும் ரணில் விக்கிரம சிங்கவின் பதவி நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அடுத்து இடம் பெறப்போகும் நாடாளுமன்றத்தேர்தலில்சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிகூடிய ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டால் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே பிரதம ராகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்புக்கள் உள்ளன. அது மஹிந்த ராஜபக்ஷவாகக் கூட இருக்கலாம். 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்குரிய முக்கிய அதிகாரங்கள் பிரதமரின் கைகளுக்குச் செல்ல விருப்பதால் நாட்டை மீண்டும் தம்வசப்படுத்தி வைத்துக்கொள்ளக் கூடியவராக மஹிந்த மாறிவிடுவார். கடந்து சென்ற இருண்ட யுகம் மீண்டும் இதன் மூலமாக புத்துயிர் பெற்றுவிடும்.



அண்மையில் நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் நடந்துகொண்ட விதம் இந்த நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. நாடாளுமன்றத்தையே அவமதிக்கும் விதமாக அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. ஆனால் இது தொடர்பாக சபா நாயகரோ வேறு முக்கியஸ்தர்களோ கண்டனம் எதுவும் தெரிவிக்காது மௌனம் சாதித்து வருகின்றமை இதனை ஆமோதிப்பது போன்றே காணப்படுகின்றது. இந்த நாட்டின் ஜனநாயகத்துக்கு வீழ்ந்த பேரிடியாகவும் இதனைக் கருத முடியும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறாயினும் இரண்டாக உடைந்துவிடும். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினால் தேர்தலில் இலகுவாக வெற்றியீட்ட முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கனவு கண்டு வருகின்றார். இவரது கனவு நனவாகலாம் அல்லது கனவாகவே முடிந்தும் விடலாம். உண்மையைக் கூறுவதென்றால் நாட்டின் அரசியல் நிலைவரம் இடியப்பச் சிக்கலாகவே மாறிவிடப்போகின்றது என்பதில் சந்தேகமே இல்லை.

சிறுபான்மையின மக்களைப் பொறுத்தவரையில், மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவதை அவர்கள் ஒருபோதுமே விரும்பமாட்டார்கள். ஏனென்றால் மஹிந்தவின் ஆட்சியில் அனுபவித்த துயரங்களை அவர்கள் இன்னமும் மறக்கவில்லை. தென்பகுதியில் வசிக்கின்ற முஸ்லிம் மக்களும், வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களும் திட்டமிடப்பட்ட வகையில் அரசின் ஆசீர்வாதத்துடன் இம் சைக்குள்ளாக்கப்பட்டனர். முன் னைய அரசு நினைத்திருந்தால் இவற்றைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் முன்னைய அரசு தமிழர்கள் குறித்து கணக்கில் எடுக்கவே இல்லை. ஆகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நடந்ததைப் போன்று நாடாளுமன்றத் தேர்தலிலும் சிறுபான்மையின மக்கள் மஹிந்தவுக்கு எதிரான முடிவையே எடுக்கப் போகின்றனர். இது தேர்தல் முடிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் விடப்போவதில்லை. ஆனால் சிறுபான்மையினக் கட்சித் தலை வர்களின் துரித செயற்பாடுகளின் மூலமாகவே மக்களின் விருப்பத்தைப் பூரணமாக நிறைவேற்றி வைக்க முடியும். இந்த நிலையில் எதிர்வரும் நாள்கள் இந்த நாட்டின் தலைவிதி யையே தீர்மானிப்பவையாக அமையப் போகின்றன. தாம் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து வரும் ஜனாதிபதி மைத்திரிபால அதற்கு முற்றுப் புள்ளி வைப்பாரா என்பதும் விரைவில் தெரிந்துவிடும்.



# மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 30 | 60 | 30 | 60 | 40 |
| கத்தரி | 60 | 50 | 60 | 50 | 50 | 60 | 50 |
| கரட் | 100 | 110 | 120 | 120 | 120 | 120 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40 | 50 | 45 |
| பயிற்றை | 50 | 60 | 30–60 | 80 | 80 | 40 | 80 |
| பாகல் | 80 | 80 | 100 | 100 | 80 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 80–100 | 80 | 60 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 100 | 90 | 85 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 50–100 | 70–80 | 60 | 100 | 80 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 25 | 40 | 40 |
| தக்காளி | 30 | 50 | 40 | 50 | 50 | 120 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 70 | 40 | 70 | 60 |
| கீரை | 20 | 30 | 30 | 20 | 30 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 40 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 25 | 50 | 40 | 50 | 40 | 80 | 40 |
| புடோல் | 40 | 60 | 40–60 | 60 | 40 | 30 | 60 |
| கோவா | 30 | 40 | 40 | 40 | 25–30 | 20 | 40 |
| வெண்டி | 50 | 60 | 30–60 | 80 | 60–80 | 40 | 60 |
| போஞ்சி | 150 | 120 | 120 | 140 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 240 | 140 | 160 | 180 | 140 | 140 | 125 |
| தேங்காய் | 60 | 45 | 60 | 60 | 40 | 90 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 | 80–120 | 160 | 80 |
| தேசிக்காய் | 200 | 140 | 150–200 | 180 | 160 | 60 | 120–160 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 – 100 | 120 | 80 | 120 | 80–100 |
| இராசவள்ளி | 120 | 120 | 40 | 120 | 80–100 | – | 120 – 180 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 650 | 700 | 400 | 600 | 700 |
| நண்டு | 250 | 300 | 300 | 200 | 400 | 350 |
| கணவாய் | 500 | 600 | 600 | 400 | 400 | 600 |
| பாரை | 550 | 500 | 450 | 400 | 380 | – |
| சுறா | 500 | 500 | 600 | 400 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 300 | 350 | 400 |
| விளை | 600 | 400 | 450 | 300 | 350 | 400 |
| முரல் | 250 | 300 | 350 | 250 | 300 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 250 | 300 | 350 |
| கிழாக்கன் | 450 | 600 | 400 | 150 | 350 | – |
| ஒரா | 400 | 250 | 450 | – | – | – |
| திரளி | 200 | 250 | 300 | 150 | – | 200 |
| நகரை | 200 | 250 | 300 | 200 | 300 | 200 |
| சூடை | 150 | 150 | 150 | 100 | 80 | – |
| ஒட்டி | 250 | 150 | 250 | – | 250 | – |
| திருக்கை | 150 | 350 | 250 | 100 | 150 | 200 |
| பாலை | 400 | 250 | 400 | 300 | – | 100 |
| வாளை | 100 | 100 | 350 | 200 | – | – |
| கொய் | 100 | 150 | 100 | 100 | – | 100 |
| மதனம் | 150 | 200 | 200 | 300 | 250 | 200 |

## வெண்ணெய் சாப்பிடுவது நல்லதா?

உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் உணவுப் பொருள்களில் வெண்ணெயும் ஒன்று. பாலில் அடங்கி உள்ள அநேக ஊட்டச்சத்துகள் வெண்ணெயிலும் காணப்படுகிறது.

வெண்ணெயில் விற்றமின்–ஏ சத்து அதிகமான அளவில்காணப்படுகின்றது. இது தைராய்ட் மற்றும் சிறுநீரக நோய்களுக்கு சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி அளிப்பதாகும்.

லாரிக், லிசிதீன் போன்ற அமிலங்கள் வெண்ணெயில் நிறைந்துள்ளன. இவை உடலில் கொழுப்புகளை சேரவிடாமல் விரைவில் செரிக்கச் செய்கின்றன.



மேலும் உட லைப் பூஞ்சை தொற்றுநோய்களில்இருந்து பாதுகாக்கிறது.

உடலுக்கு சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் பல்வேறு சத்துக்கள்;நிறைந்து காணப்படுகின்றன. இவை உடலில் ஏற்படும் நோய்க் காரணிகளைப் போக்கி உடலைக் காக்கின்றன.

வெண்ணெயில் 'விற்றமின்–ஈ' மற்றும் 'வைட்டமின்–கே' குறிப்பிட்ட அளவில் காணப்படுகின்றன. இவை பல்வேறு உடற்செயல்களில் பங்கெடுக்கின்றன, மேலும் நோய் எதிர்ப்பாற்றலை வழங்கக்கூடியவை.

எளிதில் செரிமானமாகும் கொழுப்புச் சத்துகள் வெண்ணெயில் நிரம்பி உள்ளன. இவை உடலுக்கு சக்தி அளிப்பதுடன் உடலைப் புற்றுநோய் மற்றும் திசு சிதைவுகள் ஏற்படாமல் காக்கவல்லது.

பற்களை வலுப்படுத்தும் 'விற்றமின்–டி' மற்றும் கல்சியம் சத்துகள் வெண்ணெயில் நிறைந்துள்ளன.

குழந்தைகளின் உணவுப் பொருள்களுடன் வெண்ணெய் சேர்த்துக் கொள்வதால், அவர்களின் நரம்பு மண்டலங்கள் சீராக இயங்குகின்றன. அதிலுள்ள கொழுப்பு அமிலங்கள் மூளை தொடர்பான பல நோய்களைத் தடுக்கின்றன.

## நாளை

**சித்திரை-16**
**புதன்கிழமை**
**29.04.2015**

திதி: ஏகாதசி பி.இ.03.11 வரை
நட்சத்திரம்: பூரம் பி.இ.02.08 வரை
சுபநேரம்: 04.28-05.53 வரை
இராகுகாலம்: 11.53-01.28 வரை

## சுகப் பிரசவத்துக்கு தேன் சிறந்தது

கர்ப்பிணிப் பெண்கள் ஏழாவது மாதம் முதல் சாதம் கொதிப்பதில் முதல் கொதி வந்ததும் அந்தக் கொதிநீரில் ஒரு டம்ளர் எடுத்து சிறிது பணங்கற்கண்டு சிறிது வெண்ணெய் சேர்த்துக் குடிக்க வேண்டும். சிறிது வெந்தயம் சிறிது பச்சரிசி 5 பல் பூண்டு மூன்றையும் குழைய வேகவைத்து கடைந்து குடிக்கலாம்.

பாலுடன் பூண்டை உரித்துப் போட்டு நன்கு வேகவைத்து கடைந்து இரவில் இதனைச் சாப்பிடலாம். கர்ப்பிணிப் பெண்கள் மாதுளம் பழம் ஜூஸ் குடிக்கலாம். தாய், சேய் இருவருக்கும் இது மிகவும் சிறந்தது மட்டுமில்லாமல் இரத்தம் விருத்தியாகும்.

கர்ப்பிணிப் பெண்கள் ஒன்பதாவது மாதம் முதல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குருந்தோட்டி வேர் கஷாயம் குடிக்கலாம். சோம்பை சிறிது வறுத்து தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து கருப்பட்டி சேர்த்து ஒன்பதாம் மாதம் முதல் குடிக்க வேண்டும்.

இரவில் படுக்கும் முன் வெதுவெதுப்பான நீரை இடுப்பு, கால்களுக்கு ஊற்றி கொள்ள வேண்டும். பிரசவவலி எடுத்தவுடன் தேனை எதுவும் கலக்காமல் நேரடியாக உள்ளுக்குள் சாப்பிடவேண்டும். மீதமுள்ள தேனை கருஞ்சீரகப் பொடி கலந்து வயிற்றைச் சுற்றித் தடவினால் எந்த வித சிரமமும் இன்றி சுகப்பிரசவம் ஏற்படும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | | | 9 | | 7 | 5 | |
| | | | 3 | | | | | 1 |
| 1 | | | 4 | 5 | 6 | | | 8 |
| | | | 5 | | | | 7 | 2 |
| | 8 | | 1 | 4 | 7 | | 3 | |
| 7 | 5 | | | | 8 | | | |
| 9 | | | 6 | 2 | 3 | | | 4 |
| 5 | | | | | 4 | | | |
| | 4 | 1 | | 8 | | | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 7 | 5 | 6 | 9 | 3 | 8 | 2 |
| 2 | 5 | 9 | 3 | 8 | 4 | 1 | 7 | 6 |
| 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 5 | 4 | 9 |
| 1 | 2 | 4 | 9 | 3 | 6 | 8 | 5 | 7 |
| 9 | 8 | 5 | 4 | 7 | 2 | 6 | 1 | 3 |
| 7 | 3 | 6 | 1 | 5 | 8 | 9 | 2 | 4 |
| 5 | 4 | 1 | 6 | 2 | 3 | 7 | 9 | 8 |
| 6 | 9 | 8 | 7 | 4 | 1 | 2 | 3 | 5 |
| 3 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உண்மைக்குப் பயமில்லை

கைம்மாறு கருதாமல் பிறருக்கு உதவுபவனே உயர்ந்த மனிதன்.

ஆன்மிகத்தில் நாட்டம் வைத்தால் உண்மையான இன்பத்தை அடையலாம். உண்மையைப் பின்பற்றுபவர்கள் எவருக்கும் பயப்படத் தேவையில்லை.

மனத்தூய்மை இருக்குமானால், இந்தப் பிறவியிலேயே கடவுளை அடைய முடியும். ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற சக்தியும், தூய்மையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கிறது. நீங்கள் எதை நம்புகிறீர்களோ, அதுவாகவே மாறி விடுவீர்கள்.

## மகரம்

தாயின் வழியில் நன்மைகள் உண்டாகும். உங்களை விட்டு விலகியிருந்த தாய் வழி உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, உங்கள் நன்மதிப்பை உயர்த்திக் கொள்வீர்கள். அதிகமான பயணங்களை மேற்கொள்ள நேரிடும். எந்த வயதினருக்கும் புதிதாக ஒரு கல்வியோ, கலையோ பயில வாய்ப்புண்டாகும். சிலருக்கு வெளியூர் சென்று படிக்கும் வாய்ப்புகளும் கிடைக்கும். செய் தொழிலில் வளர்ச்சி உண்டாகும். சரியான நேரத்தில் ஆகாரம் உட்கொண்டு, ஒவ்வாத உணவுகளைத் தவிர்த்தாலே போதும்; நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.
நண்பர்களிடம் கோபப்படாமல் நடந்துகொண்டு அவர்களின் உறவைத் தக்க வைத்துக் கொள்ளவும்; அது தக்க சமயத்தில் உதவும். ஆரோக்கியமான எண்ணங்கள் சிறகடித்துப் பறக்கும்.



# மன்மத வருட பலன்கள்

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்களின் மனதில் சிலரது போக்கினால் வருத்தங்கள் ஏற்பட்டாலும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் செயல்படுவீர்கள். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது. சுதந்திரமாகச் சிந்தித்துத் தனித்துச் செயல்படுவீர்கள். உங்களைவிட்டு எதிரிகள் விலகுவார்கள்; புதிய உறவுகள் மலரும். அவர்கள் உங்கள் செயல்களுக்கு அரணாகத் திகழ்வார்கள்.சிலர் புதிய திட்டங்களை நடைமுறைபடுத்துவார்கள். வருமானம் பெருகும். இதனால் புதிய சேமிப்புத் திட்டங்களிலும் ஈடுபடுவீர்கள். அதேநேரம் எவரிடமும் உங்கள் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். அனைத்து விடயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். பங்கு வர்த்தகத்தில் லாபம் குவியும். அந்த லாபத்தை எதிர்காலத்திற்காகச் சேமிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்வீர்கள்.
தந்தை வழியில் சில அனுகூலங்களைக் காண்பீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எதிர்பாராத இடங்களிலிருந்து பண வரவு உண்டாகும். மனதில் அமைதி நிலவும். நிம்மதியாக உறங்குவீர்கள். உடல் உபாதைகள் முழுமையாகத் தீர்ந்துவிடும். குடும்பத்திலும் மருத்துவச் செலவுகள் ஏற்படாது. வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும். ஆன்மிகச் சிந்தனையுடன் வாழ்க்கையை நடத்துவீர்கள்.



**உத்தியோகத்தர்களுக்கு**
விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் சம்பளம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர்வும், மனதிலிருந்த குழப்பமும் மறையும். இதனால் உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்பு பாராட்டுவார்கள். அலுவலகத்தில் சிறப்பான பயிற்சிகளைக் கற்றறிந்து வெற்றியடைவீர்கள். வியாபாரிகள், போட்டியாளர்களின் தடைக்கற்களைக் கடக்க சற்று போராட வேண்டியிருக்கும். கூட்டாளிகளை நம்பாமல் நீங்களே முன்னின்று செயற்பட்டால் வியாபாரத்தில் ஏற்படும் குளறுபடிகளைத் தவிர்க்கலாம்.

**கலைஞர்களுக்கு**
அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும். திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தாமாகவே அமையும். பொருளாதார வசதிகளில் முன்னேற்றம் ஏற்படும். ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

**பெண்களுக்கு**
குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். நன்கு யோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து சேமிப்புகளில் கவனம் செலுத்தவும். கடுமையான சொற்களை உதிர்க்காமல் நிதானமாகப் பேசவும்.

**மாணவர்களுக்கு**
படிப்பில் ஏற்படும் இடையூறுகளைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். தெளிவான மனதுடன் படித்து நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். நண்பர்களும் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அதேசமயம் விளையாட்டுகளில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெற முடியாமல் போகும்.

**அதிர்ஷ்ட எண்கள்: 2, 6, 9**
**அதிர்ஷ்ட திசைகள்: கிழக்கு, வடக்கு**
**அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, புதன், வெள்ளி**
**அதிர்ஷ்ட மாதங்கள்: வைகாசி, புரட்டாசி, தை**
**கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள்: ஆவணி, மார்கழி**



# திருமணத்திற்கு முன்னதாக புரிதல் அவசியம்

காதல் திருமணமோ, நிச்சயிக்கப்பட்ட திருமணமோ எதுவென்றாலும் திருமணத்திற்கு முன்னதாக சில விசயங்களைப் பேசி தெளிவுபடுத்திக் கொண்டால்பின்னாளில் சிக்கல்கள் எழ வாய்ப்பில்லை. காதலித்துத் திருமணம் செய்து கொண்டால் கூட சில சமயங்களில் அதிக அளவிலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் புரிதல் இல்லாத காதல்தான். எனவே தம்பதியராகும் முன் ஒருமுறைக்கு இருமுறை நன்றாகப் பேசி புரிந்து கொள்ள வேண்டும். திருமணம் முடிந்து சில மாதங்களி லேயே சொந்தங்கள், சுற்றத்தார்கள் கேட்கக் கூடிய கேள்வி எப்போ குழந்தை என்பதுதான். குழந்தை வளர்ப்பு என்பது பொறுப்பான விஷயம். தம்பதிகள் இருவரும் அதில் சரிசமமாகப் பொறுப்பேற்க வேண்டும். பொருளாதார நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே திருமணமானதும் எத்தனை ஆண்டுகள் கழித்து குழந்தை பெற்றுக் கொள்ள விரும்புகிறீர்கள் என்ற எண்ணத்தை மறைக்காமல் வெளிப்படுத்தி விடுங்கள். கணவனோ, மனைவியோ உடனே பெற்றோர் ஆக விரும்பலாம். அடுத்தவர் அதைத் தள்ளிப் போட நினைக்கலாம். எனவே எல்லாவற்றையும் யோசித்து, நன்றாகக் கலந்தாலோசித்து இறுதி முடிவெடுங்கள். பண விவகாரத்தை முறையாகக் கையாளவில்லை என்றால் அது கணவன்– மனைவி உறவில் பெரும் குழப்பத்தையும், மனக்கசப்பையும் ஏற்படுத்தும். எனவே இதற்குஅதிக முக்கியத்துவம் கொடுங்கள். பொறுமையாக விவாதியுங்கள். வங்கிக் கணக்கைப் பொறுத்தவரை நீங்கள் கூட்டுக் கணக்கை விரும்புவீர்களா, அல்லது தனிக் கணக்கை விரும்புவீர்களா? வீட்டுச் செலவுக்கு உங்களின் பங்கு என்ன? என்பது குறித்து இருவரும் முன்பே பேசி முடிவுக்கு வந்து விடுவது நல்லது. பணத்தை எப்படிச் செலவழிக்க வேண்டும் என்பதில் கணவன்– மனைவிக்குஇடையே கருத்து வேறுபாடு உருவாக அதிக வாய்ப்பு இருக்கிறது. உங்களின் வாழ்க்கை முறை எப்படி என்று திருமணத்துக்கு முன்பே விரிவாக, தெளிவாகப் பேசி விடுங்கள். கடவுள் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, நாம் நல்லவராக வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் கொண்டவராக நீங்கள் இருக்கலாம். ஆனால் உங்களின் வாழ்க்கைத் துணையாக வருபவர் அதீத தெய்வ பக்தி கொண்டவராக இருக்கலாம்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் உங்களால் சரியாக ஒத்துப்போக முடியுமா? என்பதை இருவரும் பேசி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் கணவனும், மனைவியும் கடவுள் விஷயத்தில் வேறு வேறு நம்பிக்கை கொண்டவர்களாக இருந்து அவரவர்களின் நம்பிக்கையை குழந்தைகளின் மீது திணிக்க முயலும்போது நிலைமை மேலும் மோசமாகலாம். எனவே உங்கள் வாழ்க்கைத் துணையுடன் வாழ்க்கை சுமுகமாகப் போக உங்கள் துணையின் கடவுள் நம்பிக்கையை அறிந்துகொள்வதும், கடவுள் நம்பிக்கையில் உங்களின் நிலையைத் தெளிவுபடுத்து வதும் முக்கியம்.
நீங்கள் ஆடைகளுக்கும், சுற்றுலா செல்வதற்கும் கணக்குப் பார்க்காமல் செலவழிக்கக் கூடியவராக இருக்க, உங்களின் துணை அதெல்லாம் வீண் செலவு என்று கருதுகிறவராக இருந்தால் அங்கே பிரச்சினை எழலாம்.
நீங்கள் உங்களின் சொந்த சம்பாத்தியத்தில் அவற்றில் ஈடுபடுகிறேன் என்று கூறினாலும் நிச்சயம் பிரச்சினை உருவாகும். எனவே தாலி கட்டும் முன்பே சில விசயங்களை தெளிவுபடுத்திக்கொண்டு நமக்கு ஒத்து வரும் என்று தெரிந்தால் மட்டுமே மண வாழ்க்கையில் இணைவது நல்லது.




# காதல், காதல்...., வந்தால் பின்னர்...!

காதல் செய்துவிட்டு, ஏன் செய்தோம் என்று பலர் வருத்தப்படுவதுண்டு. காதலில் விழுந்துவிட்டால், சுதந்திரமாக எதையும் செய்ய முடியாது. எதைச் செய்வதாக இருந்தாலும், காதலனிடம் அனுமதி பெற வேண்டியிருக்கும். எனவே திருமணம் செய்வதற்கு முன், காதலில் விழாமல் இருந்தால், பிடித்த அனைத்தையும் எந்த ஒரு இடையூறும் இல்லாமல் மேற்கொண்டு, ஜாலியான வாழ்க்கையை வாழலாம். அதிலும் பெண்கள் வெட்கப்பட்டு, அனைத்தையும் பொறுத்துக் கொண்டு இருந்த காலம் எப்போதோ மாறிவிட்டது. தற்போது பெண்களும் அனைத்தும் அவர்களது விருப்பத்துடன் இருக்க வேண்டுமென்று நினைக்கின்றனர். குறிப்பாக தற்போதுள்ள பெண்களுக்கு சுதந்திரம் அவசியமாகிவிட்டது. பெண்கள் காதலில் விழாமல் இருந்தால், எந்த மாதிரியான சந்தோஷத்தை அடையலாம் என்று பார்க்கலாம்....
காதல் செய்யாமல் இருந்தால், எந்த ஒரு செயலை செய்ய நினைத்தாலும் எவரிடமும் அனுமதிப் பெற வேண்டிய அவசியம் இல்லை. நினைத்ததை எந்நேரத்திலும் பயமின்றி, தடையின்றி செய்யலாம். நாம் செய்யும் செயல் காதலருக்கு பிடிக்கவில்லை என்றால் இருவருக்குள்ளும் சண்டை ஏற்பட வழிவகுக்கும்.
பெண்களுக்கு ஷாப்பிங் என்றால் மிகவும் பிடிக்கும். சில பெண்களுக்கு அதுவே பொழுதுபோக்காக இருக்கும். எனவே தனி ஒரு பெண்ணாக இருந்தால், எந்நேரமும் சந்தோஷமாக ஷாப்பிங்கிலேயே இருக்கலாம். ஆனால் ஆண்களுக்கு ஷாப்பிங் என்றால் பிடிக்காது. ஏனெனில் பர்ஸ் காலியாகி விடும் என்று நினைப்பார்கள்.
காதல் செய்யாமல் இருந்தால், அலுவலகத்தில் நல்ல ஆர்வத்துடன் வேலை செய்யலாம். அதிலும் அலுவலகத்தில் கொடுத்துள்ள இலக்கை அடைய எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வேலை செய்ய முடியும்.
காதல் வந்துவிட்டால் நண்பர்களுடன் நேரம் செலவழிக்கவே முடியாது. ஆனால் காதலில் மட்டும் விழாமல் இருந்தால், நண்பர்களுடன் எங்கு வேண்டுமானாலும், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சந்தோஷமாக செலவழிக்கலாம்.
சில ஆண்கள், தங்களது காதலியை அவர்களது ஆண் நண்பர்களுடன் பேசவே அனுமதிக்கமாட்டார்கள். ஆனால், தனி ஆளாக இருந்தால், எப்போது வேண்டுமானாலும், ஆண் நண்பர்களுடன் பேசலாம்.



# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# ஆறாவது கோள்



சூரியக் குடும்பத்திலுள்ள ஒன்பது கோள்களில் 6ஆவதாக இருப்பது சனி. இது சூரியனில் இருந்து சுமார் 142 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 29 வருடங்களை எடுத்துக் கொள்கிறது. தன்னைத்தானே சுற்றிவர 10 மணி நேரம் எடுத்துக் கொள்கிறது. வியாழனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய கோள் சனியாகும். சனிக்கிரகத்துக்குள் சரியாக 763 பூமிகளை அடக்கி விடலாம் என்றாலும், சனியின் எடை, பூமியின் எடையை விட 95 மடங்கு தான் அதிகம். சனி ஒரு வாயுக்கோளம். அதில் கடினமான உட்பகுதி மிகச்சிறியது. சனியின் ஈர்ப்பு விசை பூமியிலிருந்து அதிகம் வேறுபடவில்லை. சுமார் 1.17 மடங்கு அதிகமாக உள்ளது. பூமியில் 70 கிலோ எடையுள்ள ஒருவர் சனியில் 82 கிலோ இருப்பார். சூரியனில் இருந்து வெகு தொலைவில் இருப்பதால் சனியின் சராசரி வெப்பநிலை மிக மிகக் குறைவு. காற்று மண்டலத்தில் அமோனியா உறைந்து போவதால், கோளின் மேற்பரப்பு முழுவதும் பனிப் பிரதேசமாகவே காணப்படுகிறது. பிற கோள்களில் காணப்படாத ஒரு தட்டையான வளையம் இந்தக் கோளின் நடுப்பகுதியில் சுற்றி உள்ளது என்பது தான் இதன் சிறப்பு.

# நம்பினால் நம்புங்கள்!

பனிக்கட்டிகளில் 90 சதவீதம் காற்றுதான்!

உலகின் மிக லேசான பாலூட்டி 'பம்பிள்பி பேட்' என்கிற வெளவால். இதன் எடை 2 ஜெம்ஸ் மிட்டாய்கள் அளவுக்குத்தான் இருக்கும்!

அந்துப்பூச்சிகளால் பல கிலோ மீற்றர் தொலைவிலிருந்தும் பரஸ்பர வாசனையை உணர முடியும்.

தன் சிலையை தானே உருவாக்கியிருக்கிறார் ஹானானுமா மஸாகிச்சி என்ற ஜப்பானிய சிற்பி. தன்னுடைய முடி, பற்கள் மற்றும் நகங்களையே பயன்படுத்தி அச்சு அசலாக அவரையே செய்தது தான் விசேடம்!


சில வகை தவளைகளால் 50 அடி உயரம் கூட காற்றிலே மிதக்க முடியும்.

சில நத்தைகள் 3 ஆண்டுகள் வரை கூட தொடர்ந்து உறங்கும்.

வெட்டுக்கிளிகள் மனிதனைப் போல பெரிய உருவமாக இருந்தால், அவை ஒரே தாவலில் ஒரு கூடைப்பந்து மைதானத்தையே கடந்து விடும்!

அலிகேட்டர் முதலைகள் 80 ஆண்டுகள் வரை வாழும்.

# நன்றி மறவாத கிளி



பல பறவைகள் ஒரு மரத்தில் கூடு கட்டி, அதில் பழுக்கும் பழங்களை உண்டு மகிழ்ந்து வந்தன. ஒரு சமயம் மழையில்லாமல்,மரம் வாட ஆரம்பித்தது..அதன் இலைகள் உதிர்ந்தன. பூக்கவில்லை பழுக்கவில்லை அம்மரங்கள். அம்மரத்தை நம்பி, அது காய்க்கும் பழங்களை நம்பி வாழ்ந்த பறவைகள் வேறு இடம் தேடி பறக்க ஆரம்பித்தன. ஒரு கிளி மட்டும், அந்த மரத்தை விட்டுப் போகாமல் அந்த இடத்தில் இருந்தது. பட்டினியால் வாடியது..தினமும் கடவுளை வேண்டியது. ஒரு நாள் கடவுள் அந்தக் கிளி முன் தோன்றி, 'தினமும் என்னை வேண்டுகிறாயே...உனக்கு என்ன வேண்டும் என்றார். 'இறைவா! இந்த மரம் மீண்டும் பூத்து ..காய்க்க வேண்டும் என்றது கிளி.. 'இந்த மரத்தைப் பற்றி யோசிக்காது...மற்றப் பறவைகள் போல் நீயும் பறந்திருக்கலாமே என்றார் கடவுள். அதற்குக் கிளி.. 'இந்த மரம் பழுத்து இது நாள் வரை எங்களை காத்தது...இன்று இது தண்ணீர் இன்றி துன்பப்படுகிறது... இச்சமயத்தில் நம்மைக் காத்ததை மறந்து..இதை விட்டு பறந்தால் அது சுயநல மில்லையா..பாவமில்லையா' என்றது கிளி. கிளியின் சுயநலமற்றத் தன்மையைப் போற்றிய இறைவன்..அம்மரம் மீண்டும் தழைக்க..மழையை பொழியவைத்து அருளினார். ஒருவர் செய்த நன்றியை மறக்காது..அவர்கள் துன்புறும்போது அவர்களுடன் சேர்ந்தே ஆறுதலாய் இருக்கவேண்டும்.

# எல்லாம் பணமயம் கூடவே வரும் பயம்

பணம் ஒரு மிகப்பெரிய ஆயுதம். அது நமது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமானது என்று எல்லோருக்கும் தெரிந்தது தான். கடவுள் படைத்த இந்த அற்புத உலகில் மனிதன் சக்தி வாய்ந்தவன் என்று சொன்னால், மனிதன் படைத்ததில் மிக மிக சக்தி வாய்ந்தது 'பணம் ' என்று சொன்னால் மிகையாகாது. பஞ்சபூதத்தில் இதை ஆறாவதாக சேர்த்துக் கொள்ளலாம். ஏனென்றால் இதை ஆக்கத்துக்கும், அழிவுக்கும் பயன்படுத்தலாம். அதாவது யோசனைகளை 'தீ' விளக்காக இருக்கும் வரையில் அது மற்றவர்களுக்கு ஒளி தந்து உதவுகிறது. அதுவே பெரிய நெருப்பாக பற்றி எரியும் போது , தீ உருவான இடத்தையும் அதைச் சுற்றியுள்ள இடத்தையும் அழிக்க வல்லது. பணம் அளவோடு இருக்கும் வரையில் அது அமைதியாக இருக்கச் செய்கிறது. அளவுக்கு அதிகமாகும் போது அது தனது விஸ்வரூபத்தை காட்ட ஆரம்பிக்கின்றது. பணம் நீ கையாளுவதை பொறுத்து தெய்வமாக கருணை காட்டும். அதுவே சாத்தானாக மாறி தீமையை உண்டாக்கும். பணம் நமது மனப்பான்மை , நம்பிக்கை மற்றும் வளர்க்கிறது. ஆனால் எப்போதும் பணம் இருக்கும்போது உன்னைப்பற்றியும், பணத்துக்கும் உனக்குமுள்ள உறவை பற்றியும் தெளிவாக மனதில் வைத்துக் கொள். பணம் தேவையான அளவு இருந்தால் நாம் சொல்வதை பணம் கேட்கும். தேவைக்கு அதிகமாக இருந்தால் அது சொல்வதை நாம் கேட்கவேண்டியிருக்கும். பணம் அமைதியைக் கெடுக்கவல்லது. குணத்தை மாற்றவல்லது. உறவுகளை எதிரியாக நினைக்கச் சொல்கிறது. நட்பை பகையாய் பார்க்கச் செய்கிறது. அன்பை அரக்கத்தனமாய் நினைத்துப் பார்க்கிறது. மரியாதை உள்ளவர்களை அவமதிக்கிறது. 'நான்' என்கிற அகந்தையும் , தலைக்கணமும் வளர்க்கிறது. ஆசையை பேராசையாக மாற்றி அழிவுப் பாதையில் அழைத்துச் செல்கிறது. பையில் பணம் கூடக்கூட மனதில் 'கணம் ' கூட ஆரம்பித்து விடுகின்றது. பணத்தைக் கொண்டு பொருள்களை விலைக்கு வாங்கமுடியும். ஆனால் குணத்தை வாங்க முடியாது. அதாவது அன்பு, கருணை, பாசம், நேசம், இரக்கம் , கல்வி மற்றும் வீரம் முதலியவைகள்



. பணம் நமக்கு அடிமையாக இருக்கவேண்டுமென்றால எண்ணத்தில் கவனம் இருக்க வேண்டும், காட்டுகின்ற உணர்வில் உண்மை இருக்கவேண்டும், செயல்கள் சத்தியப் பாதையில் இருக்கவேண்டும், செயல்களின் விளைவுகள் நன்மை தரக்கூடியதாய் இருக்கவேண்டும். பணம் இருக்கும் போது நீ எதைப் பார்க்கிறாயோ அதைக்கொண்டு தீர்ப்பு சொல்லாதே. சிந்தித்து செயற்படு. எப்போதும் உன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதில் விழிப்புடன் இரு. வாழ்க்கையில் நீ முன்னேறும்போது உனது குணம் மிளிர்கின்றதா என்பதை உறுதிசெய்துகொள். பணம் உன்னிடம் ஒட்டியிருக்கும் வரை மற்றவர்கள் உன்னிடம் ஒட்டியிருப்பார்கள். பணம் உன்னைவிட்டு விலகி விட்டால் நீ மற்றவர்களிடம் ஒட்டிக் கொள்ள வேண்டியிருக்கும்.

பணத்தின் மீது நமது கவனம் கூடக் கூட அது போகும் திசையிலெல்லாம் நம்மை இழுத்துக்கொண்டு செல்லும். அப்போது தான் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். மனிதன் 'நார் ' என்றால் பணத்தை 'பூ ' என்று என்று சொல்லலாம். அதாவது மனிதனுக்கு மதிப்பு பணத்தால் மட்டுமே வருகின்றது. பணமுள்ளவனிடத்தில் குணமும் இருப்பது தான் மிகவும் சிறப்பு. அது தான் மனிதனை தெய்வமாக காட்டும். 'பணம்' சம்பாதிப்பது 'மரம் ' நடுவதற்குச் சமமாகும். அதாவது நட்டவனுக்கு பலன் தருவதைக்காட்டிலும் மற்றவர்களுக்கு அதிக பலன் கொடுக்கின்றது. பணத்தை சம்பாதிக்க வேண்டும்! அதேசமயத்தில் குணத்தை இழக்காமல்!.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**இரும்புக் கம்பிகள் விற்பனைக்குண்டு**
கிளிநொச்சி A9 வீதி, ஓரமாக உடைக்கப்பட்ட கட்டடத்திலிருந்து மீளப்பெறப்பட்ட கணிசமான அளவு கம்பிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 7732364

# 450 பணியாளருக்கு 4 ஆம் திகதி தீர்வு

## ஹலோ ட்ரஸ்ட் அறிவிப்பு



கிளிநொச்சி, ஏப். 28

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் பணியாற்றி தற்போது பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட 450 பணியாளர்களுக்கும் எதிர்வரும் 4ஆம் திகதி தீர்வு வழங்குவதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலையில் ஈடுபட்ட 750 பணியாளர்களில் 450 பேர் சில நாள்களுக்கு முன்னர் பணியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு பணியில் இருந்து நிறுத்தப்பட்ட 450 பணியாளர்களும் மீண்டும் தங்களைப் பணியில் அமர்த்துமாறு கோரிக் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது வருகைதந்த ஹலோ ட்ரஸ்ட் நிறுவன நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர், நிறுவனத்தின் ஒப்பந்த காலம் முடிவடைவதன் காரணமாகவும், நிதி கிடைக்காமையினாலுமே இந்த ஆட்குறைப்பு இடம்பெற்றுள்ளதாகவும், 300 பணியாளர்களைக் கொண்டு இருக்கும் வேலைகளை முடிக்கவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள், தற்போது பணியில் இருக்கும் 300 பணியாளர்களுடன் எங்களையும் உள்வாங்கி ஒப்பந்த காலம் முடியும் வரை இருக்கும் வேலைகளைச் செய்து முடிக்க அனுமதிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தனர். பின்னர் நேற்றுத் திங்கட்கிழமை இதற்கு ஒரு முடிவு கூறுவதாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் வாக்குறுதி வழங்கிய தன் பின்னர் ஆர்ப்பாட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அதைத் தொடர்ந்து பணியாளர்கள் மீண்டும் நேற்றுத் தீர்க்கமான முடிவை வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வருகை தந்த ஹலோ ட்ரஸ்ட் நிறுவன அதிகாரிகள் எதிர்வரும் நான்காம் திகதி தீர்க்கமான முடிவை வழங்குவதாகவும், இன்று மாலை இது குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற உள்ளதாகவும் தெரிவித்தனர். (த-21)

## முருகுப்பிள்ளை சுவாமிகளின் ஜெயந்தி தினம் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.28

மௌனகுரு சிவஸ்ரீ முருகுப்பிள்ளை சுவாமிகளின் 110 ஆவது ஜெயந்தி தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

(த-14)

**வாணிபம் பதவி வெற்றிடம்**

பதவி : வெளிக்கள உத்தியோகத்தர்
வெற்றிடங்கள் : 30
தகைமை : 18 வயதுக்கு மேல் உள்ள, A/L படித்த ஆண்/பெண் இருபாலாரும்
சம்பளம் : ரு 10,000 + EPF + ETF + இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

01.05.2015 ஆம் திகதிக்கு முன்னர் உங்களின் சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தை கீழ் காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

முகாமையாளர்
Vanipam Publication,
"கௌரிவாசா",
அம்பாள் கோவிலடி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
தொ.பே.இல: 0768661583

A charity organization immediately requires to fill the below position for a Technical Officer in Jaffna Office.

**Technical Officer**

**Qualification for the above vacancy :-**

- NDT with five years of experience in building construction or NCT with ten years of experience in building construction or Equivalent qualification with matching experience
- Ability to handle multi task sites, including managing external service providers
- Ability to work under minimum supervision and extended hours if required
- Willingness to work in site conditions
- Holding a valid driving license for motor bike.
- Fair knowledge of English
- Additional qualification - AutoCAD package
- Age between 30-40 years
- Female candidates can also apply

Please forward you're CV with two non related referees to the Email address or by Post.

**Contact person:-Project Manager**
**Contact No:-0214920335**
**Email:paramdhamnnallur@yahoo.com**
**Address: Paramdham, 375, Temple Road, Nallur, Jaffna.**

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலரால் யாழ் மாவட்டச் செயலக நான்கு மாடி நிர்வாக கட்டடம் கட்டம்VI, ஆண்கள் பெண்களுக்கான கூட்டு விடுதி கட்டம்-I, சங்கானை பிரதேச செயலகம் மூன்று மாடி மேலதிக நிர்வாக கட்டடம் கட்டம்-II கட்டட வேலைக்காக் தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 28.04.2015 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலரம் என்பதுடன் உதவி மாவட்டச் செயலாளர், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 28.04.2015 முதல் 15.05.2015 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக் கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 18.05.2015 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 18.05.2015 திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும்' கேள்விப்பிணை பொறுப்பு 120 நாள்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JK/ADM/11/Con.Work/ADM. BLOCK(VI | யாழ். மாவட்டச் செயலக நான்கு மாடி நிர்வாகக் கட்டடம் கட்டம்-VI | 14.91 | 06 மாதம் | C6 | 150,000.00 | 1000/= |
| JF/ADM/11/Con.Work. M.Quarters | யாழ். மாவட்டச் செயலக ஆண்கள் கூட்டு விடுதி கட்டம்-I | 13.02 | 06 மாதம் | C6 | 131,000.00 | 1000/= |
| JF/ADM/11/Con. Work/ F.Quarters | யாழ். மாவட்டச் செயலக பெண்கள் கூட்டு விடுதி கட்டம்-I | 13.02 | 06 மாதம் | C6 | 131,000.00 | 1000/= |
| JK/ADM/11/Con.Work/ADM. BLOCK (CHAN-II) | சங்கானை பிரதேச செயலக மூன்று மாடி மேலதிக நிர்வாகக் கட்டடம் கட்டம்-II | 7.20 | 04 மாதம் | C7 | 73,000.00 | 1000/= |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

**A SERVICE OF REMEMBRANCE AND THANKSGIVING**

A service of Remembrance and thanksgiving for the life and work of

**Mrs. G. E. S. Chelliah**
*(Principal Emeritus, Chundikuli Girls' College, Jaffna)*

Venue : St. John the Baptist's Church, Chundikuli
Date : Thursday, 30th April, 2015
Time : 5.00 p.m.

*The presence and prayers of Old Girls, Parents and Friends will be greatly appreciated on this occasion.*

Chundikuli Girls' College
Jaffna

# மிதி பலகையில் பயணித்த நடத்துநர் தூக்கி வீசப்பட்டு கழுத்து முறிந்து சாவு

யாழ்ப்பாணம், ஏப், 28

மினி பஸ் மிதிபலகையில் நின்று பயணித்த பஸ் நடத்துநர் மதவடியில் தூக்கி வீசப்பட்டதால் கழுத்து எலும்பு உடைந்து வைத் தியசாலையில் உயிரிழந்தார்.

மானிப்பாய் சந்தியை அண்மித்து மதவடியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

தொட்டிலடி சண்டிலிப்பாயைச் சேர்ந்த அரிகர ராஜன் தினேஸ் குமார் (வயது 21) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்.நகரிலிருந்து காரைநகர் நோக்கிச் சென்ற பஸ்ஸின் நடத்துநராக இருந்த அவர் குறித்த மதவடியில் வீதி பள்ளமும் திட்டியுமாக இருந்ததால் அந்த இடத்தில் பஸ் ஏறி இறங்கிய போது தூக்கி வீசப்பட்டுள்ளார். அவ்வாறு வீசப்பட்டவர் மதகருகில் இருந்த இரும்புக் கம்பத்தில் மோதுண்டு விழுந்துள்ளார். வெளிக்காயம் எதுவும் இல்லாத போதும் கம்பத்தில் அவரது கழுத்துப் பகுதியே அடிபட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அவர் உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலைக்குக்கொண்டு செல்லப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்றுக் காலை உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (த-4)

# நேபாள மக்களுக்கு உதவி வழங்குங்கள்


நேபாளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கவுள்ளோர் இலக்கம் 28, கோயில் வீதி முதலாம் ஒழுங்கை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் வழங்கி உதவுமாறு யாழ். விழிப்புலனற்றோர் சங்கச் செயலாளர் வி.கனகசபை கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:- கடந்த 25 ஆம் திகதி நேபாளத்தில் இடம் பெற்ற பூமி அதிர்வினால் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தும் காயங்களுக்கு உள்ளாகியும்சொத்துக்கள் உடைமைகளை இழந்தும் உள்ளனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு எமது சங்கத்தினூடாக உதவிப் பொருள்களைச் சேகரித்து அங்குள்ள மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே உலர் உணவுகளான கருவாடு, ரின்மீன், அத்தியாவசிய உணவுப் பொருள் களான சிறுவர், முதியோர்க்கான பால்மா வகைகள், ஓடிக்கொலோன், பம்பஸ் மற்றும் புதிய உடைகள் என்பனவற்றைச் சேகரித்து வழங்கவுள்ளோம்.வார நாள் களில் முற்பகல் 9 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் சனிக்கிழமை மதியம் ஒரு மணிவரையும் வழங்கலாம். அல்லது யாழ். நவீல்ட் வீதியில் உள்ள தொழில் பூங்காவில் வழங்கலாம். குறுகிய நாள் களுக்கிடையில் அவற்றை வழங்குமாறும் மேலதிக விபரங்களை 021222 7336, 077 47737 65, 077 374 1201, 078 9990 214 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் கேட்டுள்ளார். (த-4)

# எனது எச்சரிக்கையை மீறி நாட்டுக்கு வந்தார் பஸில்

*கூறுகிறார் மஹிந்த*



கொழும்பு, ஏப். 28

ஆட்சியில் நான் இருந்திருந்தால், பீடாதிபதிகளின் இறுதிக் கிரியைகளைக் கூட வெகு சிறப்பாகச் செய்திருப்பேன் என்று, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார். மேலும், இலங்கைக்கு வந்தால் கைது செய்வார்கள் என்று எச்சரித்தும் அதனையும் மீறியே, பஸில் ராஜபக்ஷ வந்ததாகவும் மஹிந்த இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

மாத்தளையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது சகோதரன் பஸில் அமெரிக்காவில் இருக்கும்போது, அவரைத் தொடர்பு கொண்டு நான் கதைத்தேன். அப்போது, இலங்கைக்கு மீண்டும் வரவேண்டாம், அவ்வாறு வந்தால் கைது செய்வார்கள் என்று நான் அறிவுரை கூறினேன். நான் களவு செய்யவில்லை. நான் வராமலிருப்பது மஹிந்தஅண்ணனான உங்களுக்கு அவமானம். அதனால் நான் இலங்கைக்கு வருவேன் என்று அவர் எனக்கு பதிலளித்தார்.

ஆனால், நான் அவனிடம் சொன்னது போலவே நடந்தேறிவிட்டது. இருப்பினும் பரவாயில்லை. நானும் 3 மாதங்கள் சிறையில் இருந்தவன். நாடாளுமன்ற உறுப்பினரொருவர் ஓரிரு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்து வந்தால் தவறில்லை.

அஸ்கிரிய பீடாதிபதியின் இறுதிக் கிரியைகள் எவ்வாறு நடைபெற்றது என்பதனை நான் பார்த்தேன். ரோஹனவன்ச நாயக்கத் தேரரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றதனையும் நான் பார்த்தேன். நான் ஆட்சியில் இருந்திருந்தால் இறுதிக் கிரியைகளை வெகு சிறப்பாக செய்திருப்பேன்.

மத்திய வங்கியில் 41 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. காலி - கொழும்பு அதிவேகப் பாதைக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலும் ஒன்பது மடங்குக்கு மேலான பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது. இது குறித்து யாரும் பேசுவதில்லை - என்றார் மஹிந்த. (த-5)

## மரண அறிவித்தல்கள்

### இராசையா கனகராசா



கோண்டாவில் வடக்கு, சிவபூதவராயர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் புது றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகராசா நேற்று (27.04.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், தவஞானத்தின் அன்புக் கணவரும், கண்ணனின் (கனடா) அன்புத் தந்தையும், சண்முகராசா (சுவிஸ்), சந்திரலேகா (கோண்டாவில்), செல்வராசா (வவுனியா), காலஞ் சென்ற புஸ்பவல்லி மற்றும் தருமராசா (சுவிஸ்) ஆகியோரின் சகோதர ரும், பாக்கியலட்சுமி (சுவிஸ்), நாகலிங்கம் (கோண்டாவில்),காலஞ்சென்றவர்களான பார்வதிப் பிள்ளை (வவுனியா), திருநாவுக்கரசு (வவுனியா) மற்றும் தவமலர் (சுவிஸ்) சிவம், கிருபா (பிரான்ஸ்) காலஞ்சென்ற அனுரா ஆகியோரின் மைத்துனரும், தாசன், பகீரதன் (டென்மார்க்), நிமலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **கண்ணன்** (மகன்)
T.P: 021 492 5645,
0774672668

### காசிப்பிள்ளை நடராசா



வங்கியடி இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நடராசா நேற்று (27.04.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- ஆச்சி யம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான சின்னையா-தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சிவஞானபூரணம், இராசநாயகம், செல்லாபரணம் ஆகியோ ரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற காசிவேந்தன் (முன்னாள், முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி மகா சங்கம் உடுவில்) மற்றும் காசிக் குமரன் (லண்டன்), காயத்திரிதேவி (கனடா), காஞ்சனாதேவி (ஜேர்மனி), காசினிதேவி (ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி), கௌசலாதேவி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பலோஜினி (முகாமையாளர், சமுர்த்தி வங்கி இணுவில்), ஜெயபாரதி (லண்டன்), பத்மஸ்ரீ (கனடா), ரவீந்திரன் (ஜேர்மனி), வித்தகன் ஆகி யோரின் மாமனும், வேந்தினி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), நாவேந்தன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), சுவேதன், நமிர்தா (லண்டன்) ஆகியோரின் அப்பப்பாவும், கஜோஜன், ஆருஜன் (கனடா), பிரவீகா, அபிசகா, அறிவகன் (ஜேர்மனி), சர்வகன் ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உ.ற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில். தகவல். குடும்பத்தினர்.**

### திருமதி சீவரத்தினம் ( நாகம்மா ) கணபதிப்பிள்ளை



நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும், வலிகண்டி, குடத்தனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சீவரத்தினம் கணபதிப் பிள்ளை நேற்று (27.04.2015 ) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியின் அன்பு மகளும், நாகமணி கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், கண்மணி கனகரத்தினம் (ஓய்வுநிலை நீதிமன்ற ஊழியர்) யோகாம்பிகை தர்மகுலசிங்கம் கோணேஸ்வரி அம்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் இலங்காராணி விஜயரத்தினம் விஜயராணி தெய்வேந்திரம் (பருத்தித் துறை பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், யோகராசா கணேஸ் ஜெயராணி சிவகுமார் புஷ்பரர்ணி சிவசுதன் (ஆசிரியர் யாழ்.இந்துக் கல்லூரி) சிவகரன் ( லண்டன் ) மைத்தா (ஆசிரியை வவுனியா சின்ன அடம்பன்) ஜெயராஜ் தியாகினி (இத்தாலி) விஜயகுமார் சசிகுமார் (யாழ்மாவட்ட நீதிமன்றம்) மனோரதி அஜித்குமார் மாயகுமார் (சாவகச்சேரி நீதிமன்றம்) டனிஷா (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி ) கபிஷா டினோ (பிருந்தன்) குமணன் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி) கஜந்தா (கனடா) சுரேகா (யாழ்.பல்கலைக்கழகம் ) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2015) செவ்வாய்க் கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடத்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு, மீசாலை.
0773609008

தகவல்: **சுதன்** (பேரன்)
(ஆசிரியர்)

## மரண அறிவித்தல்கள்

### பேராசிரியர் சாகித்யரத்னா கனகசபை அருணாசலம்



அல்லாரை தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை பேராசிரியர் கனகசபை அருணாசலம் நேற்று ( 27.04.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதி ( ஓய்வுநிலை ஆசிரியை மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் ) யின் அன்புக் கணவரும் பாலமயூரன் (உறுப்பினர் - நகரசபை சாவகச்சேரி ) கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அர்ச்சுனா ( இணைப்பு விரிவுரையாளர் மருத்துவபீடம் கொழும்பு ) வின் அன்பு மாமனாரும் அக்கிலீஸ் இன் அன்புப் பேரனும் மனோன்மணி சுந்தரலிங்கம் ( ஓய்வுநிலை ஆசிரியர்) தேவமணி முத்துலிங்கம் ( ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மயில்வாகனம் சற்குகானந்தன் கனகரத்தினம் (ஓய்வுநிலை இ.போ.ச.சாரதி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை வடக்கில் உள்ள அவரது இல்லத்தில இன்று ( 28.04.2015 ) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்: **அ.பாலமயூரன்.**
உறுப்பினர்-சாவகச்சேரி நகரசபை
077 210 5672



### திருமதி செல்லம்மா(சின்னமணி) கந்தையா

யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்பொழுது பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய திருமதி செல் லம்மா கந்தையா (19.04.2015) பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற விவேஸ்வரி (அக்கம்மா) மற்றும் விஸ்வேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ் வரன் (புண்ணியன் ) மற்றும் கௌசலாதேவி (நீர்வேலி), விமலேஸ்வரி (குலம்- பிரான்ஸ்), உருத்திரகுமாரி (சூரி- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், தியாக ராஜா, ஞானேஸ்வரி, ஜெயலக்ஷ்மி, காலஞ்சென்ற கந்தசாமி (ஆசிரியர்) மற்றும் விமலானந்தன், விக்னராஜா ஆகியோரின் பாசமிகு மாமியும், சுதந்திகா-காண்டீபன், சுதர்னன் - சற்சுகுமாரி, சுதர்சன் - தயாளினி, சுயாத்தன்-சோபிதா, உமேஸ் காந்-பிரசாந்தினி, கஜபாநதி - சஜீவ்சந்தா, சதீஸ்-தாரகா, யசிந்தன், சஞ்சீவ்-தனுசியா, துளசி-மனோரஞ்சன், கீதானு, கேசவன், கௌரி - செந்தூரன், சுமங்கவி, வலந்தன், வைஷ்ணவி, விவியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சுவேதா, சுஜிதா, சுருதிகா, விகேஸ், சயானா, கிசானா, றியான்சி, மக்ஸ்லன், என்சோ, யனிஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2015) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 - பி.ப. 1.30 வரை Pompes funebres Et Morbrerie Lescarcelle, 55 Rue pe Boissy Saint Leger, 91480 Quincy Sous Senart France ல் இடம் பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் (Rematorium De La Fontaine Saint Martin 7 Avenue Fontione St. Martin 94460 Valenton, France என்னும் இடத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**யாழ்ப்பாணம். தகவல். குடும்பத்தினர்.**

### கைத்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



பிறப்பு 23.07.1930 — இறப்பு 26.04.2015

மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும், மணற்காட்டை வதிவிடமாகவும் கொண்ட கைத்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளைநேற்று முன்தினம் (26.04.2015) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைத்தாம்பிள்ளை - மேரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - கிறிஸ்ரீனா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியராக்கினியின் அன்புக் கணவரும், சுசிலா (மணற்காடு), அன்ரன் (இத்தாலி), ஜெஸ்லின் (மணற்காடு), காலஞ்சென்ற விற்மன் (இத்தாலி) மற்றும் டெக்சி (பிரான்ஸ்), கலிஸ்ரா (மணற்காடு), கொலின் (லண்டன்), சலுசா (சுவிஸ்) ஆகியோரின் தந் தையும், காலஞ்சென்ற மாகிரேற்றின் சகோதரனும், காலஞ்சென்ற றோக்கின் மைத் துனரும், பாக்கியராஜ் (இத்தாலி), நிர்மலா (இத் தாலி), அமலதாஸ் (மணற்காடு), கமலா (இத்தாலி), விஜயன் (பிரான்ஸ்), அகஸ் ரின் (ஆசிரியர், மணற்காடு), நிசாந்தி (லண்டன்), நெல்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.04.2015) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மணற்காடு கல் லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல். அகஸ்ரின்
[மருமகன்-ஆசிரியர், மணற்காடு றோ.க.த.க.பாடசாலை].

# ஹைதராபாத்தின் பந்துவீச்சுப் பலத்தால் பஞ்சாப்புக்கு மீண்டும் அடி

வோர்ணரின் அதிரடியான அரைச் சதமும் போல்ட்டினதும் புவனேஸ் குமாரினதும் வேகமும் கரன் சர்மாவின் சுழலும் கைகொடுக்க 20 ஓட்டங்களால் பஞ்சாப்பை பந்தாடியது ஹைதராபாத்.

ஹைதராபாத் எதிர் பஞ்சாப் அணிகளுக்கிடையிலான ஆட்டம். இயல்பாகவே ஹைதராபாத்தை விட பலம் பொருந்திய அணி பஞ்சாப் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் பஞ்சாப் தொடர்ந்தும் பலமான நிலையிலேயே உள்ளது என்று சொல்லிக்கொள்ள முடியாது. ஏனெனில் சென்னைக்கு எதிரான ஆட்டத்தில் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை நிலைத்துநின்றும் வெறும் 95 ஓட்டங்களையே பெற்றது. இதனால் ஹைதராபாத்துக்கும் வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் ஹைதராபாத்தை துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க களத்தில் தவானுடன் வோர்ணர். முதல் பந்துப்பரிமாற்றத்தையே முழுவதுமாக வீணடித்து ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றமாக மாற்றினார் வோர்ணர். நெருக்கடியை சமாளிப்பதற்காக அடித்தாட தவான் முற்பட்ட வேளையில் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். விகாறி ஒன்பதுடன் பவிலியன் திரும்ப அணியைத் தாங்க வேண்டிய பொறுப்புடன் களத்தில் ஹென்றிக்ஸிம் வோர்ணரும். தடுமாற்றத்தில் இருந்து விலகி சற்று அடித்தாட முற்பட்டார் வோர்ணர். மறுமுனையில் ரி–20 என்பதையே மறந்து நிதானித்துக் கொண்டிருந்தார் ஹென்றிக்ஸ். பத்துப் பவுண்டரிகளின் உதவியுடன அரைச்சதம் கடந்தார் வோர்ணர். இமாலய சிக்சர் ஒன்றும் வோர்ணரின் இன்னிங்ஸில் இருக்கத் தவறவில்லை. அரைச்சதத்துடன் வோர்ணர் ஆட்டமிழந்ததும் ஓயா ஹென்றிக்சுடன் இணைந்து ஹென்றிக்ஸின் நிதானப் பாணியிலேயே பயணித்துக் கொண்டிருந்தார். இலக்குச் சரிவு தற்காலிகமாகத் தடுக்கப்பட்டாலும் ஓட்டங்கள் பெறப்பட்டபாடில்லை. 32பந்துகளில் ஹென்றிக்ஸ் தனது இன்னிங்ஸை முடித்துக்கொள்ள போபாரா வந்த வேகத்திலேயே பவிலியனுக்கு திரும்பினார். இறுதிக்கட்ட போராட்டங்களும் ஓரளவு கைகொடுக்க முடிவில் ஹைதரபாத் 150–6.

பஞ்சாப்புக்கு 151 என்பது ஒரு இலக்கில்லை. ஆனால் சென்னையுடன் அடைந்த தடுமாற்றம் ஹைதராபாத்துடன் தொடர்ந்து விட்டால் பஞ்சாப் பஞ்சாய்ப் பறக்கும். புவனேஸ் குமார், பிரவீன்குமார், போல்ட் என்ற ஹைதராபாத்தின் பந்துவீச்சு வரிசை மிகவும் பலம்வாய்ந்தது. கேள்விக்குறி யான பஞ்சாப்பின் வெற்றி வாய்ப்புக்களுடன் களத்தில் முரளி விஜய் யுடன் வோகாரா. 5 ஓட்டங்களுடன் போல்ட்டின் பந்தில் போல்டானார் வோகாரா. அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே மார்ஷ் போல்ட்டாக்கினார் புவனேஸ்குமார். சென்னைக்கு எதிரான ஆட்டம் நிச்சயம் ஒருதடவை பஞ்சாப்பின் கண்முன்னே வந்து போயிருக்கும். இலக்குச் சரிவுக்கு ஏற்ப விஜய் ஒரு முனையில் நிதானித்து நிலைத்து நின்றார். ஆனால் பெய்லியோ அடித்து நொருக்கி விடுவது என்ற முடிவில் ஓரிரு பவுண்டரிகளை விளாசினார். அவராலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. பெய்லி ஆட்டமி ழந்த அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் விஜய்யும் ஆட்டமிழக்க பஞ்சாப்பின் நிலைமை பரிதாபமாகமாறியது. தற்பொழுது பஞ்சாப்பின் கடைசி நம்பிக்கை மில்லரிலும் சகாவிலும் மட்டுமே. மில்லர் பதின்ம ஓட்டங்களைத் தாண்ட வில்லை. 12.2 பந்துப்பரிமாற்றங் கள் நிறைவில் பஞ்சாப் 72–5. சரணாகதி என்ற விளிம்பில் நின்ற பஞ்சாப்பை அக்சர் பட்டேலுடன் இணைந்து போராட வைத்தார் சகா. ஆனாலும் பஞ்சாப்பின் இறுதிக் கட்டப் போராட்டங்களும் கைவிட்டுப் போக முடிவில் 20 ஓட்டங்களால் ஹைதராபாத் வெற்றியீட்டியது. (ரி)





## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னைமடி 03.07.1949

இறைமடி 30.03.2015

அமரர் பெரியதம்பி தணிகாசலம்

கடந்த 30.03.2015 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவன் அமரர் பெரியதம்பி தணிகாசலம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (29.04.2015) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எமது தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலிகள் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், மேலும் பல வழிகளிலும் எமக்கு உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

த.சுநிஞ்சிக்குமரன் (மகன்)
ஆசிரியர் மு/அம்பலவன் பொக்கணை ம.வி
மற்றும் குடும்பத்தினர்.

மு/புதுக்குடியிருப்பு.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு: ★ 29 . 01 . 1945

இறப்பு: ★ 29 . 03 . 2015




தம்பையா இராமலிங்கம்

கடந்த 29.03.2015 இறைபதமடைந்த தம்பையா இராமலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.04.2015) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மத்தி, தாலையம்பதி வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
T.P: 0772719846

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 03 . 1972

மறைவு 26 . 04 . 2007

அமரர் தங்கராசா ரமணன்

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா - ரமணா
உந்தன் திருமுகம் காண

தங்கநிலா, வதிரி.

குடும்பத்தினர்.

## அர்ஜுனா விருது ரோகித் சர்மாவுக்கு?

இந்திய விளையாட்டு விருதுகளில் ஒன்றாக விளங்கும் ஆண்டுக்கான அர்ஜுனா விருதுக்கு நடப்பாண்டின் சிறந்த வீரர் என்றஅடிப்படையில் ரோகித் சர்மாவின் பெயரை பரிந்துரை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை 21 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடி உள்ள ரோகித்சர்மா, 3 சதம் மற்றும் 5 அரைச் சதம் அடித்துள்ளார். சராசரியாக 55 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதனால் அவரின் பெயர் பரிந்துரைக்கப்படுகிறது. டோனி, கோஹ்லி, சச்சின், கங்குலி, லக்ஸ்மன், ட்ராவிட் ஆகிய வீரர்கள் இந்தவிருதை ஏற்கனவே வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## தசாகாதி கிருஹயஜ்ஞ அழைப்பு

உ

நிகழும் மன்மத வருஷம் சித்திரை மாதம் 7ஆம் நாள் (20.04.2015)
திங்கட்கிழமை அமரத்துவமெய்திய எங்கள் குடும்பஜோதி
**பிரம்மஸ்ரீ வாஞ்சீஸ்வரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்**
அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.


சித்திரை 16ஆம் நாள் 29.04.2015 புதன் முற்பகல் 10.00 மணி-தசாகம்.
சித்திரை 17ஆம் நாள் 30.04.2015 வியாழன் காலை-ஏகோதிஷ்டம், மாசிகம்.
சித்திரை 18ஆம் நாள் 01.05.2015 வெள்ளி காலை - சபிண்டீகரணம்.
சித்திரை 19ஆம் நாள் 02.05.2015 சனி மதியம் 12.00 மணி-கிருஹயஜ்ஞம். (சமாராதனை)

எமது இல்லத்தில் நிகழும் மேற்படி கிரியைகளில் பங்குபற்றி ஆத்மசாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

சிவஞானப் பிள்ளையார் கோவிலடி,
சங்குவேலி.

குடும்பத்தினர்.
0776279395

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் ★ 04 . 06 . 1918

மறைவு ★ 05 . 05 . 2014

அமரர்
திருமதி வல்லிபுரம் முத்துப்பிள்ளை

எம்மை பாசத்துடன் அரவணைத்து
வளர்த்து ஆளாக்கி, நல்வழிப்படுத்தி
நல்வாழ்வு அமைத்து இவ் வையகம் தனில்
சிறப்பாக வாழவைத்து, எமக்கெல்லாம்
ஒளி விளக்காய் திகழ்ந்த எம் தெய்வமே
உங்கள் நினைவுகளுடன் நாம் என்றும் வாழ்கின்றோம்.

குழுக்கண்டி லேன்,
கோப்பாய் தெற்கு, இருபாலை.

வ.இரத்தினசிங்கம் (கிளி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்.

## கட்டுக்குள கந்தசுவாமி கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.28
புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்காதேவி(குளத்தடி நாச்சிமார் கோயில்) கட்டுக்குள கந்தசுவாமி திருக்கோயிலின் மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை அதிகாலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (த-14)

## தாய்மார் கழக பிரதிநிதிகளுக்கு கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப்.28
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட தாய்மார் கழகப் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நடைபெறும். தாய்மார் கழகத்திலிருந்து ஒரு பிரதிநிதி வீதம் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி பிரதேசத்தில் 84 அன்னையர் கழகங்கள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.28
அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் சிறப்புப் பூசை வழிபாடுகளில் நாளை புதன்கிழமை சகஸ்ர நாம சங்காபிஷேகமும் தெருவீதி உலாவும் இடம்பெறும். மறுநாள் வியாழக்கிழமை திருக்குளிர்த்தியும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தியும் இடம்பெறும்.
எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு திருவிழா நிறைவுற்றதுடன் சமய அறிவுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நடைபெறும். (த-14)

## பேராசிரியர் அருணாசலம் காலமானார்

தென்மராட்சி.ஏப்.28
சாவகச்சேரி அல்லாரை தெற்கைச் சேர்ந்த பேராசிரியர் கனகசபை அருணாசலம் நேற்று காலமானார். இலங்கை இந்தியப் பல்கலைக் கழகங்களில் 40 வருடங்களாக விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணியாற்றிய இவர் மாணவருக்குத் தேவையான பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளார்.
இந்து கலாசார அமைச்சினால் தேசிய சாகித்திய விருதும், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சினால் மாகாண சாகித்திய விருது, இலங்கை கலாசார அமைச்சின் சாகித்திய இரத்தினம் விருது, கண்டி கலை இலக்கிய மன்றம் இரத்தின தீபம் விருதும், பேராதனை தமிழ்த் துறையின் அருணன் என்னும் விருது, தென்மராட்சி பிரதேச செயலகத்தின் கலை, கலாசார, விருது ஆகியவை உட்பட பல்வேறு பட்டங்களும் கௌரவ விருதுகளும் இவர் பெற்றுள்ளார். திடீரென ஏற்பட்ட நோய் காரணமாக யாழ் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர் நேற்று உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# எமக்கென்று ஒதுக்கப்பட்ட வீடுகள் எங்கே?

### முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கு மனு



முல்லைத்தீவு, ஏப். 28
முற்று முழுதாக அழிவடைந்த கிராமத்தை முன்னிறுத்திச் சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொண்டு எமது மக்களை அலட்சியம் செய்யும் போக்கை நாம் கண்டிக்கின்றோம். இவர்களை நம்பிய அப்பாவி மக்கள் தகரக் கொட்டில்களிலும், தறப்பாள் கொட்டில்களிலும் இருந்து இன்னல்படுகின்றார்கள் வீடுகள் இல்லாதபடியால் சில மக்கள் அயல் கிராமங்களில் உள்ள உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வசித்த வருகின்றார்கள். எமக்கென ஒதுக்கப்பட்ட 107 வீட்டுத் திட்டங்களும் இல்லாமல் போனதன் மாயம் என்ன? இதற்கு யார் காரணம்? இந்த வீடுகள் எங்கே திசை திருப்பப்பட்டன போன்ற குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய மனு ஒன்று நேற்று முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.
அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
மேற்படி கிராமம் இறுதிப் போரின் போது முற்று முழுதாக அழிவடைந்து துன்பத்தைச் சுமந்து நிற்கின்ற கிராமம் என்பது உலகம் அறிந்த விடயம். பல வருடங்களாகியும் 50 வீதமான மக்களுக்கு வீடு கிடைக்கவில்லை. தற்காலிக வீடு கூடச் சிலருக்கு இல்லை. வீதிகள் எவையும் செப்பனிடவில்லை. வசதிகளோடு வாழ்ந்த மக்கள் இன்று எல்லாவிதமான துன்பங்களையும் அனுபவித்து கொண்டிருக்கின்றார்கள். போர்க் காலத்துக்கு முன்னர் 550 குடும்பங்கள் வாழ்ந்த கிராமத்தில் தற்போது 350 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றார்கள். முதற் கட்டமாக 80 வீடுகள் இந்திய அரசின் வீட்டுதிட்டத்தின் மூலம் யூ.என் கபிரட் நிறுவனம் போன்ற அமைப்பினரால் வழங்கப்பட்டுக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய 50 வீடுகள் கரித்தாஸ், போறூட் நிறுவனங்கள் போன்ற அமைப்புக்களால் வழங்கப்பட்டு முடிவடைந்துள்ளன.
இரண்டாம் கட்டமாக முள்ளிவாய்க்கால் கிழக்கில் 2013 ஆம் ஆண்டு 107 வீடுகள் பயனாளிகளுக்கு புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு பெயர்ப் பட்டியலும் கிராம அலுவலரால் பார்வைக்கு ஒட்டப்பட்டிருந்தது. இந்த வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டபடியால் ஏனைய நிறுவனங்கள் இவர்களுக்கு வீடு கொடுக்க முன்வரவில்லை. ஆனால் இரண்டு வருடங்கள் ஆகியும் இந்த மக்களுக்கு வீடு கிடைக்கவில்லை. பல தடவைகள் முன்பு அரச அதிபராக இருந்த வேதநாயகன் அவர்களோடும், உதவி அரச அதிபரோடும், யூஎன் கபிரட் முகாமையாளருடனும் தொடர்புகொண்டு எமது நிலைப்பாட்டைக் கூறியும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளும் மெற்கொள்ளவில்லை.
எனவே இதற்கு நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகின்றோம். எமக்கு நீதி கிடைக்காவிட்டால் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடருவோம். அதற்கு மேலாக நீதிமன்றத்தை நாடுவோம்- என்றுள்ளது. (த-21)

# இந்தியத் தளபதியின் வருகை ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 28
நேபாளத்தில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமைக்கு முன்னுரிமை கொடுத்துள்ள இந்திய இராணுவத் தளபதி, இதன் காரணமாக இலங்கைக்கான தனது பயணத்தை ஒத்தி வைத்துள்ளார்.
ஐந்து நாள் பயணமாக, இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹக், இலங்கைக்கு நேற்று வரத் திட்டமிட்டிருந்தார். அவருடன், ஐந்து உயர் மட்ட அதிகாரிகளும் இலங்கைக்கு வர திட்டமிடப்பட்டிருந்தது. இவர்கள், உயர்மட்ட அரச தலைவர்கள், பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்திக்கவும், பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்வையிடவும் திட்டமிட்டிருந்தனர்.
எனினும், நேபாளத்தில் ஏற்பட்ட நில அதிர்வை அடுத்து, அங்கு பேரழிவு மீட்புப் பணிகளில் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது. இதனால், இந்திய இராணுவத் தளபதியின் பயணம், நாள் குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டுள்ளதாக இந்திய இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. (த-5)

# சுகாதார தொண்டர்களுக்கு விண்ணப்பம் கோரவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 28
சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவில்லை எனச் சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கிணங்க அரச சுற்றறிக்கை 25/2014 இற்கமைவாக 24.10.2014 ஆம் திகதி தொடர்ந்து 180 நாள்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு நிரந்தர நியமனம் அண்மையில் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சின் கீழான திணைக்களங்களில் தொண்டர் அடிப்படையில் கடமையாற்றிய 850 பேருக்கும் அதிகமானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.
சுற்றறிக்கைக்கு அமைவாக சேவைக் காலத்தினை பூர்த்தி செய்யாதவர்கள் பலருக்கு இந்நியமனம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் நிரந்தர நியமனம் கிடைக்காதவர்களுக்கு நியமனம் வழங்குவதாகக் கூறி சிலரால் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் இதற்காக 12.12.2014 திகதியிடப்பட்ட என்பி/01/02/02/01(1) இலக்கப் பிரதம செயலாளரின் கடிதப்பிரதியுடன் விநியோகிக்கப்பட்ட விண்ணப்படிவத்தின் பிரதிகள் மீண்டும் விநியோகிக்கப்படுவதாக எமது அமைச்சிற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.
இவ்வாறு விநியோகிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு சுகாதார அமைச்சு எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது என அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# பொலிஸார் பக்கச் சார்பு

### பிணையில் வந்தவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 28
அரியாலை திருமகள் வீதியில் வீடு ஒன்றினுள் அத்துமீறிப் புகுந்து ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்த குற்றஞ்சாட்டுத் தொடர்பில் யாழ். பொலிஸார் பக்கச் சார்பாக நடந்துள்ளனர் என்று விளக்கமறியலில் இருந்த வந்த சமுர்த்தி உத்தியோகத்தர் கூறியுள்ளார்.
அரியாலை திருமகள் வீதியின் அருகருகே உள்ளவர்களே அந்தப் பிரச்சினையில் தொடர்புபட்டவர்கள். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எனது உறவினர் வீட்டுக்கு அருகில் உள்ளவர்கள் என்னுடன் முரண்பட்ட நிலையில் இருந்துள்ளனர். அவர்களது வீட்டு மரக்கிளைகள் எனது உறவினர் வீட்டுக்குள் வந்துள்ளன. அது பெரும் இடையூறாக இருந்தது. அதனை அகற்றி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டபோதும் அது நடக்கவில்லை. பதிலாக முரண்பாடே ஏற்பட்டது.
இந்நிலையில் அந்த வீட்டுக்காரரின் மாமன் முறையான ஒருவர் எனது உறவினர் வீட்டுக்குள் அத்துமீறிச் சென்று கேற் கதவை உடைத்ததோடு அங்கிருந்த எனது சகோதரிக்கும் துன்புறுத்தல் விடுத்துள்ளார். அது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தேன். அன்றைய தினம் குறித்த வீட்டுக் காரருடன் அது தொடர்பில் கதைத்துக் கொண்டிருந்தபோது வெளியே நின்றிருந்தவர்கள் குறித்த வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் மீது கல் வீசித் தாக்கியுள்ளனர். அது தொடர்பில் நான் முறைப்பாடு செய்த அதே தினத்தில் அவர்களும் முறைப்பாடு செய்துள்ளனர்.
ஆனால் யாழ்.பொலிஸார் எ[illegible] முறைப்பாடு தொடர்பில் இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறித்த வீட்டுக்காரர் செய்த முறைப்பாட்டின்படி என்னைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி 3 நாள் விளக்கமறியலில் வைத்தனர் என்று தெரிவித்தார். தான் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.
தனது முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் இதுவரை நடவடிக்கை எடுக்காது பக்கச் சார்பாக நடந்துள்ளனர் என்றும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். குறித்த வீட்டுக்காரர் சுற்றுலா விடுதி நடத்துகின்றனர் என்றும் அங்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தங்கிச் செல்பவர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த-4)

# அல்லாரை நிகழ்வில் தமிழில் தேசிய கீதம்

வரணி, ஏப் 28
கொடிகாமம் அல்லாரைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மத்திய அரசின் பிரதி அமைச்சர் ஒருவர் கலந்து கொண்ட நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றும் வைபவம் இடம்பெற்ற சமயம் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் புதிய அரசு அமைக்கப்பட்ட பின் வடக்குப் பிரதேசத்தில் இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்பாகக் கூறப்பட்டது.
கடந்த மாத முற்பகுதியில் கொடிகாமம் அல்லாரைப் பிரதேசத்தில் இயங்கிவரும் தும்புத் தொழிற்சாலையில் பயிற்சி பெற்ற கைவினையாளர்களுக்கான சான்றிதழ் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில், பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டு தேசியக் கொடி ஏற்றிய சமயமே தமிழில் தேசிய கீதம் பாடி, கொடிகாமம் அல்லாரை பாடசாலை மாணவியர் சாதனை நிகழ்த்தினர்.
இந்த நிகழ்வில் கொழும்பு தேசிய வடிவமைப்பு சபையின் தலைவர் எம்.ஏ.எஸ்.எஸ்.கே.சந்திரசிறீ மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர் உட்பட பொரும்பான்மை சமூகத்தினர் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்விலேயே தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமை வரலாற்றுச் சிறப்பாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. (த-122)

# சொந்த நிலத்தில் குடியேற தீபம் ஏற்றிப் பிரார்த்தனை

## வெளியேற்றப்பட்டு 9 ஆவது ஆண்டை நிறைவு செய்தனர் சம்பூர் மக்கள்

திருகோணமலை, ஏப்.28
சம்பூர் பிரதேசத்தில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு நேற்று முன்தினத்துடன் 9 ஆவது ஆண்டை நிறைவு செய்தனர். இந்தநிலையிலேயே தாம் சொந்த நிலத்தில் குடியேற வேண்டும் என்று பிரார்த்தனை செய்துள்ளார்கள்.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அவ்வேளை இராணுவத் தளபதியாகவிருந்த ஜெனரல் சரத் பொன்சேகா கொழும்பில் விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்குள்ளானார். இந்தத் தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக அன்றிரவு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சம்பூர் பிரதேசத்தில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன. அதனை அடுத்து மறுநாள் சம்பூர் பிரதேச மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாட்டில் தற்போது போர் முடிவடைந்து 6 வருடங்களாகி விட்டபோதிலும் சம்பூர் பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேச மக்களின் குடியிருப்புக் காணிகளும், வயல் நிலங்களும் அரச முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், கடற்படை உயர் பாதுகாப்பு பிரதேசம் மற்றும் இந்திய அனல்மின் உற்பத்தி நிலையம் என கடந்த அரசின் பதவிக் காலத்தில் அடையாள மிடப்பட்டு விஷேட வர்த்தமானி பிரகடனம் மூலம் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக சொந்த நிலத்தில் மீள்குடியேற்றம் தடைப்பட்டுள்ள நிலையில் அந்த பிரதேச மக்கள் தொடர்ந்தும் தற்காலிக இடைத்தங்கல் மையங்களில் தங்கியுள்ளார்கள்.

புதிய அரசு பதவியேற்ற நிலையில் குறித்த காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு மீள்குடி யேற்றம் இடம்பெறும்என்றுஅறிவிக்கப்பட்டது. முதல் தொகுதியில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு என அடையாளமிடப்பட்ட 818 ஏக்கர் விடுவிக்கப்பட்டு அந்த பகுதியில் இந்த மாதம் நிறைவடைய முன்பு மீள் குடியேற்றம் நடைபெறும் என மீள்குடியெற்ற அமைச்சால் உறுதிமொழியும் உத்தரவாதமும் அளிக்கப்பட்டு ஒரு மாதமாகிவிட்ட போதிலும் இதுவரை மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே அவர்கள் தற்போது தற்காலிகமாகத் தங்கியுள்ள கிளிவெட்டி, கட்டபறிச் சான் உட்பட இடைத்தங்கல் முகாம்களுக்கு முன்பாக தீபங்களை ஏற்றி வழிபட்டனர். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ்வரனும் கலந்து கொண்டார். (வ)

## காத்தான்குடி பொலிஸ்பிரிவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஏப்.28
மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரீப்புறொக்டர் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து கேரளக் கஞ்சா வைத்திருந்த 37 வயதுடைய குடும்பஸ்தரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 15,000 ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டைச் சோதனையிட்ட போதைப்பொருள் தடுப்பு புலனாய்வுப் பொலிஸார், மேற்படி கஞ்சாவை கைப்பற்றியதுடன் அதனை வைத்திருந்த நபரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வாழைச்சேனை வை.எம்.எம்.ஏ. வீதியைச் சேர்ந்த 57 வயதுடைய குடும்பஸ்தரிடம் இருந்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான இலங்கை கஞ்சா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றப்பட்டு, அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)



நுவரெலியா பிரதான பாதையில் டெல்டா கெமுனுபுர பிரதேசத்தில் மரக்கறி விற்பனை செய்து வரும் கடை ஒன்றில் விற்பனைக்காக வைத்திருந்த கோவாவில் விசித்திர கோவா முட்டை. குறிப்பாக ஒரு வித்திலிருந்து ஒரு கோவாவே விளையும். ஆனால் ஒரு வித்தில் 7 கோவா முட்டைகள் விளைந்திருந்தமை விசித்திரமானதே. (வ)

## பாக். தூதர் திருமலைக்கு



திருகோணமலை, ஏப்.28
இலங்கைக்கான பாகிஸ்தான் பிரதித் தூதர் சர்பாஸ் அகமட் கான் சிபிரா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்துக்கு சென்ற தூதர், அதன் தலைவர் வ.கலைச்செல்வன் தலைமையிலான முதலீட்டாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். பிரதித் தூதர், கைத்தொழில் சம்மேளனத் தலைவருக்கு நினைவுச்சின்னம் ஒன்றையும் வழங்கினார். (வ)

## விழுமியங்களை கற்பிக்கும் பாடநூல் பாடசாலைகளுக்கு

தென்மராட்சி, ஏப்.28
தென்மராட்சி கல்வி வலயத்தால் உருவாக்கப்பட்டு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் சமய பாடத்தினூடாக விழுமியங்களைக் கற்பிக்கும் பாடநூல் வட மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது.

மாணவர்களுக்கு சமயக் கல்வி ஊடாக ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பதற்கென வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் பிரசுரிக்கப்பட்ட 'விழுமியக் கல்வி' என்னும் நூல் தென்மராட்சி கல்வி வலயத் தால் வெளியிடப்பட்டு, கடந்த வருடம் தொடக்கம் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

குறித்த நூலை வட மாகாண கல்வி அமைச்சு வடமாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிப்பதற்கென 5 ஆயிரம் பிரதிகள் தயாரித்துள்ளனர்.

இந்த நூல் விரைவில் மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தெரிவித்தார். (வ-9)

## கூட்டம்

வவுனியா, ஏப்.28
வவுனியா சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலய நிர்வாக சபையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் 2015 ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய் யப்படவுள்ளது. (வ-402)

## மீளக்குடியமர்ந்து 5 வருடங்கள் சேதமடைந்த வீதி திருத்தவில்லை

பளை, ஏப்.28
மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு 5 வருடங்களாகியும் மக்கள் சேதமடைந்த வீதியில் சிரமங்களுக்கு மத்தியில் பயணித்து வருகின்றனர்.

பளைப்பிரதேசத்தில் உள்ள இத்தாவில் சந்தி, ஏ-9 வீதியிலிருந்து இத்தாவில் அரசர்கேணி, செந்தில்நகர், தம்பகாமம், ஊடாக பளை முல்லையடிக்குச் செல்லும் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

மீள்குடியமர்வு பிரதேச அபிவிருத்திக்கு முன்னுரிமை என்று அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், சுமார் 4 மைல் நீளமான வீதியைப் புனரமைக்குமாறு இத்தாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பல தரப்பினருக்கு அறிவித்தும், இது வரை திருத்தப்படவில்லை என்றும் தெரிவித்தனர். (வ-9)

## கற்பித்தல் உபகரண தயாரிப்புக் கண்காட்சி

மட்டக்களப்பு, ஏப்.28
மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் நடன சங்கீத ஆசிரியர் பயிலுநர்களது கற்பித்தல் உபகரணத் தயாரிப்பு கல்விக் கண்காட்சி நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் கலைப்பிரிவு பொறுப்பு விரிவுரையாளர் திருமதி பி.புஸ்பலதா அன்ரனியின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை கல்லூரியின் பீடாதிபதி எஸ்.ராஜேந்திரன் ஆரம்பித்து வைத்தார். இந்தக்கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் கல்லூரி உப பீடாதிபதிகளான ரி.யுவனேஸ்வரி, எஸ்ஜெயகுமார், எம்சிஜுனைட் உட்பட கல்லூரி விரிவுரையாளர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். கண்காட்சியில் நடன சங்கீத ஆசிரியர் பயிலுநர்களது கற்பித்தல் தொடர்பான உபகரணங்கள், இது தொடர்பான ஓவியங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்காட்சி இன்று மாலை நிறைவு பெறவுள்ளது. (வ)






# இலங்கை வீராங்கனைகள் பாதுகாப்பாக நேபாளத்தில்

## விரைவில் நாடு திரும்புவர் எனத் தகவல்



யாழ்ப்பாணம் ஏப். 28
14 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான ஆசிய உதைபந்தாட்டத் தொடருக்காக நேபாள நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி நேபாளத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
பெண்களுக்கான ஆசிய உதைபந்தாட்டத் தொடருக்காக 14வயதுக்கு உட்பட்ட இலங்கை உதைபந்தாட்ட அணி நேபாளத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வந்தது.
இந்த நிலையில் கடந்த சனிக் கிழமை நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 3ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.
இதனையடுத்து நேபாளத்தில் இருந்த ஆசிய அணிகள் தத்தம் சொந்த நாடுகளுக்குப் பாதுகாப்பாக திருப்பியனுப்பப்பட்ட நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட விமான சேவை காரணமாக இலங்கை வீராங்கனைகள் தொடர்ந்தும் நேபாளத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்திலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
வீராங்கனைகள் முழுமையான பாதுகாப்புடன் இருப்பதாகவும், மிக விரைவில் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த இலங்கை அணியில் தமிழ் வீராங்கனைகளான சுரேந்திரன் கௌரி, சிவநேஸ்வரன் தர்மிகா ஆகியோர் உள்ளனர். இவர்களில் கௌரி அணியின் உபதலைவி என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி-23)

# சில்வர் லயன்ஸ் அபாரம் வீழ்ந்தது ரெட் ரைநோஸ்

அச்சுவேலி, ஏப். 28
வலி கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற 'அச்சுவேலிபிரீமியர்லீக்–2015' துடுப்பாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் ரெட் ரைநோஸ் அணியை வீழ்த்தி சில்வர் லயன்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.
கடந்த சனிக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் சில்வர் லயன்ஸ் அணியை எதிர்த்து ரெட் ரைநோஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சில்வர் லயன்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டான்சன் மற்றும் சுபேந்திரன் ஆரம்பம் முதலே அதிரடி காட்ட சில்வர் லயன்ஸ் அணியின் ஓட்ட வேகம் விரைவாக அதிகரித்துக் கொண்டு சென்றது. ரெட் ரைநோஸ் அணியின் பந்துவீச்சு வியூகங்கள் எவையும் பயனளிக்காத நிலையில் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை மட்டுமே இழந்து 69 ஓட்டங்களைக் குவித்தது சில்வர் லயன்ஸ். அதிகபட்சமாக டான்சன் தொடர்ச்சியான ஐந்து சிக்சர்கள் அடங்கலாக 43 ஓட்டங்களையும், அணியின்தலைவர் சுபேந்திரன் மூன்று சிக்சர்கள் அடங்கலாக 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.
30 பந்துகளில் 70 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்கை வெற்றிக் கனவாகக் கொண்டு களமிறங்கிய ரெட் ரைநோஸ் அணியினர் ஆரம்பம் முதலே தடுமாறத் தொடங்கினர். சீரான இடைவெளியில் இலக்குகள் சாய்க்கப்பட்டு எந்த ஒரு வீரரும் பிரகாசிக்கத் தவறிய நிலையில் 4 ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.
அதிகபட்சமாக சுப தாஸ் 12 ஓட்டங்களையும் கஜந்தன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.
பந்துவீச்சில் சில்வர் லயன்ஸ் அணி சார்பாக பகீரதன் 2 இலக்குகளையும், ஜெஹிந்தாஸ், சுபேந்திரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்ட நாயகனாக சில்வர் லயன்ஸ் அணியின் டான்சனும், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக நிதர்சனும், சிறந்த பந்து வீச்சாளராக ஜெஹிந்தாஸும் மற்றும் தொடராட்ட நாயகனாக சுபேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். பரிசளிப்பு நிகழ்வில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் நா.மகேந்திர ராசா, அச்சுவேலி தர்ஷா தமிழ் பதிப்பக உரிமையாளர் இ.தனுசன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர். (த-ரி-11)

# கபடி வெற்றிக் கிண்ணம் நெல்லியடி மத்தியிடம்



கரணவாய் ஏப். 28
பரபரப்பான ஆட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை வீழ்த்தி 15 வயதுப்பிரிவு கபடிச் சம்பியனானது நெல்லியடி மத்திய கல்லூரி.
யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கபடித் தொடர்கள் நேற்றுமுன்தினம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. இதில் 15 வயது பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்தியகல்லூரி அணியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் பலப் பரீட்சை நடத்தின. முதல் பாதியில் இரு அணியினரும் இடைவிடாது புள்ளிகளுக்காக போராடிக் கொண்டிருக்க அனல் பறந்தது.
இருப்பினும் வாய்ப்புக்களைக் கச்சிதமாகப் பயன்படுத்திய நெல்லியடி மத்திய கல்லூரி 28:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருந்தபோது ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் நெல்லியடி மத்தியின் ஆதிக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியது. இந்த நிலைமை தொடரப்படவே முடிவில் நெல்லியடி மத்திய கல்லூரி 46:32 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது.
மூன்றாமிடத்தை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலம் பெற்றுக்கொண்டது. (த-ரி-108)

# இன்றைய மோதல்

யாழ்ப்பாணம்,எப் 28
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியான 7 பேர் பங்குபற்றும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.(த-23)

# துணுக்காய் பாடசாலைகளின் விளையாட்டுக்கள் ஆரம்பம்

முள்ளியவளை, ஏப். 28
முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளன.
இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் 15,17,19 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரும், நாளை புதன்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் 15,17,19 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரும், 19 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான எறிபந்துத் தொடரும், எதிர்வரும் வியாழக்கிழமை 15 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடர் மற்றும் 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டத் தொடர் என்பன புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலய மைதானத்திலும், 17 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடர் கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்திலும், 19 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்திலும், எதிர்வரும் சனிக்கிழமை 15, 19 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான கபடித் தொடர்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (த-ரி-433)

# கிண்ணங்களை வென்ற மகிழங்குளம், சரஸ்வதி

மாங்குளம் ஏப். 28
வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் [illegible]ழங்குளம் அ.த.க. பாடசாலையும் பெண்கள் பிரிவில் சரஸ்வதி வித்தியாலயமும் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றின.
ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து சுந்தரபுரம் சரஸ்வதி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணியினர் 25:14, 25:12 என்ற செற்களில் அபார வெற்றியீட்டியது. 3ஆம் இடத்தை புதுக்குளம் மகா வித்தியாலய அணி பெற்றுக்கொண்டது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி அணியை எதிர்த்து கனகராயன்குளம் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சுந்தரபுரம் அணி 25:21, 25:20 என்ற செற்கணக்கில் வெற்றியைப் பதிவு செய்தது. 3ஆம் இடத்தை பாவற்குளம் மகா வித்தியாலய அணியினர் பெற்றுக் கொண்டனர். (ரி-422)

# நண்பர்களிடம் சென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம் ஏப். 28
அமரர் செல்லையா பத்மநாதன் (சித்த ஆயுள் வேத வைத்தியர்) ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.
இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை



எதிர்த்து வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழகம் பலப் பரீட்சை நடத்தியது. விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாமல் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா கலந்துகொண்டு கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார். (த-ரி)




# கொல்கத்தா இன்று என்ன ஆகுமோ?

நடப்பு ஐ.பி.எல். தொடரின் இன்றைய லீக் ஆட்டத்தில் கொல்கத்தா எதிர் சென்னை அணிகள் பலப் பரீட்சை நடத்தவுள்ளன. இரண்டு அணிகளுக்குள்ளும் அதிகப்படியான வாய்ப்பு உள்ள அணியாக சென்னையே காணப்படுகின்றது.

கடைசியாக நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பை 95 ஓட்டங்களால் இமாலய வெற்றிபெற்றதுடன் அனைத்து வீரர்களும் தொடர்ந்து திறனிலேயே நீடிக்கின்றனர். மக்கலம், சிமித், டோனி, டுபிளஸிஸ், ஜடேயா, ரெய்னா, அஸ்வின் என்று துடுப்பாட்டத்தில் மிகப்பலம் பெற்றிருக்கும் சென்னையை சமாளிக்க நரைன், மோர்கல், ரசல் போன்ற வீரர்கள் இருந்தாலும் இவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காரணத்துக்காக திறனின்றித் தவிப்பது அறிந்ததே. நரைன் மீண்டும் பந்தை எறிகிறார் என்ற சர்ச்சையில் சிக்கியுள்ளார். மோர்கலின் காயம்இன்றைய ஆட்டத்திலும் அவரை விடாது துரத்தலாம் எனவே துடுப்பாட்டத்தில் பலம் பெற்றிருக்கும் சென்னையைக் கொல்கத்தாவின் பந்துவீச்சு ஒன் றும் செய்துவிடாது போல தெரி கிறது.



அதே நேரம் சென்னையின் பந்து வீச்சும் கொல்கத்தாவுக்கு அச்சுறுத் தலே. குறிப்பாக நெக்ரா வேகத்தில் வித்தை காட்டுகிறார். அஸ்வின் சுழலில் கிறங்கடிக்கின்றார். ஆக மொத்தத்தில் சென்னையின் துடுப் பாட்டத்துக்கு இணங்க பந்து வீச்சும் பலம்பெற்றுள்ளது. சென்னையின் பந்துவீச்சை சமாளிக்கக்கூடிய வீரர்கள் கொல்கத்தாவிடம் இல்லா மல் இல்லை. கம்பீர், உத்தப்பா, யூசுப் பதான், சூரியக்குமார் யாதேவ் போன்ற வீரர்கள் இருந்தாலும் இவர்களால் சென்னையின் பந்து வீச்சை சமாளிக்க முடியுமா என்பது கேள்விக்குறியே! (த–ரி)

## கோடிகளில் புரள்கிறது பங்களாதேஷ் கிரிக்கெட்

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் மற்றும் 'ரி–20' தொடரை கைப்பற்றிய பங்களாதேஷ் வீரர்களுக்கு பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா வாழ்த்து தெரிவித்துள்ளதுடன் பெருந்தொகை பணத்தையும் பரிசாக அறிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரில் காலிறுதிவரை முன்னேறியதற்காக 10 மில்லியன் டாக்காவும், பாகிஸ்தான் அணியை வீழ்த்தியுதற்கு 10 மில்லியன் டாக்காவும் பரிசாக அறிவிக்கப்பட்டது. இதைவிட உலகக் கிண்ணத் தொடரில் காலிறுதி வரை முன்னேறிச்சென்ற பங்களாதேஷ் அணிக்கு சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை சுமார் 30 மில்லியன் டாக்கா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## டோனியின் இடத்துக்கு சகா



டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து இந்திய அணித்தலைவர் டோனி கடந்த வருடம் இறுதிப்பகுதியில் ஓய்வை அறிவித்திருந்தார். இதனையடுத்து டெஸ்ட்டில் டோனியின் இடத்துக்கு பொருத்தமான வீரரை தேர்வுசெய்ய இந்தியத் தேர்வுக்குழு பலமாதங்களாக படாதபாடுபட்டு வந்தது இந்த நிலையில் அந்த இடத்துக்கு சகாவை பரிந்துரைத்துள்ளார் டெஸ்ட்டின் புதிய தலைவர் கோஹ்லி.

இதுகுறித்து கோஹ்லி தெரிவித்ததாவது– 'இலக்குக்காப்பு பணியில் டோனியின் இடத்தை நிரப்புவது மிகவும் கடினமானது. ஆனால் அதற்கு விர்த்திமான் சகா தகுதியானவர் என்று கருதுகிறேன். அந்த பணி மிகவும் பொறுப்பானது. இளம் வீரரான அவர் இன்னும் 5 ஆண்டுகளுக்கு விக்கெட் கீப்பராக இருப்பார் என்று நம்புகிறேன். சகாவின் வருகையால் மத்திய வரிசைத் துடுப்பாட்டமும் பலம்பெறும்' என்றார். டோனியின் இடத்துக்கு உத்தப்பா மற்றும் டினேஸ் கார்த்திக் போன்ற வீரர்களின் பெயர்களும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## முடிவு எடுக்கும் மும்மூர்த்திகள்

நடந்து முடிந்த உலகக்கிண்ண தொடருடன் இந்திய பயிற்சியாளர் டங்கன் பிளெட்சரின் பதவிக்காலம் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து புதிய தலைமைப் பயிற்சியாளர் தேர்ந்தெடுக்கப்படவுள்ள நிலையில் புதிய பயிற்சியாளரைத் தேர்வு செய்யும் பொறுப்பு சச்சின் டெண்டுல்கர், ராகுல் ராவிட், மற்றும் கங்குலி அடங்கிய மூவர் கூட்டணியிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய பயிற்சியாளர் தேர்வினை இந்த மூவரும் மேற்கொள்ளவுள்ள நிலை யில் கங்குலி, சச்சின், ராவிட் இவர் களில் ஒருவர்தான் இந்திய அணியின் பயிற்சியாளர் என்ற செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக் கப்பட் டுள்ளது. (த–ரி)



## இரசிகர்களுக்கு மோடி அறிவுரை



உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி அரையிறுதியில் தோல்வியுற்றதை ரசிகர்கள் விமர்சித்த விதம் தன்னை வருத்தத்தில் ஆழ்த்தியதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பான 'பிரதமரின் மனதின் குரல்' என்ற நிகழ்ச்சியில் மோடி. நிகழ்த்திய உரையில் இது குறித்து தெரிவித்ததாவது:–

'ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியையும், வருத்தமளிக்கும் வேறு ஒரு தகவலையும் நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இந்தியாவின் இரண்டு பெண்கள் நாட்டுக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பது எனக்கு பெருமிதம் அளிக்கிறது. ஒரு பெண் சைனா நெஹ்வால் பாட்மிண்டன் விளையாட்டில் உலகிலேயே முதலிடம் பெற்றார், இரண்டாவது பெண் சானியா மிர்ஸா டென்னிஸ் இரட்டையர் பிரிவில் உலகின் முதல்தர நிலையை அடைந்தார். இருவருக்கும் வாழ்த்துக்கள். நாட்டின் அனைத்து பெண்களுக்கும் வாழ்த்துக்கள். நம்மவர்களின் சாகசத்தையும் சாதனையையும் நினைக்கும் போது பெருமிதம் பொங்குகிறது.

ஆனால் சில வேளைகளில் உங்களது (ரசிகர்கள்) செயற்பாடுகள் என்னைக் கவலையில் ஆழ்த்துகிறது. உலகக்கிண்ண தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் நாம் ஆஸ்திரேலியாவிடம் தோற்க நேர்ந்தது. சிலர் இந்த தோல்விக்காக நமது வீரர்களைப் பழிக்கப் பயன்படுத்திய சொற்களும், நடந்து கொண்ட விதமும், கண்ணியமானவையாக இல்லை. நாட்டு மக்களே! தோல்வியே இல்லாத ஒரு ஆட்டம் என்பது உண்டா? வெற்றியும் தோல்வியும் வாழ்க்கையின் அங்கங்கள். நமது விளையாட்டு வீரர்கள் தோல்வி காண நேர்ந்தால், இந்த சங்கடம் நிறைந்த வேளையில் நாம் அவர்களுக்கு மனோபலம் அளிக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும், அவர்களுக்கு புதிய உற்சாகம் ஊட்ட வேண்டும். இனி வரும் காலங்களில் நாம் தோல்வியிலிருந்தும் பாடம் கற்றுக் கொள்வோம். இனியாவது தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனதை வளர்த்துக் கொள்ளுவோம்.' என்றார். (த–ரி)



## விஸ்டன் விருதை வென்றார் மிதாலி

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் அணித்தலைவி மிதாலி ராஜ், நடப்பு ஆண்டுக்கான் விஸ்டன் விருதை வென்றுள்ளார். இந்த விருதை பெறும் முதல் இந்திய வீராங்கனை மிதாலி ராஜ் ஆவார். (ரி)

# டெல்லிக்கு எதிரான வரலாற்று வெற்றி


டெல்லி அணிக்கு எதிரான வெற்றி எங்கள் அணிக்கு சரியான நேரத்தில் கிடைத்திருக்கும் சரியான வெற்றி. நாங்கள் தொடர்ந்து வெற்றி பெற இந்த வெற்றி திருப்புமுனையாக இருக்கும் என நம்புகிறோம் என்று பெங்களூர் அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் 10 இலக்குகள் வித்தியாசத்தில் டெல்லி அணியை தோற்கடித்தது பெங்களூர். தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்த பெங்களூர் அணி இந்த ஆட்டத்தில் வென்றதன் மூலம் நெருக்கடியிலிருந்து ஓரளவு மீண்டுள்ளது.

ஆட்டம் முடிந்த பிறகு வெற்றி குறித்து கோஹ்லி தெரிவித்ததாவது 'டெல்லிக்கு எதிராக நாங்கள் நினைத்தபடிவிளையாடிவென்றிருக்கிறோம். நாங்கள் இனி தொடர்ந்து வெற்றி நடைபோட இந்த வெற்றி திருப்புமுனையாக இருககலாம். இது சரியான நேரத்தில் கிடைத்த சரியான வெற்றி. சகலதுறையிலும் முழுவீச்சில் செயற்பட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தோம். இப்படியொரு ஆட்டத்தை ஆடிவிட்டால் வெற்றிக்காக காத்திருக்க வேண்டியதில்லை என்பது எனக்கு தெரியும். இந்த வெற்றி அணியின் சிறப்பான செயற்பாட்டுக்கு கிடைத்த வெற்றியாகும். பந்து வீச்சாளர்கள் விரைவாக இலக்குகளை வீழ்த்தினர். களத்தடுப்பும் சிறப்பாக அமைந்தது.' என்றார். (த–ரி)







# வெளுத்து வாங்கினார் சீனா வாங்கிக் கட்டினார் ரூசே

'எக்ஸ் றீம் ரூல்ஸ்' என்றழைக்கப்படும் விசேட ரெஸ்லிங் தொடரில் ரூசேயை வென்று தொடர்ந்தும் ஐக்கிய அமெரிக்கப் பட்டத்தைத் தக்கவைத்துள்ளார் ஜோன் சீனா.
ஐக்கிய அமெரிக்கப் பட்டத்துக்காக சீனாவுக்கும் ரூசேயிற்கும் இடையில் சில காலமாக முரண்பாடுகள் இருந்து வந்தன. சில சமயங்க்ளில் ரூசே மறைந்திருந்து சீனாவைத் தாக்கவும் செய்தார். இதனால் இவர்கள் இருவருக்கும் இடையிலான முரண்பாடுகள் உச்சக் கட்டத்தை அடைந்து சங்கிலியால் இருவரும் சண்டையிடுவது என்ற முடிவுக்கு வந்தனர். இந்த நிலையில் இவர்கள் இருவருக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் ரூசேயை வெளுத்து வாங்கிய சீனா தொடர்ந்தும் தனது பட்டத்தைத் தக்க வைத்துள்ளார். இவர்கள் இருவருக்கும் இடையிலான சண்டை கிட்டத்தட்ட 40நிமிடங்கள் நீடித்தமை குறிப் பிடத் தக்கது. இதைவிட இருவர் ஒரு குழுவாக இணைந்து சண்டையிடும் ஆட்டத்தில் பட்டம் கிங்ஸ்ரனின் அணிக்கு கைமாறியது. ரோமன் ரெயின்ஸ் எதிர் பிக்ஸோவுக்கும் இடையிலான ஆட்டத்தில் ரோமன் ரெயின்ஸிம் வெற்றி பெற்றனர். (த–ரி)

## பங்களாதேஷ் –பாகிஸ்தான் டெஸ்ட் இன்று ஆரம்பம்

பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்ளைக் கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டம் இன்று பங்களாதேஷில் ஆரம்பமாகின்றது.
ஏற்கனவே நடந்து முடிந்த ஒருநாள் மற்றும் 'ரி–20' தொடர்களில் பாகிஸ்தான் எந்தவொரு வெற்றியையும் பதிவு செய்யாமல் படுதோல்வியடைந்த நிலையில் டெஸ்ட் தொடரையாவது பாகிஸ்தான் கைப்பற்றுமா அல்லது டெஸ்ட்டிலும் பங்களாதேஷின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுமா என்ற எதிர்பார்ப்புக்கள் தற்பொழுது இரட்டிப்பாக ஆரம்பித்துள்ளன. சொந்த மண்ணில் டெஸ்டிலும் பாகிஸ்தானைச் சுருட்டிவிடும் எண்ணத்தில் பங்களாதேஷ்ம் இழந்த கௌரவத்தை டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியாவது சற்றுக் காப்பாற்றும் முனைப்பில் பாகிஸ்தானும் செயற்படும் என்பதனால் ஆட்டத்தில் அனல் பறக்கப்போவதில் ஐயமில்லை. (த–ரி)



## 2 மணிநேரம் நீடித்த ஆட்டம் கிண்ணம் வென்றார் கெர்பர்

ஜேர்மனியில் நடைபெற்ற ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜேர்மனி வீராங்கனை ஏஞ்சலிக்ன் கெர்பர் கிண்ணத்தை வென்று அசத்தியுள்ளார்.
இறுதி ஆட்டத்தில் நட்சத்திர வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கியுடன் (டென்மார்க்) மோதிய கெர்பர் 3–6 என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார். இரண்டாவது செட்டில் அதிரடியாக விளையாடி புள்ளிகளைக் குவித்த அவர் 6–1 என்று எளிதாக கைப்பற்ற ஆட்டத்தில் 1–1 என சமநிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 3வது செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. இழுபறியாக நீடித்த இந்த செட்டையும் கெர்பர் கைப்பற்றினார். கெர்பர் 3–6, 6–1, 7–5 என்ற செட் கணக்கில் 2 மணி, 4 நிமிடம் போராடி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## எச்சரிக்கையுடன் கூடிய அபராதம் மலிங்கவுக்கு

நடப்பு ஐ.பி.எல். தொடரில் ஹைதரபாத் எதிர் மும்பை அணிகள் மோதிய லீக் ஆட்டத்தில் மும்பை வீரர் மலிங்கவுக்கு வீரர்கள் நடத்தை விதிமுறையை மீறியதற்காக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
குறித்த ஆட்டத்தில் மலிங்கவின் பந்துவீச்சில் ஹைதராபாத் அணியின் தலைவர் டேவிட் வோர்னர் ஆட்டம் இழந்தார். அப்போது வோர்னரிடம் மலிங்க சில வார்த்தைகளைக் கூறினார். வார்த்தைப் போரில் ஈடுபட்டதுடன் நின்றுவிடாது சைகையாலும் வோர்னரை வெறுப்பேற்றினார். இந்த நிலையில் அன்றைய ஆட்டத்துக்கு நடுவராக இருந்த றொசான் மஹாநாம மலிங்க வீரர்கள் நடத்தை விதிமுறையை மீறிவிட்டார் என்று அறிவித்து எச்சரிக்கை செய்ததுடன் அன்றைய ஆட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து 5 சதவீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (த–ரி)




வெளிவந்துவிட்டது
அதிபர்சேவை போட்டி வழிகாட்டி 2015
கடந்த கால மாதிரி வினா விடைகள்
வெளியீடு:- Sahaara Publication
சகல புத்தக சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அலுவலக வேலைவாய்ப்பு
ஆரம்ப சம்பளம்: 15000/=
V2 Travels And Tours (Pvt)Ltd.
0778668420

New Science Academy
நியூ சயன்ஸ் அக்கடமி
வதிரி நெல்லியடி
தொழில்நுட்ப பிரிவு 2017 இற்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
மு.குறிப்பு: விவசாய விஞ்ஞானம்
Agriculture Science
By:T. பிரதாப்
B.Sc in Agri (Hons) Dip in Edu

சிவப்பு மணல் விற்பனைக்குண்டு
பள்ள நிலங்களைச் சீர் செய்வதற்கும் வீட்டு அத்தி பாரங்கள் நிரப்புவதற்கும், பூங்கன்றுகள் நடுவதற்கும் உகந்த சிவப்பு நிற மணல் குறைந்த விலையில் எம்மிடம் விற்பனைக்குண்டு. இது டிப்பர் மூலம் (04 டிராக்டர் லோட்) உரிய இடத்துக்கு எம்மால் வழங்க முடியும்.
தொடர்பு: 077 649 1027, 077 940 0963
(சி/15663)(4.3.7)

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
UK Sponsor/ Settlement Visa
திருமணம் செய்து UK செல்வதற்கான ஆங்கில பரீட்சை
சித்தியடைவதற்கான உத்தரவாதம்
IELTS (Duration: 50 hrs.)
• Latest training materials. (BOOK 10)
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
Spoken English
Veta Fluency Diploma
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி. Tel.:021-226 2470
சாவகச்சேரி (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் Tel.:021-224 1970

MEGA SALE
மே 10 வரை மட்டுமே மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து விதமான அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்குத் தேவையான மர, இரும்பு, அலுமினிய, பிளாஸ்ரிக் தளபாடங்களை எங்குமில்லாதவாறு வியக்கத்தக்க விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
4200/= 3100/=
Table Fan 4000/= 3250/=
மெத்தை 3850/= 2200/=
14750/=
கையிருப்பு உள்ளவரை
6 கதிரை ரிப்போ 5500/= 4450/=
மரக்கட்டில் 9750/= 6500/=
Table Mate 2500/= 2050/=
41300/= 32900/=
kitchen rack 2100/= 1550/=
இல: 33, அரசடி வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (தட்டாதெருசந்தியில் இருந்து அரசடி வீதியில் 100m தூரத்தில்)
T.P. 076 821 9413, 076 821 9415


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.